# ஞானச்சுடர்

மாசி
பங்குனி

2022

290, 291ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**

**பொருள் :** சா வருதல் உறக்கம் வருதல் போன்றது; பிறத்தல் உறங்கி விழித்தல் போன்றது. (339)

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சி லிருந்த உயிர்க்கு.**

**பொருள் :** உடம்புகள்தோறும் குடியிருந்து வருகின்ற உயிருக்குப் புகுந்து புகுந்து செல்கின்ற உடம்பு நிலைபெறாது; ஐயோ!

(340)

---

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

## திங்கள் வணக்கம்

### கலிவிருத்தம்



தேகா திதனை மெய்யெனச் சிந்தைசெய்
மோகா திபதி யாகிய மூர்க்கனை
ஏகா திபதி நீயெனை யாளுவான்
வைகா சியெனும் மாதம் வருகவே 05

ஆனி ரைதனை மேய்க்கு மரியொடு
நானி லந்தரு நாதனுங் காண்கிலர்
வானு லாவும் மதிவைத்த அப்பனே
ஆனி மாதம் வருக வருகவே 06

பாடி யாடிப் பணியு மடியவர்
கூடிக் கூடிக் கும்பிடு வாரவர்
வாடிப் பின்னர் மகிழச்செய் வள்ளலே
ஆடி மாதம் வருகவன் பாகவே 07

பாவ ணிசெய்து பாடு மடியவர்
நாவ ணிசெய்து நிற்கும் நலஞ்சுடர்
பூவ ணிசெய்து போற்றுவார் சிந்தையில்
ஆவ ணியருள் மாதம் வருகவே 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 290



## 2022 பொருளடக்கம் மாசி


| | | |
|---|---|---|
| சைவ சமயமும் மனித... | ந. இராசரத்தினம் | 01 - 02 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 03 - 07 |
| "யோகம்" ஓர் நோக்கு | கு. சிவபாலராஜா | 08 - 12 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 13 - 15 |
| யாதுமாகி நிற்கும் இறைவன் | திருமதி ந. பரமேஸ்வரி | 16 - 18 |
| ஆலயத்தொண்டாற்றி... | மூ. சிவலிங்கம் | 19 - 22 |
| மௌனமே உலக... | கே.எஸ். சிவஞானராஜா | 23 - 25 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 26 - 27 |
| ஆணவத்தை அடக்கி... | பு. கதிரித்தம்பி | 28 - 30 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ ஜெயபாலன் | 31 - 34 |
| மானிடமும் இறையும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 35 - 36 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 - 40 |
| திருவாசகத்தில்... | முருகவே பரமநாதன் | 41 - 44 |
| பகவக்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 45 - 48 |


## சுடர் - 291 பொருளடக்கம் பங்குனி


| | | |
|---|---|---|
| வந்த வேலையைப் பார் | கு. சோமசுந்தரம் | 01 - 03 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 04 - 09 |
| சோழ இளவரசி... | ச. சஜீலன் | 10 - 16 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 17 - 18 |
| திருமாலுக்கும் பிரம்மா... | எம்.பி. அருளானந்தன் | 19 - 21 |
| ஆலயத் தொண்டாற்றி... | மூ. சிவலிங்கம் | 22 - 23 |
| கந்தபுராணமும் ஈழத்து... | த. செல்வசோதி | 24 - 31 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 32 - 33 |
| எண்ணமும் செயலும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 34 - 35 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 36 - 38 |
| கல்கி அவதார சாந்நித்தியம் | திருமதி ந. பரமேஸ்வரி | 39 - 40 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 41 - 44 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனித வாழ்க்கையில் மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை. இந்தவகையில் எமது மண்ணிலும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுச் செல்வதை நாம் பார்க்கின்றோம். இம் மாற்றங்கள் சிலபேருக்கு நன்மை அளிப்பதாகும். அதே மாற்றங்கள் சிலபேருக்கு தீமையளித்துள்ளதையும் நாம் காண்கின்றோம். உதாரணமாக அரசியல் ரீதியாக நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மூலம் பலபேருக்கு பலவகையான இழப்புக்கள் ஏற்பட்டு அதன்மூலம் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆறாமலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

இதன் காரணமாக பலபேருக்கு புலப்பெயர்வையும் அதனூடாக பொருளாதாரம் உட்பட பல சாதகமான விளைவுகளையும் உயர்வான வாழ்க்கை நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எமக்கு முன்னைய சந்ததியினர் தமது வாழ்க்கையில் மனிதநேயம் கொண்டவர் களாய் தர்ம நெறியைக் கடைப்பிடிப்பவர்களாக வாழ்ந்துள்ளனர். அத்துடன் உண்மை நேர்மை என்பவற்றைக் கடைப்பிடித்து சமூகத்தில் மற்றவர்களையும் மதித்து தமது வாழ்க்கையை நடாத்தி உள்ளனர்.

ஆத்மீக ரீதியில் நோக்கினால் எமது முன்னோர்கள் வாழும்போதே தர்மமான காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். ஏழைகளுக்கு உணவளித்தல் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும்கூட வீட்டிற்கு வெளியே தண்ணீர்த்தொட்டி அமைத்து தாகசாந்தி செய்தல், அயலவனை நேசித்தல் ஆகிய பல தர்ம காரியங்களில் ஈடுபட்டதுடன், தாம் இறந்த பின்பும் தான் செய்த தர்மமே தனக்குத் துணையாக வரும் எனும் சிந்தனையை வலுப்படுத்திச் சென்றவர்கள் ஆவர்.

இன்று இவ்வாறான பண்புகள் எல்லாம் அருகி வருகின்றன. இப் பண்புகள் குறைவடைந்து செல்வதால் மனிதநேயம் மறைந்து செல்வதுடன் மனிதன் நிம்மதியற்ற வாழ்க்கையை வாழவேண்டியுள்ளது. இத்தனைக்கும் மனிதனை நல்வழியில் போகவிடாமல் கட்டும் வலிமையுடையது ஆசையாகிய சங்கிலி. எத்தனை வந்தாலும் போதாது என எண்ண வைத்து மனிதனைப் பேயாய் அலைய வைத்து ஆட்டி வைப்பது ஆசை.

"ஆசை அறுமின், ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்" எனும் திருமூலர் வாக்குக்கு அனுசரணையாக ஒரு சிலர் இருந்தாலும் அவர்களும் காலத்திற்கேற்ற வகையில் மாறி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நல்ல சிந்தனையுள்ளவர்கள் கூட மாறி வருவது காலத்தின் கோலம் என்றே கூறவேண்டி உள்ளது. நாம் எமக்கு ஏற்படும் ஆசைகளை விடுத்து நான் பெரிது, சிறிது எனும் எண்ணத்தைவிட்டு பல தர்ம காரியங்களில் ஈடுபட்டால் அதன் பலன் பிற்கால சந்ததியையும் சமூகத்தையும் வாழ வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் தந்தவிளக்கு

சந்நிதியா னாச்சிரமம் தந்த விளக்கு – எல்லா
சாதனைகள் சோதனைகள் தாங்கும் விளக்கு
எந்நிதியுந் தந்தருளு மெம்பெருமானின் – இணை
இல்லா அற்புதங்கள் ஏந்தும் விளக்கு.

தொண்டைமா னாற்றங்கரை தோற்றும் விளக்கு – அது
சோதியான வேலவனார் தோன்றும் விளக்கு
வந்தனைசெய் யன்பருக்கு வாய்த்த விளக்கு – எங்கள்
வாணாளை வளப்படுத்தும் வன்ன விளக்கு.

அன்னமிடுந் தொண்டரையு மாக்கும்விளக்கு – பொருள்
அள்ளிவீசு மன்பருக்கு மருளும் விளக்கு
முன்னஞ் சென்று நல்லடியார் முத்தியடையவே – நின்ற
மூர்த்தியான கந்தனது முத்து விளக்கு.

செந்தமிழின் ஞானச்சுடர் திங்கள் மலரை – கற்று
சீமான்க ளானவரைச் சேர்ந்த விளக்கு
கந்தன்விளை யாடல்களைக் காட்டும் விளக்கு
கதிரவன்போல் உலகமெல்லாம் கணிக்கும் விளக்கு

ஆண்டாண்டு வந்தஇந்த ஞானச் சுடரிலே – தொடர்ந்து
அழகான கட்டுரைகள் கவிதை எழுதினோர்
பூண்டவன்பின் ஆச்சிரமப் புண்ணிய ரீந்த – இந்த
புனிதமான விளக்கினது புதுமைதா னொன்றோ!

*-முதுபெரும்புலவர் வை. க. சிற்றம்பலம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# துயர் பகிர்கின்றோம்



சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலமாக இணைந்து பணியாற்றி மறைந்த சிவத்திரு வ. குமாரசாமி ஐயா அவர்கள் எமது ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த வாராந்த வெள்ளி நிகழ்வில் தனது இசைச் சொற்பொழிவின்மூலம் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்துக் கொண்டவர். ஐயாஅவர்கள் ஆற்றிய பெரும் பணிகளைச் சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் நினைவு கூருகின்றது.

அன்னாரின் ஆத்மா சந்நிதியானின் பாதார விந்தங்களில் நிரந்தரமாக இளைப் பாற எல்லாம் வல்ல சந்நிதி வேற் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



மறைந்த மூத்த எழுத்தாளர் க. நடேசன் (தெணியான்) அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவர். எமது ஆச்சிரமத்தின் பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பை நல்கிவந்த ஒரு பெருந்தகை ஆவார். குறிப்பாக எமது ஆச்சிரமத்தினால் வெளியிடப் படும் ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களைத் தந்தும், மலருக்கு மதிப்பீட்டுரையும் வழங்கி எமது மலர் வெளியீட்டினை தொடர்ந்து முன்னெடுக்க பெரும் பங்காற்றிய பெருந்தகை இறைவனடி சேர்ந்ததையிட்டு நாம் துயரடைகின் றோம். அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதார விந்தங்களில் இளைப் பாறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| M. இந்துசேகரம் | (அவுஸ்திரேலியா) |
| சிவபாலன் சுந்தரமூர்த்தி | (சுவிஸ்லாந்து) |
| ப. பாலபவான் | (புத்தூர்) |
| திருமதி. த. சுரேந்திரநாதன் | (இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு) |
| செ. நவரெத்தினராசா J.P | (கப்பூது, குப்பிளான்) |
| ந. யோகேஸ்வரன் | (பாடசாலைவீதி, கோண்டாவில்) |
| அதிபர் | (யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்) |
| த. இராசேஸ்வரன் | (இராஜ உதயம், அல்வாய்) |
| திருமதி இ. பத்மநாதன் J.P | (உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை) |
| சி. சிவம் | (சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி) |
| வ. நந்தகுமார் | (அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு) |
| T. பாக்கியம் | (கந்தர்மடம்) |
| நா. பவளம் | (அச்சுவேலி) |
| திருமதி தேவதாஸ் தயானி | (அச்சுவேலி) |
| செல்வி குருசாமி சோதி நாயகி | (யாழ்ப்பாணம்) |
| கணேசகுலசிங்கம் துஷிகரன் | (அச்சுவேலி) |
| பொ. இராமலிங்கமூர்த்தி | (இளை. மின் அத்தியட்சகர், கரவெட்டி) |
| சி. மகாலிங்கம் J.P | (மலையன் தோட்டம், கொற்றாவத்தை) |
| சு. சிவதாசன் G.S | (புன்னாலைக்கட்டுவன் வடக்கு) |
| தலைவர், செயலாளர் | (கலைவாணி ச.ச. நிலையம், தொண்டைமானாறு) |
| உரிமையாளர் | (ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்) |
| ஐ. லோகஞானம் | (அஞ்சல் அதிபர், சுண்ணாகம்) |
| ஆ. விஸ்வலிங்கம் | (இளைப்பாறிய ஓவசியர், கல்வியங்காடு) |
| V. அரியராசா | (இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு) |
| கந்தசாமி தேவராணி | (ஆனைக்கோட்டை) |
| உரிமையாளர் | (ஸ்ரீ முருகன் தொ.தொ. நிலையம், யாழ்ப்பாணம்) |
| செ. சந்திரமூர்த்தி | (சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி) |
| சி. பஞ்சலிங்கம் | (ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு) |
| செ. தேவேந்திரா | (ஒஸ்காவீதி, உரும்பராய்) |
| இராசரெட்ணம் வசந்தன் | (ஊரெழு மேற்கு சுண்ணாகம்) |
| இ. குமாரதாசன் | (இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| R. குலசிங்கம் | (இளை. அதிபர், கோண்டாவில்) |
| N. K. தங்கராசா | (இளை. தபாலதிபர், புலோலி) |
| இ. பாலகிருஷ்ணன் | (முகமாலை) |
| உரிமையாளர் | (நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி) |
| செ. செல்வரெத்தினம் | (இளை. அதிபர், சுன்னாகம்) |
| த. விவேகானந்தன் | (சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை) |
| இ. ஜெயபாலன் | (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) |
| மா. ந. பரமேஸ்வரன் | (கந்தசுவாமி கோவிலடி, இணுவில்) |
| பா. கேதீஸ் | (உரும்பராய்) |
| S. ஈஸ்வரன் | (டச்சுவீதி, சித்தங்கேணி) |
| ச. மதனகுமார் | (சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்) |
| கெ. தவராசா | (விவேகானந்தர் வீதி, இணுவில்) |
| வி. ந. ஸ்ரீதரன் | (இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்)) |
| செ. செல்விகா | (நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்) |
| அ. கருணானந்தன் | (மானிப்பாய்) |
| வே. மதிபாலசிங்கம் | (செட்டியதெரு, கரவெட்டி) |
| நா. முருகையா | (ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்) |
| செல்வராசா பொன்னுத்துரை | (கரந்தன், நீர்வேலி) |
| விஸ்வலிங்கம் குகலிங்கம் | (பண்ணாகம், சுழிபுரம்) |
| மா. தேவகுரு | (செட்டிவளவு லேன், இணுவில்) |
| சசிகரன் கௌதமன் | (அச்சுவேலி) |
| செ. பாலச்சந்திரன் | (கொக்குவில் மேற்கு, கொக்குவில்) |
| இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்) | (நெல்லியடி, கரவெட்டி) |
| தி. பாலசுப்பிரமணியம் | (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்) |
| மா. விஸ்வநாதன் | (புத்தூர்) |
| நாகன் கிருஸ்ணபிள்ளை | (கோண்டாவில்) |
| சி. கந்தையா | (சுன்னாகம்) |
| K. விஷ்ணுமோகன் | (உரும்பராய் கிழக்கு) |
| பொ. சிற்றம்பலம் | (கொடிகாமம்) |
| ச.க. தம்பு | (அல்லாரை, மீசாலை) |
| சிதம்பரநாதன் ஸ்ரீகரன் | (புத்தூர்) |
| நாகராசா சாந்தி | (அச்சுவேலி) |
| க. ரட்ணேஸ்வரன் | (இளை. அதிபர், சங்கானை) |
| க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள் | (ஆனைக்கோட்டை) |
| திருமதி விஜயலட்சுமி இராசநாயகம் | (வட்டுக்கோட்டை) |
| திருமதி செல்வநாயகம் | (வடலியடைப்பு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| R. கிருஸ்ணசிவம் | (அவுஸ்திரேலியா) |
| இ. சங்கரலிங்கம் | (அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு) |
| இராமசாமி திருச்செல்வம் | (தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்) |
| அ. வரதராசா | (வரியப்புலம் வீதி, சுண்ணாகம்) |
| வே. நடராசா | (தும்பளை மேற்கு) |
| சி. கிருஷ்ணபிள்ளை J.P. | (ஆவரங்கால்) |
| பொதுமுகாமையாளர் | (வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி) |
| பொதுமுகாமையாளர் | (பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி) |
| சி. குமாரலிங்கம் | (இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்) |
| செ.க. செல்வநாயகம் | (செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்) |
| திருமதி சு. செல்வக்குமார் | (மாநகரசபை, யாழ்ப்பாணம்) |
| அதிபர் | (சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை) |
| சு. சோமாஸ்கந்தமூர்த்தி | (சித்தங்கேணி) |
| யோ. சிவஉமாகரன் | (உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்) |
| திருமதி தயாநிதி பாலசுந்தரம் | (தெல்லிப்பழை) |
| ந. கணேஸ்வரமூர்த்தி | (கரவெட்டி) |
| ச. தங்கராசா J.P. | (ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு) |
| க. மணியன் | (புத்தூர்) |
| வ. துரைராசா | (ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு) |
| சி. தவலிங்கம் | (பருத்தித்துறை) |
| சபா இரத்தினசிங்கம் J.P. | (சபா றேடர்ஸ், அச்சுவேலி) |
| V. பரமானந்தம் | ((முன்னாள் பொது முகாமையாளர் - தொண்டைமானாறு) |
| K. கேதீஸ்வரநாதன் | (புன்னாலைக்கட்டுவன் தெற்கு) |
| சு. மகேஸ்வரன் | (மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்) |
| தம்பிப்பிள்ளை குணரட்ணம் | (சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி) |
| S. திருவாஞ்சீஸ்வரன் | (V.S.K. மானிப்பாய்) |
| த. விவேகானந்தராசா | (டச்றோட், சித்தங்கேணி) |
| அ. கோணேஸ்கரன் | (தில்லையம்பதி, கோண்டாவில்) |
| இ. சந்திரசேகரன் | (மாசியப்புலம் வீதி, ஏழாலை) |
| ஜெ. ஜெயப்பிரதாப் | (சாவகச்சேரி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சி. அழகேசன் | (வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்) |
| க. தர்மநாயகம் | (மஞ்சத்தடி, இணுவில்) |
| பொ. ஞானப்பிரகாசம் | (கரணவாய் தெற்கு) |
| உரிமையாளர் | (கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி) |
| இ. வீரசிங்கக்குருக்கள் | (கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு) |
| அதிபர் | (கம்பர்மலை அ.த.க. பாடசாலை) |
| அதிபர் | (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி) |
| திருமதி சி. தருமலிங்கம் | (இமையாணன், உடுப்பிட்டி) |
| கனகலிங்கம் சந்திரவாசன் | (நீர்வேலி) |
| கி. அருள்நாதர் | (பாலாவி தெரு, பொலிகண்டி) |
| சரோஜினிதேவி மாணிக்கராசா | (வறாத்துப்பளை, பருத்தித்துறை) |
| கந்தையா காசிராசா | (குப்பிளான் தெற்கு) |
| மார்க்கண்டு முத்துப்பிள்ளை | (அத்தியடி, யாழ்ப்பாணம்) |
| க. விக்னேஸ்வரராஜா | (புலோலி) |
| லலிதா சண்முகலிங்கம் | (திருமகள் வீதி, அரியாலை) |
| சி. விவேகானந்தம் | (பருத்தித்துறை) |
| சி. நாகரூபன் | (கரணவாய்) |
| K. பிரதீபன் | (யாழ்ப்பாணம்) |
| ஐ. காளிங்கநடனம் | (கொக்குவில்) |
| பா. சிவதர்ஷினி | (கலையகம், அல்வாய்) |
| க. ஜெயபாலகணேசன் | (சிறுப்பிட்டி தெற்கு) |
| Dr. அ. செந்தில்குமரன் | (பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை) |
| இ. பாஸ்கரன் | (நல்லூர், யாழ்ப்பாணம்) |
| த. சிவானந்தமூர்த்தி | (புத்தூர்) |
| சி. பத்மகுமார் | (இணுவில் தெற்கு) |
| அதிபர் | (இமையாணன் அ.த.க. பாடசாலை) |
| பா. சுதாகரன் | (கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்) |
| வ. கெங்கநாதன் | (நீர்வேலி) |
| P. நடராசா | (கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி) |
| சி. சிவகுமார் | (ஆவரங்கால்) |
| S. முரளிதரன் | (அச்சுவேலி) |
| V. கருணாகரன் | (சங்கானை) |
| ச. சிவலிங்கம் | (மானிப்பாய்) |
| சண்முகம் தனலட்சுமி | (கரணவாய்) |
| வ. இரத்தினசிங்கம் | (கம்பர்மலை) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயமும் மனித மேம்பாடும்

**– திரு ந. இராசரெத்தினம்** அவர்கள் –

இறைவன் உலகத்தையும் மக்களையும் சகல உயிர்களையும் ஏனைய ஜீவராசிகளையும் படைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய அனைத்தையும் ஏற்படுத்தி வழிநடத்தி இப் பிரபஞ்சத்தை செயற்படுத்தி வருகின்றார்.

இறைவன் உலகத்திலே பல சமயங்களையும் தோற்றுவித்ததுடன் பல அவதாரங்களையும் காலத்திற்குக் காலம் இப் புண்ணிய பூமியில் அவதரிக்கச் செய்து ஆன்மா இறைவனை அடைவதற்கு பல மார்க்கங்களையும் ஏற்படுத்தியுள்ளார். அந்தவகையில் ஏனைய சமயங்கள் தோன்றுவதற்கு முன்பே அநாதியான சைவ சமயம் சிந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிக காலம் தொடக்கம் இன்று வரை பல ஞானிகளாலும் முனிவர்களினாலும் எழுதாமறையாகப் போதிக்கப்பட்ட நான்மறை வேதங்களின் ஊடாகவும், உபநிடதங்கள் மூலமாகவும் மனிதன் மேம்பாட்டு வளர்ச்சிக்காக உபதேசிக்கப்பட்டுள்ளது.

மனிதன் இப் பூவுலகில் பிறக்கும் போது அவர்கள் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப பிறவியெடுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு எமது சைவ சமயத்திலுள்ள இதிகாசங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், அறநூல்கள், பதினெண் புராணங்கள், தோத்திரங்கள், வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் வழிகாட்டி நூல்களும் எங்களுக்கு உதவியாயிருக்கின்றன. மக்கள் இறைவனை வழிபடுவதற்கு அவர்களின் பக்குவநிலைக்கேற்ப அருவம், உருவம், அருவுருவத் திருமேனியூடாக வழிபடுகின்றனர். சாதாரண மக்கள் இறைவனை உருவ வழிபாட்டின் மூலமே வழிபடுகின்றார்கள். மேலும் இறைவன் மக்களின் வழிபாட்டிற்காகவும் மக்களின் தெய்வீகச் சிந்தனையை ஏற்படுத்தி தெய்வீக நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக தான்தோன்றீஸ்வரராக பல இடங்களில் சுயம்புலிங்கமாகக் காட்சி கொடுத்து அந்த இடங்களில் ஆலயம் அமைத்து மக்கள் வழிபட்டு வருகின்றார்கள். உதாரணமாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், ஒட்டிசுட்டான் சிவன் ஆலயம், மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயங்களும் உள்ளது. முருகனின் வேல்பாய்ந்த மண்டூர், திருக்கோயில், உகந்தை, கதிர்காமம், வெருகல் போன்றனவும் பிரசித்திபெற்ற ஆலயங்களாகும்.

சைவசமயத்தில் வேதங்கள் உபநிடதங்களை அடிப்படையாகக்கொண்டு நால்வகை நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களை மக்கள் தங்களின் மனப்பக்குவங்களுக்கேற்ப கடைப்பிடித்து அதில் செயற்பட்டு இறையருளைப் பெற்று மனித மேம்பாடுபெற்று மனநிம்மதியுடன் சிறப்பாக வாழ்கின்றார்கள்.

மேலும் மன ஒருமைப்பாட்டிற்காக ஐம்புலன்களை ஒருநிலைப்படுத்தி தியானம், பிராணாயாமம் போன்ற யோகப் பயிற்சிகளையும் செய்து அதனூடாக இறைவனின் திருவருளைப் பெறுவதுடன் பல சித்திகளையும் பெற்று நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கேற்ப பல நோய்களிலிருந்து விடுபட்டு நிம்மதியாக சந்தோஷமாக வாழ்வதை நம் கண்ணாரக் காண்கின்றோம். அது மட்டுமல்ல எமது சைவசமயத்தில் மனித

*திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடல் என்பதிலே வெற்றி தங்கியுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பாட்டிற்காகவும் புலனடக்கத்திற்கும் மேலும் இறைவனிடத்தில் சில கோரிக்கை களையும் வைத்து விரதமிருந்து ஆலயங் களுக்குச் சென்று இறைவனை வழிபடு வதினாலும் தமது உள்ளத்தில் உறைகின்ற இறைவனின் பேரொளியை பெருக்கி உவப் பில்லாத ஆனந்தமான இறைவனின் திருவரு ளைப் பெற்று தங்களது மனத்தை மேம் பாடடையச் செய்கின்றார்கள். அத்துடன் பல தான தர்மங்களையும் செய்து மனதில் அன்பை வளர்த்துக்கொள்கிறார்கள்.

எமது சமயத்தில் மக்களின் இறை வழிபாட்டிற்கு ஆலயங்களை அமைத்து அங்கு நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து இறைவனின் திருவருளைப் பெற ஆலய நிர்வாகங்கள் செயற்பட்டு வருகின்றன. இதில் மகோற்சவ காலங்களில் திருவிழாக் கள் நடைபெற்று இறைவன் உள்வீதி, வெளிவீதி வலம் வரும்போது மக்கள் கை கூப்பி அரோகரா என நாமம் ஜொலிக்க பக்திப் பரவசத்துடன் பஜனைகள் பாடவும் பெண்கள் கற்பூரச்சட்டி ஏந்தியும் ஆண்கள் பிரதட்சணம் செய்தும் பக்திப் பரவசத்துடன் மனதைக் கட்டுப்படுத்தி இறைவனை வணங் கும் காட்சி எல்லோருடைய மனதையும் உருக்கக் கூடியதாக இருக்கும். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளான ஓமம் வளர்த்தல், கும்பம் சொரிதல், அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, நைவேத்தியம் போன்ற கிரியை களைக் கண்டும் அதில் தங்களின் மனதை இறைவன்பால் செலுத்தியும் இறைவனை வணங்கும்போது எமக்கு மன ஒருமைப்பாடு ஏற்படுகின்றது.

மேலும் நாயன்மார்களும் பல சைவ அடியார்களும் பல ஆலயங்களுக்கு தல யாத்திரை கால் நடையாகச் சென்று பதிகங் கள் பாடிப் பல அற்புதங்களைச் செய்தமை யினால் எமது சைவ அடியார்களும் கால் நடையாக யாத்திரை சென்று இறைவனைத் தரிசிக்கின்றார்கள். சிறப்பாகக் கதிர்காமக் கந்தனுடைய யாத்திரை சிறப்பு வாய்ந்தது. அக்காலப் பகுதியில் அடியார்கள் தங்களது வீடு வாசலை மறந்து உற்றார் சுற்றத்தாரை மறந்து முருகனின் நாமத்தைப் பாடி யாத் திரை சென்று இறுதியாக மாணிக்க கங்கை யில் தீர்த்தமாடி தாங்கள் செய்த பாவங் களைப் போக்கி மனநிறைவடைகிறார்கள்.

எனவே நான் முன்பு குறிப்பிட்ட சில சைவசமய கோட்பாடுகளையும் தத்துவங் களையும் கடைப்பிடிப்பதினால் இறைவனது அருளும் ஆசியும் கிடைப்பதுடன் மனநிறைவு அடைந்து மனிதன் மனிதனாக வாழ்ந்து இறைபதம் அடையக்கூடிய மனித மேம்பாடு கிடைக்கும் என்பது உண்மை.

வள்ளுவப் பெருந்தகையின்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் திருக்குறளை நினைவூட்டி சைவமும் தமிழும் தளைத்தோங்க அனைவரும் செயற்பட்டு இறைபதம் அடைவோமாக எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

பக்தியின் உண்மையான இயல்பு பரிபூரண சரணாகதி. அது இல்லை என்றால் பக்தி உயிரற்றதாகி விடுகிறது. உன்னுடைய சுயநலத்தையும், அகங்காரத் தையும் இறைவனிடம் சமர்ப்பிக்கவில்லையென்றால் அவர் உன் பிடியில் அகப்பட மாட்டார்.

*வெற்றி என்னும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம்தான் தன்னம்பிக்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

(தொடர்ச்சி...

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
-சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்-
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

147. மன்னவ னேயொன்று மாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ னேயிம் முழுதையுமே.

**ப-ரை:**

மிக்க வேதம் மெய் நூல் சொன்னவனே- உயர்வினையுடைய அறிவு நூலாகிய வேதத்தையும் தத்துவ நூலாகிய ஆகமத்தையும் சொல்லியருளியவனே, சொல்கழிந்தவனே- சொற்களால் இப்படிப்பட்டவன் என்று சொல்லமுடியாமல் அப்பாற்பட்டவனே, கழியா தொழும்பர் முன்னவனே- எக்காலத்தும் நீங்குதலில்லாத அணுக்கன் தொண்டர்க்கு முன்னின்று அருள் செய்பவனே, பின்னும் இம்முழுதையும் ஆனவனே- அன்றி இவ்வுலகங்கள் முழுதையும் தோற்றுவித்து அவை முழுவதிலும் கலந்துள்ளவனே, மன்னவனே- நிலைபேறுடையவனே, ஒன்றும் ஆறு அறியா சிறியேன்- நின்னொடு கலக்கும் நெறியை அறியாத சிறுமையுடையேனது, மகிழ்ச்சி மின்னவனே- இன்பத்தில் மின்னல் போன்றவனே, விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வேத மெய்ந்நூல் சொன்னவனே, சொற்கழிந்தவனே, தொழும்பர் முன்னவனே, பின்னும் இவ்வுலகங்கள் முழுதையும் தோற்றுவித்து அவை முழுவதிலும் கலந்துள்ளவனே, மன்னவனே, நின்னொடு கலக்கும் நெறியை அறியாத சிறியேனது இன்பத்தில் மின்னல் போன்றவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மன்னவன்- நிலைபேறுடையவன். மன்- நிலைபேறு. ஒன்றுதல்- இரண்டறக் கலத்தல். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபோது அடிகளுக்கு உளதாகிய மகிழ்ச்சி இறைவன் பிரிவால் மின்னல் தோன்றி மறைவதுபோல நீங்கினமையின் "சிறியேன் மகிழ்ச்சி மின்னவனே" என்றார். மகிழ்ச்சி நீங்கினமட்டில் அமையாது துன்பமும் உளதாதல், மின் தோன்றி மறையும்போது நமது கண்களில் முன்புள்ள சிற்றொளியும் குன்றி இருளாதலின் அறியப்படும்.

மிக்க என்ற அடை வேதநூலுக்கும் மெய்ந்நூலுக்கும் பொது. வேதநூல் பொதுவாகிய அறிவு நூல்; மெய்ந்நூல்- சிறப்பாகிய தத்துவ நூல்; என்றது ஆகமத்தை. சொன்னவன் என்பதற்கு இயற்றினவன் எனவும் இயற்றியதை விளங்க எடுத்துரைத்தவன் எனவும் பொருள் கொள்க.

*தோல்வியிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அதுதான் உண்மையான தோல்வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேத முதல்வன்" ஞான 32:4.
"வேதமெல்லாம் முறையால் விரித்தோத நின்ற வொருவனார்" ஞான 135:6.
"வேதத்தோ டாறங்கம் சொன்னார்" நாவு 234:2.
"வேதனாய் வேதம் விரித்திட்டானே" நாவு 257:4.
"செழுமறை பகர்ந்த பட்டனே" சுந் 69:9.
"அங்கங்களும் மறைநான்குடன் விரித்தான்" சுந் 71:3.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

"வேதங்கள் மொழிந்த பிரான்" காரைக்கால் 18.

எனப் பெரியபுராணத்தும் வருவன காண்க.

வேதநூலும் மெய்ந்நூலாகிய ஆகமநூலும் இறைவன் இயற்றி உபதேசித்தருளினன் எனக் கூறுங்கால் வேதநூல் அன்றி ஆகமநூல் ஒன்றே அமையாதோ என்பார்க்கு, உலகத்து வாழும் மக்கள் தானதவம் என்னும் இருவகை நெறிபற்றி ஒழுகுவாராதலின் தான நெறிக்கண் உள்ளார்க்கு வேத நூலும் தவநெறிக்கண் உள்ளார்க்கு ஆகமநூலும் வேண்டற்பாலனவாம் என விடையிருக்க.

சொற்கழிந்தவன்- வாக்குக்கு எட்டாதவன்

"சொற்பதங் கடந்த தொல்லோன்" அண்ட 40,11.
"சொற்பதங் கடந்த அப்பன்" அச்சப் 6.
"சொல்லும் பொருளும் இறந்த சுடர்" புணர்ச்சிப் 4.
"சொல்லுதற்கரிய ஆதியே" கோயில் 9.

என அடிகள் பிறவிடங்களிலும் அருளியமை காண்க.

"சொல்லினை இறந்தார்" நாவு 49:1.
"சொற்பதமும் கடந்து நின்ற எம்மான் காண்" நாவு 277:10.
"சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொல்லற்கரிய சூழலாய்" நாவு 308:4.

என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. சொற்கழிந்தவனே என்றதனால் இயைபுபற்றி மனத்துக்கும் எட்டாதவன் என்பதும் கொள்ளப்படும். "மாற்றமனங் கழிய நின்ற மறையோனே" (சிவபுரா 46) என அடிகள் அருளியமையுங் காண்க.

கழியாத் தொழும்பர் என்றது இறைவனை விட்டு நீங்காத அணுக்கன் தொண்டர்களாகிய மெய்யடியார்களை. பின்னும் என்றது அன்றியும் என்ற பொருளில் வந்தது. இம்முழுதையும் ஆனவனே என மாறிக்கூட்டி, இம்முழுதையும் என்னும் இரண்டாவதற்கு முடிக்குஞ் சொல்லாக ஆக்கி என ஒரு சொல் வருவித்து ஆனவனே என்பதற்கு ஆக்கிய இவ்வுலகம் முழுதிலும் நிறைந்து நின்றவனே எனப் பொருளுரைக்க. இ என்னுஞ் சுட்டு கட்புலப்படும் சிதசித்துப் பிரபஞ்சங்களைச் சுட்டியது.

இதன் கண், "ஒன்றுமா றறியாச்சிறியேன் மகிழ்ச்சி மின்னவனே விட்டிடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 43.

*சரியான பாதையைத் தேர்ந்தெடுத்தால்த்தான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. முழுதயில் வேற்கண் ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே.

**ப-ரை:**

எம்பிரான்- எங்கள் தலைவனே, முழுது அயில் வேல் கண்ணியர் என்னும் மூரி தழல் முழுகும் விழுது அனையேனை- முழுவதும் கூர்மையுடைய வேல் போலும் கண்களையுடைய மகளிர் என்று சொல்லப்படும் வலிய நெருப்பில் அமிழ்ந்து போகும் நெய்யைப்போல் அழிகின்ற என்னை, விடுதிகண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். நின் வெறி மலர் தாள் தொழுது செல்- நினது நறுமணம் கமழும் தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தொழுது கொண்டு நின்னுடன் செல்கின்ற வான தொழும்பரில் கூட்டிடு- உயர்வுடைய அணுக்கன் தொண்டர் கூட்டத்தோடு என்னைச் சேர்த்தருளுதி, சோத்து- நினக்குத் தாழ்மையான வணக்கம்; உடையாய்- என்னை ஆளாகவுடையவனே, பாடுவன்- உன் பொருள் சேர் புகழ்களைப் பாடுவேன்; பழுது செய்வேனை விடேல்- பிழை செய்வேனாயினும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும்.

எம்பிரான், மகளிர் என்னும் வலிய நெருப்பில் அமிழ்ந்து போகும் நெய்யைப்போல் அழிகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் நின் திருவடிகளைத் தொழுதுகொண்டு நின்னுடன் செல்கின்ற தொழும்பரில் என்னைச் சேர்த்தருளுதி, நினக்குத் தாழ்மையான வணக்கம்; உடையாய், உன்னைப் பாடுவன்; பிழை செய்வேனாயினும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அயில் வேல்- கூர்மையையுடைய வேல், "அயிற் குல வேல்" திருக்கோவை (36). வேற்கண்- வேல் போலும் கண். அடிகள் மகளிர் கண்ணுக்கு வேலை உவமை கூறுதலை, "கைவேற்கண் புதைத்துப் பொன்னே" (43), தெளி சென்ற வேற்கண் வருவித்த செல்லலெல்லாம்" (50), "முரிபுருவ வடிக்கலர் வேற்கண்ணி" (291), "வேற்பொலி கண்ணி" (368) என்னும் திருக் கோவையாரினும் காண்க. அயில் வேற்கண்ணியர் என மகளிரைக் கூறியது அவர் தமது கூர்மையையுடைய வேல்போலும் கண்நோக்கத்தால் ஆடவரைப் பிணிக்கவல்லார் என்பது தோன்ற.

"ஈர்க்கிடை போகா இளமுலை மாதர் தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்" போற் 34-5.

என அடிகள் அருளியிருத்தலும்;

"நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு" கலி 93:23.

எனப் பிறர் கூறியிருத்தலும் ஈண்டறியற்பாலன.

மூரி- வலி. தழலுக்கு வலியாவது தான்பற்றிய பொருளை அழித்தல், தழலில் முழுகும் நெய் உருகி அழிதல் போல மகளிராகிய நெருப்பிற்பட்டு அழிகின்றேன் என்பார். "கண்ணியர் என்னும் மூரித்தழல் முழுகும் விழுதனையேனை" என்றார். விழுது- நெய்; வெண்ணெயுமாம்.

இறைவனது மலர்போலும் திருவடிகள் தொழும்பர்க் கனிய வாய்த் தெய்வமணம் கமழ்தல் பற்றி "வெறிமலர்த்தாள்" என்றார். வெறியார் கழல் வீழ்சடைத் தீவண்ணன் சிவன்" (256)

*முடியாது என்பதைப் பிறகு சிந்தியுங்கள். எப்படி முடிப்பது என்பதை எப்பொழுதும் சிந்தியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருக்கோவையாரினும் அடிகள் அருளியமை காண்க. தாள் தொழுது செல் தொழும்பர் என இயையும். வனத் தொழும்பர் உயர்வினையுடைய தொழும்பர்- வான்- உயர்வு. "வான் வார்கழல் பாடி" (திருவெம் 6) வாசனாமலம் பற்றறுதற்கும் கதியடைதற்கும் தொண்டரிடை யிருத்தல் ஏதுவாகலின் தொண்டரிற் கூட்டிடு என வேண்டுவராயினர்.

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" (1)

எனக் கோயின் மூத்த திருப்பதிகத்தும்

"குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்" (8)

எனச் செத்திலாப்பத்தினும் அடிகள் அருளியமை காண்க.

சோத்தம் இழிந்தார் செய்யும் அஞ்சலி. அது சோத்து எனக் கடைக் குறைந்து நின்றது. "சோத்தெம்பிரானென்று சொல்லிச் சொல்லி" (பொற் 8) என்புழிப்போல; எம்பிரான் என்றார். யான் உன்னடியன் என்பது தோன்ற. இறைவன் சோத்தம் உன்னடியம் என்றோரை உயர வைத்தல், சோத்துன்னடியம் என்றோரைக் குழுமித் தொல்வானவர் சூழ்ந்து ஏத்தும்படி நிற்பவன்" (173) எனத் திருக்கோவையாரில் அடிகள் அருளியவாற்றானுமறிக.

பழுது- குற்றம். "பழுதில் தொல்புகழான் பங்க" (வாழாப் 10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "செயிர் புகர் பழுது ஏதமாசு..... குற்றமாகும்" எனத் திவாகரத்து (பண்பு) வருதலுங் காண்க. குற்றம் ஈண்டு மனமொழி மெய்கள் இறைவன்பால் நில்லாது புறம் போந்தமை. "பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்துள்ளம்" (அடை 8), "சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங் கிருள்புரி யாக்கையிலே கிடந்தெய்த்தனன்" (அடை 5) என அருளியமை ஈண்டைக்கேற்ப அறியற்பாலன என்னை ஆட்கொண்ட நீ யான் செய்யும் பழுதினைப் பொறுத்து விடாதொழிதல் வேண்டும் என்பார் "பழுது செய்வேனை விடேல்" என்றார்.

உனைப்பாடுவன் என்பதற்கு பழுது செய்வேனாயினும் உன்னைப் புகழ்ந்து பாடுதல் ஒழியேன்; அதனால் என் பிழைக்கிரங்கிக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது கருத்தாகக் கொள்க. மற்றைத் தொண்டுகளிலும் பாடற்றொண்டு சிறப்புடைத்தென்பதும் அத்தொண்டினைச் செய்யும் வாக்கும் மனமும் இறைவன்பால் ஈடுபடும் என்பதும் அதனால் பெரும் பயன் உண்டாம் என்பதும் பற்றியே அடிகள் பிறிதோரிடத்து

"தானேவந் தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடு" (திருவெம்பா 6)

எனப் பாவை நோன்பு நோற்கும் மகளிர் கூற்றில் வைத்துக் கூறியிருத்தலும் காண்க. அடியார்கள் இறைவனைப் பாடுதலையும் அதனால் அவர் அடையும் பேற்றினையும்

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன்"
(ஞான 179:8)

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி"
(ஞான 179:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்பகத்தைப் பண்களார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே"

(ஞான 240:2)

"அளகத் திருநல் நுதலிபங்கா அரனே யென்
றுளகப்பாடும் அடியார்க்குறுநோ யடையாவே"

(ஞான 102:3)

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவற்றானும் அறியலாம்.

இதன் கண், முழுதயில் வேற்கண்ணியர் மூரித்தழல் முழுகும் விழு தனையேனை விடுதிகண்டாய், விழுத்தொழும்பாற் கூட்டிடுதி கண்டாய்; பழுது செய்வேனை விடேல் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலப்படுதல் காண்க. 44.

(தொடரும்...

## ஒரு கொடியின் கீழ்வர உதவு தாயே!

ஒன்றாயிருக்க முடியவில்லை தாயே
ஒன்றாய்க்கேட்க முடியவில்லை தாயே
ஒற்றுமையோ போய்விட்டது தாயே
ஒருவராலும் காப்பாற்ற முடியவில்லையே.

ஒரு வீட்டில் இருந்தவர்களா இப்படி
ஒவ்வொருவரும் தலைவர்களாகி விட்டனர்
இது எங்கேபோய் முடியப்போகுதோ தாயே
இந்த மண்ணுக்கு இனி விடிவே இல்லையா?

இந்தப் போக்கு நல்லதுக்கு இல்லை தாயே
ஈழம் வந்துவிட்டால் இங்கு எப்படி இருக்கும்?
சொந்த பந்தம் யாருக்கும் இருக்காது தாயே
சோதிக்க விரும்பினால் கொடுத்துப்பாரு தாயே!

கொழும்பு எம்மைப் பார்த்துச் சிரிக்காதோ தாயே
கூத்துப் பார்க்கிறது உலகம் எம்மை,
எழும்பி நிற்கவோ எவராலும் முடியவில்லையே அம்மா,
இனியாவது ஒற்றுமையாய் ஒரு கொடியின் கீழ்வர உதவு தாயே.

தேரோடிக் களைத்தனையோ இவற்றை நினைந்து
தீர்த்தமாடத் துர்க்கையே தெரிந்துவா
தீராக் கோபம் போராகவே முடியும் தெல்லியில்
தீர்த்தமாடித் துர்க்கையே தீர்வுக்கு வழி புரிவாய்.

- தில்லை சிதம்பரவேணி -

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம் தட்டிக்கொடுப்பது மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யோகம்" ஓர் நோக்கு

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

அட்டாங்க யோகம் என்பது யோக சாதனைகளில் தலைசிறந்ததோர் மார்க்கம் ஆகும். பிராணயாமம் என்பது இதன் ஓர் முக்கிய அங்கமாகும். யோகம் செய்வதற்கு உடல் உள மற்றும் ஒழுக்கத் தகுதிகள் இன்றியமையாதன. நமது புலன்களை அடக்கும் நிலையையே "இயமம்" என திருமூலர் வகைப்படுத்தி அருளியுள்ளார். இதன் வழியே நல்ல செயல்களைச் செய்யும் தகுதியை யோகியானவர் அடைகின்றார். எனவே, தீதகற்றலும், நன்றாற்றலும் யோக சாதனையில் முதல் இரு முக்கிய அங்கங்கள் ஆகும். பிராணாயாமம் என்பது நமது சர வோட்டமாகிய (சாதாரண மூச்சு) மூச்சு விடுவதினின்றும் வேறுபட்டது. பிராணாயாமம் ஓர் பொறிமுறையாகும். இப் பொறிமுறை இன்றேல் யோகம் சித்தியடைய முடியாது உள்ளது.

பிராணாயாமத்தினால் அண்டத்திலுள்ள பிராணவாயுவானது, நமது பிண்டத்தினுள்ளே சென்று, சிறிது சேமிக்கப்பட்டபின் மிகுதி வாயு வலமூக்கு வழியே வெளியேறுகின்றது. இவ்வாறு உள் எடுக்கப்பட்ட பிராண வாயுவினால் நமது உடல் தூய்மை பெறுகின்றது. பிராண வாயு நமது இரத்தத்தில் உள்ள கரியமாகிய அழுக்குகளை அகற்றி நம்மைப் புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது. நமது உள்ளம் மற்றும் உடலியல் அடிப்படையில் அமைந்த ஓர் இலகுவான முறையே யோகமாகும். இதன் மூலம் பிராணவாயுவில் உள்ள அணுக்கள் உடலில் உயிரோட்டமாக மாற்றப்படுகிறது. இதுவோர் உருமாற்றமாகும். இது மூளையைப் புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது. உடல் மாற்றம் அல்லது முதுமையடைதல் என்பது, உடல் தேய்வடைதல் வளர்ச்சி அடைதல் ஆகிய இருவித தன்மைகளில் அடங்கியுள்ளமை கவனிக்கத்தக்கது. நமது உடலானது தினமும், தோல் படைகள் உரிவடைவதன்மூலம் அழிவடைந்துகொண்டு செல்வதைக் காணலாம். இதனால் இளமைக் காலத்தில் நமக்கு அளிக்கப்பட்டிருந்த உடலானது தேய்ந்து இன்றுவரை அது ஒரு புதிய உடலாக மாறிவிட்டிருப்பது உண்மையே. உடலின் ஒவ்வொரு பகுதியும் உறுப்புக்களும் இவ்விதம் அழிவடைகின்றது. அதேபோல், நமது உடல் தினமும் வளர்ந்துகொண்டே இருக்கின்றது. உடல் தேயும்போது அதன் வளர்ச்சியும் ஒன்றையொன்று போட்டியிடுவது போல் நடைபெறுகிறது. பிராணவாயு உடலுட் செல்வதால் அது உயிரோட்டமாக மாற்றம் அடைந்து நமது உடல் அழிவையும், வளர்ச்சியையும் சமப்படுத்துகின்றன. இதனால்த்தான் நமது உடல் இருந்தபடியே (இளமை) நிலைத்து நிற்கும் இயல்பினை யோகத்தால் பெறுகின்ற சக்தி நமக்குக் கிடைக்கின்றது. நமது இளமை நிலைத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளார் திருமூலர். ஏனெனில் பதினாறு வயது முதல் முப்பது வயது வரையுள்ள இளமைக் காலத்திலேயே இவ்வரிய யோக சாதனையைப் புரிதல் தகும் என்றுள்ளார். அதனால் முப்பது வயதில் நமக்குள்ள இளமை நிலைத்து, அதன்பின் வரும் வயதுகளிலும் அப்படியே நிற்கும்; அந்த யோகி முதுமையடையமாட்டான் என்பது உண்மையே. அத்தகைய யோகியின் உடலிலுள்ள ரோமங்கள் எதுவும் நரைக்காது - கருமை

*உன் மனச்சாட்சிதான் உனக்கு சிறந்த ஆசான். அதைவிட வேறு ஆசானில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறமாகவும் காணப்படும். உடல் சுருங்காது, கூனல் ஏற்படாது.

கலச் சிதைவே முதுமைக்குக் காரண மாய் அமைகின்றது. இதையே Degineration Without Regeneration என்கிறோம். இதனால் சிந்தனை தொடர்பான செயல்களும் பாதிப் படைகின்றன. அல்லது மாற்றமடைகின்றன. நமது தோலிற்கு அடியிலுள்ள கொழுப்புக் குறைவடைந்தால் தோல் சுருங்கும். இதுவும் உடல் அழிவதைக் குறிக்கும். மேலும் நமது மூட்டுக்களில் ஏற்படும் தேய்மானத்தால் உடலில் கூனல்நிலை தோன்றும். இதுவும் உடல் அழிதலாகும். உடல் இயக்கங்களில் மறதி நோய் முக்கியமானது. இந்நோய் முதுமையில் ஏற்படுவது. இது உடல் அழி வினால் உருவாவது. மூளை மற்றும் உள்ளம் சார்ந்தது. எனவே, இவ்வித பிரச்சினைகளுக் குத் தீர்வாக நமது இளமையைப் பேணி வருதல் வேண்டும். பிராணவாயுவின் செயற் பாடு நமது தன்னம்பிக்கையை வளர்க்கும். மனத்தை ஒருமுகப்படுத்தி நற்சிந்தனைகளில் ஈடுபடுதல் வேண்டும். யோகம் இதற்கு ஓர் தீர்வாகும். நமது மனம் நமக்கு ஓர் சுமையாக இருத்தல் கூடாது. நமது மனம் "குரங்கு மனமாக" மாறி மாறி அமைதல் கூடாது. எதை யும் தாங்கும் இதயம் வேண்டும். முன்னைய நாள் சுமைகளை மறந்து நாம் புதிய நாளைத் தொடங்குதல் வேண்டும். போதிய ஓய்வும் அவசியமானது. தினமும் உறங்குதல் வேண் டும். உறக்கம் ஓர் ஓய்வாகும். உறக்கத்தின் போது பிரபஞ்ச சக்தி நமது உடலில் வந்து சேர்கிறது.

யோக சாதனை முற்றிய நிலையில் யோகியானவர் தனது உடற்கலன்களை (செல்கள்) தனக்கு வேண்டிய சக்தியாக மாற்றிக்கொண்டு அதனால் பயனடைகின்றார். அதனால் அவரது உடல் உறுப்புக்கள் அனைத் திலும் புதிய சக்தி (தெம்பு) பிறக்கின்றது. யோகியின் இரு சுவாசங்களிலும் சமநிலை காணப்படும். பன்னிரண்டு அங்குலம் வெளி யேறிய யோகியின் சுவாசம் மீண்டும் உள் வரும்போதும் பன்னிரண்டு அங்குல அள வாகவே காணப்படும். அதிகப்படியான பிராணனை உடலிற்குக் கொடுப்பதால் உட லின் தேய்வு தடைப்படுகிறது. வாயுவைக் கும்பிக்கும்போது அவ்வாயு அபானவாயுவாக வெளியேறி வீணாகுவதை யோகி தடைப்படுத் தும்போது, அவ்வாயுவும் பிராணவாயுவுடன் சேர்ந்து உடலிற்குப் பயன்படுவதால், உடல் வளர்ச்சியினால் ஏற்படும் உடல் மாற்றங்களை யும் வளர்ச்சியையும் யோகி தடைசெய்ய முடியும். இவ்வாறு உடல் அழிவையும் வளர்ச்சி யையும் சமப்படுத்துவதால் யோகி உயிரோட் டத்தையே கட்டுப்படுத்தக் கற்றுக்கொள் கிறான். யோகியின் உடம்பில் ஒன்பது வகை யான சுவாச வழிகள் உள்ளன. நாசித் துவா ரங்களும், மலவாசல் வழியுமாகிய இரண்டும் இதில் பிரதான இடத்தில் உள்ளன. எனவே, இச் சுவாச வழிகள்மூலம் வெளிப்பாயும் பிராண- அபான ஓட்டங்களைச் சமப்படுத்தி, புலனடக்கம் செய்து மனத்தையும் புத்தியை யும் கட்டுப்படுத்தி ஆசை, அச்சம், கோபம் ஆகியவற்றை அறவேவிட்டு, பேரின்ப சிந் தனையில் ஈடுபட்டு, புறத்தோற்ற இன்பங்களை மறந்து, அகம் நோக்கியபடி தியானத்தில் நன்கு ஈடுபட்டால் அத்தகைய யோகியான வருக்கு முத்திப்பேறு கிடைப்பது உறுதி ஆகின்றது. பிராண சக்தி அரை நிமிடநேரம் சுழுமுனை நாடியில் நன்கு நிலைத்திருப்பின், யோகியின் வாழ்வில் அச் சக்தியானது ஒரு வருடகால நீட்சியைக் கொடுக்கும் என்பது அதன் சக்தியைக் குறிப்பிடுகின்றது. மனிதர் கள் இயற்கையின் நியதிகளுக்கு உட்பட்ட வர்கள். இதையே மாயை என்று குறிப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனர். எனவே, மனிதரின் உயிர்ச்சக்தி யானது எப்போதும் வெளிஉலகத்தை நாடியே ஓடுகின்றது. இந்த இயற்கை நியதி யால் தவறான புலனுணர்வுகளை நாம் அனு பவிக்க நேரிடுகின்றது. இதை மாற்றியமைக்க வேண்டுமெனில் யோகப் பயிற்சியில் ஈடுபடு தல் வேண்டும். யோகப்பயிற்சியானது உயிர்ச் சக்தியைத் திசை திருப்புகின்றது. இத் திருப்பமே Sublimation என ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, "மடை மாற்றுதல்" என்பது அது. இத் திசை மாற்றத்தின் பின்னர் உயிர்ச்சக்தியானது உட்பெருவெளிக்கு மனத்தினால் வழிகாட்டப் பெற்று, சுழுமுனை ஆகிய நுட்பமான பகுதிகளுக்குச் சென்று அதனோடு ஒருங்கிணைக்கப்படுகிறது. இச் செயலால் யோகியின் உடற் பகுதிகள் மற்றும் மூளை ஆகியவற்றில் ஆன்மீக அமுதம் பாய்ந்து, ஒருவித புத்துணர்ச்சியை ஏற்படுத்து கின்றது. தெய்வீக நிலைபற்றி மனிதன் சிந்தித் தாலும் உயிரோட்டங்கள் அதனை அடைய விடாமல் தடுக்கும். உயிரோட்டமே நமது புலன்களை நோக்கி தேவையற்ற இச்சை களுக்கு நம்மை இழுத்துச் செல்கிறது. உயிர்ச்சக்தி மனத்தை அடக்குகின்றது. யோக சாதனை என்பது நாம் இறைவனை அடையும் இலகுவான வழிமுறையைக் காட் டும். அத்துடன் இறைவனை அடையும் வேகமான வழியும் இதுவேயாகும். சுழுமுனை திறக்கப்பட்டால் அந்த யோகியின் வாழ்க்கை அவருடைய கடந்தகால தீவினை, நல்வினை களின் பலன்களால் பாதிக்கப்படுவதில்லை. அவருடைய ஆத்மாவின் வழிகாட்டுதலால் மட்டும் அவர் இயக்கப்படுகிறார். இதனால் யோகிக்கு விடுதலை கிடைக்கின்றது. இது ஆன்மீக விடுதலையாகும்.

யோகம் என்னும் சொல்லின் பொருள் "இணைதல்" என்பது. அதாவது இறைவனோடு இணைதல் என்பதாம். இந்த ஆத்மா மூல மாகிய பரம்பொருளிலிருந்து பிரிந்து வந்தது. எனவே, மீண்டும் அதனோடு சேர்ந்து கொள் வதற்காகச் செய்யும் ஓர் முயற்சியே (Practical) யோகம் எனப்படுகிறது. நமது ஆன்மா வுக்குள் இறைவன் உள்ளான். யோக முயற்சி யால் இறைவனுக்குள் ஆத்மா கலந்துவிட வேண்டும். இதுவே யோகம். யோகம் என்பது நமது சித்தத்தில் எழும் எண்ணமே.

யோகங்கள் பலவாறாயினும் அட் டாங்க யோகமே இறைவனை அடைவதற்கு ஏற்றதொரு யோகம் என திருமூலர் அருளி உள்ளார்.

**அந்நெறி இந்நெறி என்னாது அட்டாங்கத்**
**தந்நெறி சென்று, சமாதியிலே நின்மின்;**
**நன்நெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்;**
**புல்நெறி ஆகத்தில் போக்கு இல்லை ஆகுமே.**

-திருமந்திரம்.

யோகம் என்பது மன ஒருமைக்கும், ஆன்ம பரிபக்குவத்திற்கும் உரிய ஒரு சாதன மேயன்றிப் பொருளியல்பை உள்ளவாறு உணரும் தத்துவ ஞானம் அதாவது; மெய் யுணர்வு அல்ல என்பதையும் உணர்தல் வேண்டும். எனவே, யோகத்தை ஞானம் என நாம் மயக்கமடைதல் கூடாது. பிற யோகங் களிலும் சிவயோகம் வேறுபட்டது. சரியை முதலிய நான்கினுள் யோகம் என்பது சிவ யோகமே என்பதை அறிதல் வேண்டும். மூலா தாரத்தில் உறைந்துள்ள அக்கினி பிராணா யாம, பிரத்தியாகாரப் பயிற்சிகளினால் மூண் டெழும்போது அங்கு உள்ள குண்டலினிப் பாம்பு (சக்தி) கண்விழித்து எழுகின்றது. அவ்வாறு எழுந்த பாம்பு தலை மேலாகவும், வால் கீழாகவும் சுழன்று இயற்கை நிலையில் நிற்கும். இயற்கை நிலை என்பது அப் பாம்பு மேல்நோக்கிச் செல்லுமுகமாக தன் தலையை மேல் நோக்கி வைத்தது என்பதே இவற்றின்

*உண்மைக்காக எதையும் இழக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாவது, யோக நெறியிற் பழகினால் உயிரின் உணர்வு புறப்பொருள்களாகிய உலக வாழ்வைப் பற்றி நிற்றலை ஒழித்து அக முகமாயுள்ள இறைவனைப் பற்றி நிற்கும் என்பதே.

ஹடயோகம் அட்டமாசித்திகளைப் பலனாகவுடைய யோகம் எனவும் சொல்லப் படும். இராஜயோகம் நம் உடல்; நரை, திரை, மூப்பு இன்றி நெடுங்காலம் நிலைக்கும் பயனையுடைய யோகம் எனவும் சொல்லப் படும். ஆனால் இந்த யோகங்கள் இரண்டும் ஞானத்தைப் பயனாகவுடையனவல்ல, அதுவு மன்றி ஞானம் பெறுவதற்கு இவை தடையாக வும் அமைவனவாம். எனவே, ஞானத்தை விரும்புவோர் இவற்றை விரும்புதல் இல்லை. மூக்கின்வழி உள் இழுக்கப்பட்ட வாயு வெளி யேறுவதற்கு உடலில் பல வழிகள் உள்ள போது அவ்வாயுவை அவ்வாறு வெளியேற் றாமல் உள் அடக்குதல் பயனுடையது. பல யோகிகள் அவ்விதம் வாயுவை உள்ளடக்கி அதனைச் சுழுமுனையில் செலுத்தி, தமது உடலினை விட்டுச்சென்று முத்தியடைந்து உள்ளனர். உதாரணமாக; பெருமிழலைக் குறும்ப நாயனார் அவர்களைக் குறிப்பிடலாம். அவர் வரலாறு சமய நூல்களில் காணப்படு கின்றது. இந் நாயனாரின் வரலாற்றை சேக் கிழார் பெருமான் பின்வருமாறு அருளியுள்ளார்.

**மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன் றொண்டர்**
**நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான் பிரிந்து**
**கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன் என்று**
**எண்ணிச் சிவன்தாள் இன்றே சென்றடைவன் யோகத்தால் என்பார்.**

இந் நாயனார் தனது பிரமரந்திர மாகிய உச்சந்தலையிலுள்ள பெருந்துளை வழியாக அவ்வழியைத் திறந்து கொண்டு தனது உயிரை வெளியேற்றி அதனால் உடல் விடுத்துப் பின் முத்தியடைந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இச் செயல் பற்றற்ற நிலை யில் வீடுபெறும் நோக்கில் செய்யப்படுவது, இதனால் யோகத்தால் விரைவாக முத்தி அடையவும் முடியும் என்பதும் தெளிவடை கிறது. மூச்சினை அடக்குதல் என்பது குரு வின் வழிகாட்டுதலின்படியே செய்தல் அவ சியம். சுந்தரர் கயிலை சேர்ந்தபின் தான் தனியே வாழ விரும்பாத பெருமிழலைக் குறும்ப நாயனார் யோகத்தால் முத்தி யடைந்த வரலாறு இங்கு கூறப்பட்டுள்ளது.

சரியை வழி நிற்போர்க்கே யோகம் பலன் கொடுக்கும். அவர்களே யோகம் பயி லத் தகுதி பெற்றோராவர். அட்டாங்க யோகத் தில் இயமம் முதல் அட்டாங்க யோகப் பேறு வரையுள்ள ஒன்பது அங்கங்களும் கிரியா யோகம் எனப்படும். அட்டமாசித்தி தொடக்கம் வார சூலம் வரையுள்ள ஏழு யோகங்களும் ஆதார யோகங்களாக திருமூலரால் அருளப் பட்டுள்ளன. கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திரயோகம் இவை நான் கும் நிராதார யோகங்கள் என திருமூலரால் வகை பிரித்து அருளப்பட்டுள்ளன. எனவே, கிரியா யோகம் பயின்றபின், ஆதார யோகம் செய்து, ஆதாரங்களில் பிராணனை நிறுத்தி, பின்னர், இறுதியாக நிராதார யோகங்களைப் பயிலுதல் வேண்டும்.

வாழ்வின் குறிக்கோள் மோட்சம் அல்லது முத்தியடைதல் என்பதே. முத்தி என்பது ஆத்மா மீண்டும் அதன் உண்மை யான இறைத் தன்மையடைதல் என்பதாம். யோகம் இதனை எய்துவிக்கும், நமது

*மணிக்கணக்கில் பேசுவதைவிட குறைந்த அளவு காரியங்களைச் செய்வது மேலானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் அனைத்தையும் (96) மீண்டும் மூலப் பரம்பொருளுடன் இணைத்தல் யோகத்தினால் அடையப்பெறுகிறது. மனத்தின் விருத்திகளைத் தடுத்துவிட்டால் உண்மை புலப்படும். பிராணனைக் கட்டுப்படுத்துவதால் இதனைச் சாதிக்கலாம். குருவின் உதவியின்றி இக் காரியங்களைச் சாதிக்க முடியாது.

உயிர் உடலோடு என்றும் சேர்ந்திருந்தே அறம் முதலிய உறுதிப் பொருள்களைப் பெறல் வேண்டும். எனவே உயிர் தனித்து எதுவும் செய்யமுடியாது. உடலோடு சேர்ந்து நின்றே எதனையும் செய்யலாம். எனவே உயிரின் சொல் கேட்டு உடம்பு நாடகமாடும் செயலே நடைபெறுகின்றது. உடலின் நாடகமே இதுவாகும். தியான யோகம், மந்திர யோகம், ஞான யோகம் என்பவை மிகச் சிறந்த யோக மார்க்கங்களாகும். ஆத்மா அமைதியோடு இருப்பதற்கு இராஜயோகம் செய்யலாம். இதன்மூலம் நான் யார், நான் எப்படிப்பட்டவன் என்பதைப் புரிந்து கொள்ளவும் முடியும். இந்த யோகம் பயின்றால் நாம் "இராசா" போல் வாழலாம். இதனால் இது இராஜயோகம் எனப்பட்டது. இதனால் நமக்கு ஏற்படும் சக்தியைக் கொண்டு நமது மனத்தை வழிநடத்தலாம். இராஜ யோகத்தில் பூஜை முறைகள் இல்லை. இறைவனிடம் எம் மனத்தை எண்ணங்கள்மூலம் செலுத்தும் முறையே இராசயோகமாகும். எண்ணங்களை எங்கே செலுத்த வேண்டும் என்று அறியாததால் இதுவும் சிரமமான ஓர் காரியமாகத் தோன்றுகின்றது. எண்ணங்களை இறைவன்பால் செலுத்த வேண்டும்.

நல்ல கட்டுப்பாடுள்ள யோகம் ஹடயோகமாகும். "ஹட" என்றால் ஒரு வகைக் கட்டுப்பாடு என்பதே பொருள். இக்கட்டுப்பாடு இயற்கையானது, "ஹட" என்றால் தீர்மானம் என்பது பொருளாகும். ஆத்ம தீர்மானம் "சங்கல்பம்" எனப்படுகின்றது. ஹடயோகம் கட்டுப்பாட்டுடன் மனம் இருக்கும் நிலையாகும். உடலைப் பேணும் வழியே ஹடயோகமாகும். இதனால் உடலின் உள் உறுப்புக்கள் பரிசுத்தமடைகின்றன. ஹடயோகத்தினால் உண்டாகும் சங்கல்பமே (தீர்மானம்) இராசயோகம் செய்யத் துணைபுரியும். உடலைப் பத்மாசனத்தில் வைப்பதைவிட, மனத்தைப் பத்மாசனத்தில் வைப்பது இராசயோகமாகும். இராசயோகத்தினால் தெய்வீகக் குணங்கள் உருவாகின்றன. அவை கருணை, நீதி அன்பு, ஒற்றுமை, அமைதி, அஹிம்சை, தூய்மை, நல்லிணக்கம் என்பவை.

இராசயோகத்தினால் பல சக்திகளை நாம் அடைய முடியும். அவையாவன; புலனடக்கும் சக்தி, மரணத்திற்குத் தயாராகும் சக்தி (உலகப் பற்றுக்கள் அற்றநிலை), சகிப்புத் தன்மை, ஒத்துழைக்கும் சக்தி, முடிவெடுக்கும் சக்தி, பகுத்தறியும் சக்தி, தாங்கிக் கொள்ளும் சக்தி, அனுசரித்துப் போகும் சக்தி என்பனவாம். இச் சக்திகள் பெறுவதால் நாம் பயனடைவதோடு, நம் சமுதாயமும் பயனடையும். யோகத்தினால் நமது உடல் மட்டும் பயனடைவதில்லை. மேலும், இறைசித்தத்தினால் நாம் முத்தியடையவும் யோகம் வாய்ப்பளிக்கும் என்பது உறுதியானது என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

---

*இறைவன் பிரேமைஸ்வரூபம். அன்புதான் அவர் தத்துவம். அந்த அன்பே இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கிறது. எல்லோரிடமும் உறைவது அந்த தெய்வீக அன்பு மட்டுமே! இறைவன் எப்படித் தன் அன்பை அனைவரிடமும் வெளிப்படுத்துகிறாரோ, அப்படியே ஒவ்வொரு மனிதனும் தன் அன்பை மற்றவரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(நாற்பத்தெட்டாவது)

## நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

பாண்டிநாட்டிலே தென்திசையினுள்ள ஓரூரிலே ஒரு தாமரைத் தடாகமுண்டு. அதிலுள்ள மீன்களெல்லாவற்றையும் புசித்துக் கொண்டு ஒரு நாரை இருந்தது. சில நாள் மழையில்லாமையால், அத்தடாகம் வற்றிப் போயிற்று. அந்நாரை இரையை விரும்பி, அங்கு நின்று நீங்கி, விரைந்து சென்று, ஒரு காட்டில் விழுந்தது. அக் காட்டிலே, ஒரு கூப்பிடெல்லைச் சதுரமுடையதும், நான்கு பக்கத்தும் படித்துறையுடையதும், கரையிலே சந்தியாமடமுடையதுமாகிய ஒரு குளம் இருந்தது. முன் விழுந்த நாரை, இரையை விரும்பி, அக்குளக் கரையை அடைந்தது. அந்தத் தீர்த்தத்திலே இருடிகள் முழுகி முழுகி எழும்புந்தோறும், அவர்களுடைய தோட்புறத்திலே சாய்ந்த சடையிலே தத்துகின்ற மீன்கள் பாய்ந்து பாய்ந்து புரளுதலைப் பார்த்தது. பார்த்து, "இம்மீன்கள் இவ் விருடிகளுடைய திருமேனியைத் தீண்ட எத்தவஞ் செய்தனவோ! இம் மீன்களை நாம் புசிக்கலாகாது" என்று இரை வெறுத்திருந்தது.

இருடிகளெல்லாரும், அத் தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, கரையேறி, நித்திய கருமம் முடித்துச், சந்தியா மடத்தில் இருந்து கொண்டு, மதுரைப் புராணம் வாசிக்கலுற்றார்கள் சோமசுந்தர மூர்த்தி விசேடமும், மதுரைத் தல விசேடமும், பொற்றாமரைத் தீர்த்த விசேடமும், சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய திருவிளையாடல்களும், அவர் தம்மையடைந்தவர்களுக்கு எளியவரென்பதும், அதில் எடுத்துச் சொல்ல, அந்நாரை கேட்டது. கேட்டவுடனே அறியாமை நீங்கி, மெய்யறிவடைந்து, சிவபிரானிடத்துள்ள அன்பு, "வா, வா" என்றிழுப்ப, எழுந்து மதுரையை அடைந்து, பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் பண்ணிச், சோமசுந்தரக் கடவுளை வலஞ்செய்து, வணங்கி, அவர் திருமுன் இருந்துகொண்டு, அவருடைய திருமேனியைத் தியானஞ் செய்தது. இப்படியே பதினைந்து நாள் நியமமாக அனுட்டித்த பின், ஒருநாள் பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்யப் புகுந்தபோது, பசியினாலே மிக வருந்தி, அங்குள்ள மீன்களைக் கவர்ந்துண்ணும் பொருட்டுச் சிறிது நினைந்தது பின்பு சிவபிரானது திருவருளினாலே அறிவு வர, "ஐயையோ! இந்தப் புண்ணிய தீர்த்தத்துள்ள மீன்களைப் புசித்தற்கு எனக்கு இப்போது ஆசை எழுந்ததே! இப்பிறவி எப்போது நீங்கும்? என்று நினைந்து துக்கித்துப், பின்னுஞ் சோமசுந்தரக் கடவுளுடைய திருமேனியைத் தியானித்துக் கொண்டிருந்தது.

அப்படியிருக்கும்பொழுது, சோமசுந்தரக்கடவுள் அந் நாரைக்கு அது நினைந்த வடிவாய்த் தோன்றி, "உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்" என்று திருவாய் மலர்ந்தருளினார். நாரை வணங்கி, "எம்பெருமானே! இப் பிறவியை நீக்கித் தமியேனைச் சிவலோகத்திலே சேர்த்துக் கொள்ளல் வேண்டும். தமியேனுடைய குலத்தினவாகிய நாரைகளும் மற்றைப் பறவைகளும் இந்தப் புண்ணிய

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் புசிக்கின், ஒரு காலத்தும் நீங்காத பழி வந்து சேரும். ஆதலினால் இந்தத் தீர்த்தத்திலே மீன்கள் எக்காலமும் இல்லாதொழிதற் பொருட்டும் ஒரு வரந் தரல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தது. சோமசுந்தரக் கடவுள் அப்படியே வரங்கொடுத்து மறைந்தருளினார். நாரை சிவ சாரூப்பியம் பெற்று, விமானம் மேற்கொண்டு, பஞ்ச துந்துபிகளொலிப்பத், தேவர்கள் பூமாரி பொழியச், சிவலோகத்தை அடைந்து, நந்தி கணத்துள் இருந்தது.

அன்று தொட்டு இன்று வரையும் பொற்றாமரை வாவியிலே நீர்வாழுயிர்கள் ஒன்றும் இல்லாதொழிந்தன. இந் நாரை, தன் சுற்றமேயன்றி, வேற்றுப் பறவைகளுந் தன்னைப் போலவே நற்கதியடையும்படி வேண்டிற்றே! இந் நாரையினது அன்போ சிவபிரானது திருவருளோ எது வியக்கற்பாலது? எவ்வெவர்க்கும் மேலாகிய சிவபெருமான் தம் அன்பருக்கு மிக எளியராயிருப்ப தென்னை?

சுகுண பாண்டியன் தன்னாட்டிலே பாவமாகிய களையைக் களைந்து, தருமமாகிய பயிரை வளர்த்து, அதன் பயனை நுகரும் பொருட்டுச் சுவர்க்கத்தை அடைந்தான்.

### (நாற்பத்தொன்பதாவது)
## திருவாலவாயான படலம்

சுகுண பாண்டியன் சுவர்க்கமடைந்த பின் சித்திரரதன், சித்திரபூடணன், சித்திரத் துவசன், சித்திரவருமன், சித்திரசேனன், சித்திரவிக்கிரமன், இராசமார்த்தாண்டன், இராச சூடாமணி, இராசசார்த்தூலன், துவிசராச குலோத்தமன், ஆயோதனப்பிரவீணன், இராச குஞ்சரன், பராரசபயங்கரன், உக்கிரசேனன், சத்துருஞ்சயன், வீமரதன், வீமபராக்கிரமன், பிரதாபமார்த்தாண்டன், விக்கிரமகஞ்சுகன், யுத்தகோலாகலன், அதுலவிக்கிரமன், அதுல கீர்த்தி என்னும் இருபத்திரண்டு பாண்டியர்களும், வழி வழி மைந்தர்களாய், அரசியற்றினார்கள். அதுலகீர்த்தி பாண்டியனுக்குப்பின், அவன் குமாரனாகிய கீர்த்தி விபூடணன் அரசியற்று நாளிலே, பிரளயகாலம் வந்தது. அப்பொழுது, சத்தசமுத்திரமுங் கரை கடந்து, ஆர்த்துப் பொங்கி, ஒருங்கெழுந்து, உலகத்தை அழித்தன. சோமசுந்தரக் கடவுளுடைய விமானமும், மீனாட்சியம்மை கோயிலும், இடபமலையும், யானைமலையும், நாகமலையும், பசுமலையும், பன்றிமலையும் அழியாதிருந்தன. வெள்ளம் வற்றியபின், சிவபெருமான், உலகத்தை முன்போலப் படைத்துச், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் மூவருடைய குலத்தினின்றுந் தமிழ்வேந்தர் மூவரையும் படைத்தருளினார்.

அப்பொழுது சந்திரகுலத்துதித்த வம்மிசசேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலைச் சூழ ஒரு சிறு நகரம் நிருமித்து, அதில் இருந்துகொண்டு, அரசு செய்தான். அவன் நீதி வழுவாது அரசு செய்தமையால், கலிப்பகை புறந்தந்தோட, அவன் நாடெங்கும் பல வளங்கள் சுரக்கச், சனங்கள் நாடோறும் பெருகினார்கள். அச்சனங்களெல்லாம் வசித்தற்கு இடம் போதாமையினாலே, பாண்டியன் திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம் பெருமானே! தமியேன் இத்தனை மனிதர்களும் இருக்கத்தக்கதாக ஒரு நகரம் நிருமிக்க வேண்டும். இந்நகரத்துக்கு ஆதியிலே வரையறுக்கப்பட்ட எல்லையைக் காண்கிலேன். இன்றைக்கு அதனைக் காட்டியருளும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது, சிவபெருமான், அரைஞாண் கௌபீனம் பூணூல் சன்ன வீரம் குண்டலம் பாதகிங்கிணி கங்கணம் என்பவையெல்லாம் பாம்பினாலே தரித்த ஒரு சித்தராய், விமானத்தினின்றும் எழுந்தருளி வந்து, மகா

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தின் பக்கத்திலே நின்று, தமது திருக்கரத்திலே கங்கணமாயுள்ள பாம்பைப் பார்த்து, "நீ இவனுக்கு இந்நகரத் தெல்லையை அளந்துகாட்டு" என்று பணித்தருளினார். பாம்பு அவரை வணங்கி, "எம்பெருமானே! இந்த நகரம் அடியேன் பெயரினால் விளங்கும்படி அருள் செய்யும்" என்று பிரார்த்தித்தது. சிவ பெருமான் "அப்படியேயாகுக" என்றார். பாம்பு, விரைந்து கிழக்குத் திக்கிலே போய், வாலை நீட்டி, நகரத்தை வலமாகச் சூழும்படி உடம்பை வளைத்து, வாலை வாயில் வைத்துப், பாண்டியனுக்கு எல்லை காட்டிவிட்டுத், திரும்பிப் போய்ச் சித்தர் கையிற் கங்கணமாயிற்று. சித்தர் தமது திருக்கோயிலினுள் எழுந்தருளினார். பாண்டியன், அப்பாம்பு கோலியபடியே சுவரெடுத்து, மதில் செய்வித்துத் தெற்கு வாயிலுக்குத் திருப்பரங்குன்றமும், வடக்கு வாயிலுக்கு இடபமலையும், மேற்கு வாயிலுக்குத் திருவேடகமும், கிழக்கு வாயிலுக்குத் திருப்பூவணமும் எல்லையாக வகுத்தான். அம்மதில் ஆலவாய் மதிலெனவும், அந்நகரம் ஆலவாய் நகரம் எனவும் பெயர் பெற்றன. பாண்டியன், அந்நகரத்தையும் மண்டபங் கோபுரம் முதலியவைகளையும் புதியதாக நிருமித்துச், சோமசுந்தரக் கடவுளுக்கு இரத்தின கிரீடமும் இரத்தினாபரணங்களுஞ் செய்து, சாத்துவித்தான்; அத்திருவாலவாய் நகரத்திலே பலவகைக் குடிகளையும் இருத்திப் பல வளங்களும் பெருக, அரசு செய்துகொண்டிருந்தான்.

---

ஓர் ஊரிலே வசதி நிரம்பிய செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். எந்த நேரமும் அமைதியின் உறைவிடமாயிருக்கும் அந்த இல்லம். அவருக்கு அயலிலே சாதாரணக் குடியானவன் ஒருவனுடைய வீடு இருந்தது. மாலை மயங்கி இருள் சூழும் வேளையிலே அந்த வீட்டிலிருந்து சிரிப்பும், ஆட்டமும், பாட்டுமாக ஒரே அமர்க்களமாக இருக்கும். இந்தக் குதூகலத்திற்குக் காரணம் என்னவென்று தனவந்தருக்குப் புரியவில்லை. இவ்வளவு சந்தோஷமாய் இருப்பதற்குக் காரணம் என்னவென்று அவனிடம் கேட்டறிய விரும்பினார். அந்த வீட்டின் தலைவனை ஒருநாள் அழைத்து, அவனது வீட்டு மனமகிழ்ச்சியின் இரகசியம் என்னவென்று வினாவினார்.

அதற்கு அந்தத் தொழிலாளி "ஐயா நான் தினமும் எண்பது ரூபாய் சம்பாதிக்கின்றேன். என்னை நம்பி வந்த என் மனைவியைப் போஷிக்கின்றேன். அதற்கு இருபது ரூபா செலவாகின்றது. பழைய கடனுக்காக இருபது ரூபாவும், தர்ம காரியத்திற்காக இருபது ரூபாவும் செலவாகிவிடும். மிகுதி இருபது ரூபா சேமிப்பாகிறது. அன்றைய பொழுதில் என் ஊதியமும் செலவும் சரியாகிவிடும். எனவே எந்தக் கவலையும் இல்லாமல் திருப்தியோடு படுக்கைக்குப் போய்விடுவோம்" என்று சொன்னான்.

அதைக்கேட்ட அந்தத் தனவான் "அடடா! இந்த வருவாயில் தருமம் வேறு செய்கிறாயா? உன்னால் சேமிக்கக்கூட முடிகிறதா?" என்று வியப்புடன் கேட்டார். பதிலாக, அந்தக் குடியானவன் "பிரபுவே! என் மனைவியைக் காப்பது என் கடமை. வயது முதிர்ந்த என் பெற்றோரைப் பராமரிக்கின்றேன். அது பழைய கடன். வாழ்விழந்த கைம்பெண்ணான என் சகோதரியைக் காப்பாற்றுகின்றேன். அது தர்மம். எனது பிள்ளைகளின் கல்விக்காக மிகுதியைச் செலவிடுகின்றேன். அது என் சேமிப்பு. நிறைவான வாழ்க்கையும், மன நிம்மதியும் எனக்குக் கிடைக்கிறது. இதுவே என் வாழ்க்கையின் இன்பத்தின் இரகசியம்" என்றான். மேலும் மேலும் சேர்த்து வைக்கும் செல்வத்தால் கிட்டாது. சந்தோஷம் என்பதை உணர்ந்து கொண்டார் அந்தச் செல்வச்சீமான்.

"போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து"

-எஸ்.வீ. தேவி-

*மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி நிற்கும் இறைவன்

**– திருமதி பரமேஸ்வரி நடராஜா** அவர்கள் –

அன்பு சொரூபமான இறைவனே
அன்பே சிவமென்பதற்கிணங்க சிவமென்று பெயர் பெற்றாய்
முக்கண்ணுடை மூர்த்தி யாதலால்
கண்ணன் என்னும் நாமம் கொண்டாய்
எங்கும் நிறைந்த ஏகத்துவமானதால்
விஷ்ணுவென விளங்கி நின்றாய்
பிரிக்க முடியாப் பிரம்மவித்து வானதால்
பிரம்மா என்றும் பிதா என்றும் போற்றப்படுகின்றாய்.

தனக்கு மேலோர் தலைவன் (நாயகன்) இல்லாத் தன்மையினால்
விநாயகன் என்னும் திருநாமம் கொண்டாய்
கணங்களுக்குப் பதியாகும் காரணத்தால்
கணபதி யென்னும் நாமம் பெற்றாயே
விக்னங்களைத் தந்து வினையறுக்கும் விளையாட்டால்
விக்னேஸ்வரன் என விளங்குகின்றாயே
வேதங்களுக்கு நாயகனாம் தன்மையினால்
வேத நாயகனாய் வீற்றிருக்கின்றாயே.

நடமாடி எல்லாச் செயல்களையும் நடத்தி வைக்கும் நாயகனாய்
நடராஜன் என்னும் நற்பெயர் பெற்றாயே
கருமம் யாவிற்கும் கர்த்தாவாய காரணத்தால்
கர்த்தர் என்றே புகழப் படுகின்றாயே
கார்மேகம் போன்று கருணைமழை பொழிவதனால்
கார்மேக வண்ணனென வழங்கப் படுகின்றாய்
எங்கும் ஒளிரும் ஒளிப்பிழம்பாய் ஒளிர்வதனால்
பரம் ஜோதி எனும் நாமம் பாரினில் விளங்குதையா.

இனிமையும் இளமையும் கொண்ட இளையவன் ஆனதால்
முருகன் என்னும் திருநாமத்தில் திகழ்கின்றாய்
வேல்போல் கூர்மதி கொண்டதனால்
வேலவன் என்றே விளங்குகின்றாய் இறைவா
காந்தம் போன்றே அடியருள்ளம் கவர்வதனால்
கந்தனென நீயும் நாமம் கொண்டாய் இறைவா
சுயம் பிரகாசமாய்த் திகழ்வதனால் நீயும்
சுப்ரமண்யன் எனும் தூய நாமம் கொண்டாயே.

*வாழ்வில் முன்னேற முதலில் தன்னம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனை வென்று தேவர் சிறை மீட்டே
சூரசங்காரனாய்த் துலங்குகின்றாய் இறைவா
ஓய்ந்திராமல் மானுட சேவை செய்ததினால்
இராமன் என இலங்குகின்றாய் இறைவா
உள்ளத்தைப் பண்படுத்தி ஆனந்தமாம் விளைச்சலைத் தந்தே
கிருஷ்ணன் எனும் திருநாமத்தில் திகழ்கின்றாய் இறைவா
எங்கும் நிறை சக்தியாய் எங்கும் நிறைந்ததனால்
பராசக்தி யென்றே பாரினில் நாமம் கொண்டாய்.

மலை போன்ற மனவுறுதி படைத்ததனால்
மலைமகள் என்றே பெயர் பெற்றாய்
அலைகள் எத்தனை உயரம் எழுந்தாலும் வீழ்வது தாய்மடியில்
அலைமகள் எனும் நாமம் இதனை விளக்குதே அம்மா
ஆயகலைகள் அனைத்திற்கும் இருப்பிடமாம் தன்மையினால்
கலைமகளாய் விளங்கும் கன்னித்தாய் நீயம்மா
இல்லறத்தின் இயல்பைப் புரியவைக்க நீயும்
மாதொரு பாகனாய் மாநிலத்தே மகிழ்ந்து நின்றாய்.

வேற்றுமை யெல்லாம் கடந்துள்ளே
வீற்றிருந்து ஆட்சி செய்வதால் கடவுள் ஆனாய்
ஓர் உரு ஓர் நாமம் இல்லாமையால் நீயும்
அருவம் என்றே அழைக்கப் படுகின்றாய்
சகலமுமாய் சர்வவியாபியாய் விளங்குவதால்
சர்வேஸ் வரனாய்த் திகழ்கின்றாய் இறைவா.

அருவாகி உருவாகி அருவுருவாய்க் குருவாகி
எமையாளும் ஈசனே உன் இறைமையினால்
இறைவன் என்றே இலங்குகின்றாய் ஈஸ்வரனே
திருவிளையாடல் புரிவதற்கே திரு அவதாரங்கள் செய்தவனே
அம்பலத்தே நீயாடும் ஆனந்த தாண்டவத்தால்
வாழ்வின் இரகசியத்தைப் புரிய வைத்தாயே
உந்தன் திருவிளையாடல்களைப் புரிந்து கொண்டால்
வாழ்க்கை என்பது ஆனந்தமான ஓர் அற்புத விளையாட்டே.

காரண காரியத்தால் நீ கொண்ட
ரூபங்கள் நாமங்கள் எத்தனை எத்தனையோ
அத்தனையும் கூறிட எத்தனை புராணங்கள் உண்டிங்கே
அத்தனையும் கற்று அறிந்திடவே - இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஜென்மம் போதுமோ இறைவா
சர்வ வியாபியாம் உன்னைப் பூரணனாய்க் கண்டவர்
என்றும் சாந்தியில் நிலைத்திருப் பாரே
சாந்தமும் அமைதியும் தந்திடும் சாந்தஸ்வ ரூபனே
சரணம் சரணம் சரணமையா.

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
எல்லாம் சிவமயம் எங்கும் பொங்குக மங்களம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

## ஒற்றுமையே பலம்!

மனிதன் என்ன தான் தனியாக பிறந்தாலும், அவனால் சக மனிதனின் துணையும் ஆதரவும் இன்றி வாழ்வதென்பது இயலாத காரியம். எல்லா விடயங்களையும் அவனால் தனியாகச் செய்துவிடமுடியாது. மனிதனுக்கு மனிதன் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழவேண்டியது மிகவும் முக்கியம். தனக்கு வரும் பசியைப்போலத்தான் மற்ற மனிதனுக்கும் வரும்... தனக்கு வரும் தாகத்தைப்போலத்தான் மற்றவனுக்கும் வரும்... இந்த எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருந்தால், அங்கே பிரிவினைகளுக்கும் வேறுபாடுகளுக்கும் இடமே இருக்காது.

"நான் வேறு; நீ வேறு" என்று நினைப்பதை விடுத்து அனைவரும் சமமானவர்கள், மனிதர்கள் என்ற எண்ணத்தை நம் மனதில் விதைத்துக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் இந்த உலகில் ஒற்றுமையை விட வேற்றுமையே தலைதூக்கி ஆட்சி செய்வதைப் பார்க்கிறோம். தனக்கென ஒரு குறிப்பிட்ட நபர்களை சேர்த்துக்கொண்டு, அவர்கள் மாத்திரமே தனக்குத் தேவையானவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என வரையறுத்துக் கொள்கிறோம். ஏனையவர்களை பார்க்கும்பொழுது வேறு கிரகத்தில் இருந்து வந்தவர்களைப் போல் எண்ணத் தோன்றுகிறது.

இரண்டு கைகள் சேர்ந்தால்த்தான் கைதட்ட முடியும். கடினமான பொருளொன்றை நான்கு பேர் சேர்ந்து தூக்கினால்த்தான் இலகுவாகவும் விரைவாகவும் தூக்கிப் பிறிதொரு இடத்துக்கு மாற்ற முடியும். நமது இரு கைகளை மட்டுமே கொண்டு செயற்படுவதை விடவும் இன்னும் இரண்டு கைகளை சேர்த்துக்கொண்டால், பலம் அதிகமாகும். ஒற்றுமையாக இருந்து செய்யும் எந்தவொரு வேலையும் நிச்சயம் பயனற்றுப் போகாது. ஆனால், சிலருக்கு அந்த ஒற்றுமையின் பெறுமதி புரிவதில்லை. ஒரு தனிநபர் தனது உரிமைகளுக்காக போராடும்போது வெளிவரும் சத்தத்தை விடவும் நான்கைந்து பேர் சேர்ந்து கத்தும்போது அங்கு இன்னும் சத்தம் அதிகமாகிறது. அதனால் மற்றவர்களின் கவனம் நம் பக்கம் அதிகம் ஈர்க்கப்படும்.

விலங்குகள், பறவைகள்கூட தன் இனத்தோடு சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வதைப் பார்க்கிறோம். இதே மனிதர்களாகிய நாம் அனைவரும் ஒருசேர கைகோர்த்தால் ஒரு மாற்றத்தை உருவாக்கலாம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதைப்போல பிரிவினை, பாகுபாடு என்பதைத் தகர்த்தெறிந்து மனிதன் என்ற அடிப்படையில் ஒற்றுமையாய் வாழப் பழகுவோம். வாழ்க்கை நிலையற்றது. என்றைக்கு வேண்டுமானாலும் மரணம் நம்மை வந்தடையலாம். அதனால் இருக்கும் காலத்தில் அனைவருடனும் சமாதானமாக இருந்துவிட்டுப் போவோமே! மனிதன் கடைப்பிடிக்கும் சில ஒழுக்க விதிகளுள் இந்த ஒற்றுமையையும் உள்ளடக்குவோம். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதைப்போல ஒற்றுமையின் பலத்தை உலகுக்கு எடுத்துரைப்போம்!

தோல்வி துரத்துகிறது என்றால், வெற்றியை நெருங்குகிறாய் என்று அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத் தொண்டாற்றி உயர்வடைந்தவர்களின் வரிசையில் திருவிளக்கேற்றும் தொண்டாற்றிய கலிய நாயனார்

(தொடர்ச்சி...

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

தொண்டை நாட்டின் திருவொற்றியூர் சிவாலயப் பெருமையால் அங்கு வாழும் மக்கள் பலரும் சிவப்பணியாற்றும் பேறு பெற்றவர்கள். திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழில் புரியும் சங்கரப்பாடி தெருவில் கலியர் என்னும் தொண்டர் அவ தரித்தார். இவர் பிறந்த மண்ணின் சிறப்பால் சிவப்பணியில் இணைந்தார். இவர் தமது தொழில் மூலம் மிகுந்த நிதிவளம் பெற்றதால் அவ்வூர் சிவாலயத்தில் திருவிளக்கேற்றும் தொண்டைச் செய்தார். இவரின் நிதிவளமும் சிவப்பணி ஆர்வமும் உந்தியதால் திரு வொற்றியூர் சிவாலயத்தில் உள்ளும் புறமும் பகலும் இரவும் நெய்விளக்கேற்றும் பணியில் சிறந்து விளங்கினார்.

நீண்டகாலமாக எண்ணில்லாத திரு விளக்கேற்றிய கலிய நாயனாரின் மெய்த் தொண்டை உலகறியச் செய்ய இறைவன் சித்தங் கொண்டார். இதனால் கலிய நாய னாரின் நிதிவளம் சுருங்கியது. தாம் வறுமை யுற்றபோதும் திருவிளக்கேற்றும் தொண்டைத் தொடர்ந்தார். அவ்வூர் செல்வந்த வணிகர் களிடம் எண்ணெய் வாங்கி விற்று உரிய வரிடம் கொடுத்து அதில் வரும் இலாபத்தை எடுத்துத் திருவிளக்கேற்றினார். சில காலத்தில் எண்ணெய் கொடுப்பவர்கள் தர மறுத்தனர். இதனால் வேதனை அடைந்தார். மனந் தளரா மல் எண்ணெய் ஆட்டும் செக்கு இருக்கும் இடங்களில் கூலி வேலைசெய்து கிடைக்கும் பணத்தில் திருவிளக்கேற்றினார். இவரின் பணியில் மேலும் பலரும் சேர்ந்ததால் வந்த வருவாய் முட்டுப்பாடடைந்தது.

இதனால் நிதி முடங்கினாலும் தமது வீட்டு உடமைகளையும் தொடர்ந்து வீட்டை யும் விற்று விளக்கேற்றும் தொண்டாற்றினார். அப்பணமும் சில காலத்தில் சுருங்கியது. இச்சமயத்தில் மனைவியாரின் பூரண சம்மதத் துடன் மனைவியை விற்று விளக்கேற்ற முற் பட்டார். மனைவியை அழைத்துக்கொண்டு திருவொற்றியூர் எங்கும் சென்றும் எவரும் மனைவியை வாங்க முன்வரவில்லை. இத னால் வேறு வகையில்லாமல் திருவொற்றியூர் கோயிலை வந்தடைந்தார்.

தம்மையொரு பக்தனாக ஏற்றுத் தமது திருப்பணியை ஏற்றருளும் இறைவன் சந்நிதியில் அழகு நிறையும் விளக்கெரியும் சமயத்தில் தமது மணிவிளக்கு ஏற்றும் பணி நின்றுவிட்டதால் தான் மாள்வதுமேல் என் றெண்ணினார். அதன் நோக்கில் எல்லா விளக்குகளையும் எடுத்து அதற்கான திரி களையிட்டுத் தனது இரத்தத்தால் விளக்கேற்ற எண்ணினார். ஒரு கத்தியால் தனது கழுத்தை அறுக்க முயன்றார். அச்சமயம் இறைவன் கழுத்தை அறுக்கும் கையைப் பிடித்து ஆட் கொண்டார்.

கலியனாரின் முன் மழவிடை மேலிருந்து இறைவன் காட்சி தந்தார். கலிய னாரின் கழுத்தில் ஏற்பட்ட ஊறும் நீங்க நல்ல பிரகாசத்துடன் கலியனார் தலைமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கினார்.

*ஆசைப்படுவதை மறந்துவிடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கலியனாரைத் தமது சிவலோகத்தில் சிறப்புற்று வாழ அருள் பாலித்தார். சிவாலயத்தில் திருவிளக்கேற்றும் திருத்தொண்டு வறுமையால் தடைப்பட்டபோது தன் கழுத்தையே அறுக்க முற்பட்ட கலிய நாயனார் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டுச் சிவலோக பதவி பெற்றார். இதனால் கலிய நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவராக அமையும் பேறும் பெற்றார்.

## குங்கிலியக்கலய நாயனார்

சோழ நாட்டில் திருக்கடவூர் என்னும் புண்ணிய பதியில் வேதியர் குலத்துதித்த கலயனார் பல வளங்களும் சிறப்படைய வாழ்ந்தார். தமது வாழ்வாதாரப் பணிக்கு மேலாக இப்பதியில் குடிகொண்டுள்ள அமிர்த கடேஸ்வரரின் ஆலயத்தில் தினமும் குங் கிலிய தூபமிட்டு மகிழ்ந்தார். இவர் குங்கிலிய தூபத்தையே பேறாக எண்ணித் தொண்டாற் றியதால் குங்கிலியக் கலயர் என அழைக்கப் பெற்றார். இவரின் இடையறாத பணியைச் சோதிக்க எண்ணிய இறைவன் இவரை வறுமையில் ஆழ்த்தினார். தமது மேலதிக நிலங்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் யாவற் றையும் விற்றே தடையில்லாமல் குங்கிலிய தூபமிட்டார்.

வீட்டில் உண்ணுவதற்கே ஏதுமற்ற நிலையில் இவரின் மனைவி, புதல்வர்கள், இவரை நாடிவந்த உறவினர்கள் யாவரும் இரு நாட்களாகப் பட்டினி இருந்தனர். பசியால் வாடிய புதல்வர்களின் பரிதாபத்தை நோக்கிய கலயரின் மனைவி யாவும் விற்று எஞ்சிய தமது மங்கலமான தாலியைத் தமது கண வரிடம் கொடுத்து சமைப்பதற்காக உணவுப் பொருட்களை வாங்கி வருமாறு கொடுத்தாள். கலயர் தாலியை வாங்கிக்கொண்டு நகரத்திற் செல்கிறார். அச்சமயம் ஒரு வணிகன் ஒரு பொதியுடன் எதிரில் வந்தான். கலயர் அவனை நோக்கி இது என்ன பொதி எனக் கேட்டார். அவன் குங்கிலியப் பொதியென்றான். இறை வனுக்குக் குங்கிலியப் புகையூட்டி மகிழ்ந் தவர்; தமது குடும்பத்தின் பசிபோக்கவெனக் கொடுத்த தாலியைக் கொடுத்துக் குங்கிலி யத்தை வாங்கினார்.

கலயனார் இறைவனுக்குத் தூபமிடும் பேரவாவினால் தமது குடும்பம் வறுமையால் இருநாட் பட்டினியாயிருப்பதையும் மறந்தார். குங்கிலியப் பொதியை வாங்கியதும் தமது வீட்டையே சிந்திக்காது நேராக அமிர்தகடேஸ் வரரின் ஆலயத்திற்குச் சென்றார். எம்பெரு மானை வழிபட்டார். குங்கிலியத் தூபமிட்டு மகிழ்ந்தார். தொடர்ந்து இரவு கோயிலிலேயே தூபத்தொண்டில் மகிழ்ந்தவாறு சிவத்தியானத் தில் ஆழ்ந்திருந்தார்.

கலயனாரின் மனைவியுட்பட யாவ ரும் பசியால் வாடியதும் உறங்கிவிட்டனர். பக்தனின் பக்தியை மெச்சிய இறைவன் குபே ரன் மூலம் கலயரின் வீடு முழுவதும் பொன் னும் உணவுப் பண்டங்களுமாக தாராளமாக நிறைத்துவிட்டார். அச்சமயம் இறைவன் கல யரின் மனைவியின் கனவிற் தோன்றி வீட்டில் வேண்டிய பொருட்கள் நிரம்பியுள்ளது. எழுந்து பசியால் வாடியுள்ள யாவருக்கும் உணவு தயாரிக்குமாறு இயம்பினார். துயிலெழுந்த மனைவி தமது வீட்டையே நோக்கினார். வேண்டியளவு இப் பொருட்களை வழங்கியது எம்பெருமானே என அறிந்ததும் இறைவனை வணங்கிவிட்டு யாவருக்கும் உணவு தயாரிக்கலானார்.

இதேவேளை கலயர் அறியும் வண் ணம் "பசியையும் மறந்து தூபத்தொண்டாற் றும் உமக்கு வீட்டில் சமையல் நடக்கிறது. வீட்டுக்குச் சென்று பசியாறலாம்" என்று

*துன்பங்களுக்கு இடையில்த்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசரீரி ஒலித்தது. கலயர் இறையருளை வியந்து இறைவனை வணங்கிவிட்டு இல்லமேகினார். வீட்டில் வகை தொகையின்றி வீடு நிறையப் பொன்னும் பொருட்களும் நிறைந்திருந்ததை நோக்கினார். மனைவியிடம் இவை எவ்வாறு கிடைத்தது எனக் கேட்டார். மனைவி இறையருளை வியந்தார். இருவரும் மீண்டும் இறையருளை எண்ணிப் போற்றி மகிழ்ந்தனர்.

இறைவன் தந்தது தமது சிவனடியார்களுக்கும் உரியதாகும் என்பதால் சிவன் அடியார்களையும் அழைத்து அறுசுவை விருந்தளித்து மகிழ்ந்தனர். கலயரின் வீட்டில் தினமும் சிவனடியார்களுக்கு அறுசுவையுண்டி வழங்குவதில் கலயரும் குடும்பத்தினரும் மகிழ்வடைந்தனர். வழமைபோல் கலயர் தமது நித்திய பணியான தூபத்தொண்டை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

## தாடகைப்பிராட்டியின் தொண்டு

இச்சமகாலத்தில் திருப்பனந்தாள் சிவாலயத்தில் நாள் தவறாது பூமாலை புனைந்தேற்றும் பணியை ஏற்றவர் அவ்வூர் தாடகை என்னும் மூதாட்டியார். இவர் தினம் ஆலய நந்தவனத்தில் ஆசாரசீலத்துடன் நறுமலர் கொய்து ஆலயத்திலிருந்து மாலை தொடுத்துச் சாத்தி வந்தார். ஒருநாள் தாடகைப் பிராட்டியார் பூமாலை கட்டி முடிந்ததும் மாலையைக் கையில் எடுத்துக்கொண்டு எம் பெருமானுக்குச் சாத்தவென எழுந்தார். அச்சமயம் இவரின் ஆடை சற்று நெகிழ்ந்தது. கையில் பூமாலை இருந்ததால் ஆடையை நெகிழவிடாது தமது ஒரு முழங்கையால் அணைத்தபடி சிவலிங்கப் பெருமானை நாடினார். இதனால் மாலையை இலிங்கத்தின்மீது போட முடியாததை எண்ணினார். அச்சமயம் இலிங்கப் பெருமான் சற்றுச் சரிந்து பூமாலையை ஏற்றார். அந்தவேளை முதல் இலிங்கம் சரிந்தே காணப்பட்டது. அன்று வழமைபோல ஆலயத்தை வழிபட வந்த சோழ மன்னன் சாய்ந்திருந்த இலிங்கத்தை நேராக நிறுத்தி வைத்தே வணங்கவேண்டுமென எண்ணினான். தனது யானை மற்றும் சேனைகள்மூலம் கட்டி இழுப்பித்தான். யாவரும் களைத்து விழுந்து விட்டனர். எழ முடியவில்லை. மன்னன் இலிங்கத்தை நேராக நிறுத்தி வழிபட்டே தான் அவ்விடம் விட்டகல்வது என்னும் சிந்தனையில் ஆலயத்திலேயே அமர்ந்திருந்தான்.

இச் செய்தியை அறிந்த குங்கிலியக் கலய நாயனார் திருப்பனந்தாள் ஈசனை உள்ளன்போடு வழிபட வந்தார். அங்குள்ள நிலையை உணர்ந்தார். அங்குள்ள பூங்கச்சுடன் பலமான கயிறொன்றையும் இணைத்துச் சாய்ந்திருந்த இலிங்கத்தின்மீது கட்டினார். மறுமுனையைத் தமது கழுத்தில் மாட்டினார். இறைவனை உள்ளன்போடு பூசித்தவண்ணம் கழுத்தினால் இழுத்தார். கலயனாரின் அன்புக் கயிறு இலிங்கத்தை நேராக நிமிர வைத்தது.

இதைக்கண்ட தேவர்கள் பூமாரி பொழிந்தனர். திருப்பனந்தாளில் நிறைவான மழை பொழிந்தது. வீழ்ந்து எழுந்திருக்க முடியாத யானை மற்றும் சேனைகளும் எழுந்தன. யாவரும் இறைவனைப் போற்றி வழிபட்டனர். சோழ மன்னன் கலய நாயனாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அருந்தொண்டாற்றிய கலய நாயனாரைப் போற்றிப் பெருமை அடைந்தான். மேலும் இறைவனின் பெருங்கருணையை எண்ணி இவ்வாலயத்திற் பல திருப்பணிகளையுஞ் செய்ய முன்வந்தவன் இறைவனை மீண்டும் வணங்கிவிட்டுத் தன் நகரையடைந்தான். கலய நாயனார் சில நாட்கள் அவ்விடத்திற் தங்கி வழிபட்டபின் திருக்கடவூரை நாடித் தமது தூபப் பணியை மேற்கொண்டார். அக்காலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கடவூர்

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைத் தரிசிக்க எழுந்தருளியிருந்தனர். குங்கிலியக்கலய நாயனார் அவர்களிருவரையும் எதிர்கொண்டு வரவேற்று வணங்கியதும் தமது மனைக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு ஏற்றவாறு அறுசுவையுண்டி வழங்கினார். சமய குரவர்களின் அன்பைப் பெற்ற குங்கிலியக்கலய நாயனார் தமது வழமையான குங்கிலியத் தூபமிடும் பணியையும் சிவனடியார்களுக்கு விருந்தளிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து இறைவனின் அருட் பார்வைக்கு வசமானார்.

## பெற்றோர்

நாம் எவ்வளவு பெரிய சிகரத்தை அடைந்தாலும் அந்த வெற்றிக்கு முழு காரணமானவர்கள் நம் பெற்றோர்களாகத்தான் இருக்கமுடியும். ஒரு சிற்பி எவ்வாறு தன் சிலையை நுட்பமாக செதுக்குகிறானோ அதேபோல நம் பெற்றோர் நம்மை கவனமாக செதுக்குகிறார்கள்.

அதாவது பிறந்ததில் இருந்து 3 வயது வரை அந்தக் குழந்தைக்கு பேசக் கற்றுக்கொடுக்கின்றனர். அதன்பிறகு பள்ளிக்கூடத்தில் சேர்த்து கல்வி அறிவையும் சமுதாயத்தைப்பற்றியும் அறியவைத்து அறிவே ஆற்றல் என உணர்த்துகின்றனர். பிள்ளைகளின் விருப்பத்துக்காக தங்கள் சக்திக்குமீறி மேற்படிப்பையும் தருகின்றனர். ஒழுக்கம் விழுப்பம் தரும் என்று பெற்றோர்கள் உயிரினும் மேலான ஒழுக்கத்தைப் போதிக்கின்றனர். நம்மை ஒய்யாரமாய் வாழ வைத்து நம் வாழ்வில் ஓடமாய் அமைகின்றனர். ஆனால் இன்றைய தலைமுறையினர் சிலர் வாழ்வில் நல்ல நிலையை எய்தியவுடன் ஏற்றிவிட்ட ஏணியை எட்டி மிதிக்கின்றனர். நாளை தன் குழந்தைகளால் தனக்கும் இந்த நிலை ஏற்படும் என்பதை உணராமல் முட்டாளாக இருக்கின்றனர்.

இந்த உலகில் வேறு எவராலும் நம் பெற்றோர்களுக்கு இணையாக நம்மை நேசிக்கமுடியாது. தன் குழந்தைகளிடம் இருந்து பெற்றோர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை. இன்றைய சமூகத்தினர் பெற்றோர்கள் செய்த எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவர்களை அநாதையாக விட்டு விடுகின்றனர். சிலர் அநாதை இல்லங்களில் சேர்த்துவிடுகின்றனர். தமக்கு இந்த குழந்தை வேண்டாம் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைத்திருந்தால் இன்று நாம் இத்தகைய அழகான உலகினைப் பார்த்திருக்க இயலாது, வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. தன் பிள்ளைகளுக்காக முழு வாழ்வையே அர்ப்பணிக்கிறார்கள் பெற்றோர்கள். தன் குழந்தைகளே தங்களின் வாழ்க்கை என நினைத்து வாழ்கிறார்கள். இதெல்லாம் அவர்களின் கடமை என்று கூறிவிடுகிறார்கள். இன்றைய தலைமுறையினர் கூறுவதுபோல் பெற்றோர்களின் கடமை என்று எடுத்தால்கூட இன்றைய தலைமுறையினர் தங்கள் கடமையைச் செய்ய வேண்டாமா?

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் நம்மைப் பெற்றவர்களுக்கு நாம் திருப்பிச் செலுத்தும் நன்றிக்கடன் உள்ளது. கடமை உள்ளது. இறைவனிடம் தன் குறையை முறையிடும் அநாதைக் குழந்தையின் நிலையை உணர்ந்தால் நம் பெற்றோர் நமக்கு பேரின்பமாய் தெரிவார்கள்.

பெற்றோர்கள் நமது வாழ்க்கையின் வழிகாட்டிகள். அவர்கள் நம்மைப் பெறவில்லையென்றால் நாம் இந்த மண்ணில் பிறந்திருக்க முடியாது. ஒரு நல்ல நிலையை அடைந்திருக்க முடியாது. இவ்வுலகில் பல கேள்விகளுக்கு விடை இல்லை. அதுபோல்தான் பெற்றோர்கள். ஏன் தங்கள் குழந்தைகள் மேல் அளவுகடந்த பாசம் வைக்கிறார்கள். அவர்களின் பாசத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை. எழுதுவதற்கு எழுத்துக்களும் இல்லை. இந்தக் கேள்விக்கான விடை பெற்றோர்களுக்கு மட்டும்தான் தெரியுமா என்பதுகூட கேள்வியாக இருக்கிறது. பேசக் கற்றுக்கொடுத்தவர்களிடம் உங்கள் பேச்சுத் திறமையைக் காண்பிக்காதீர்கள்

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமே உலக மொழி அதுவே ரமணமொழி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மௌன மொழியாலும், நயன விழியாலும் கருணை முகத்தாலும், காருண்ய வரத்தாலும் உலகை வசீகரித்த ஆன்மீக மகாரிஷியே ரமண மகரிஷியாவார். 1879இல் பிறந்த இவர் 54 வருடங்கள் திருவண்ணாமலையை விட்டு ஒரு கணமும் அகலாமல், குகையிலேயே தன்னந்தனியனாகத் தியான யோக ஞானங் கொண்டவராய், அருணாசல நாம சங்கீர்த்தன வாஞ்சையோடு முற்றுந் துறந்த முனிவராக, கௌபீனத் துண்டோடு காலம் கழித்தவர்.

இறப்பது உடலேயன்றி உயிரல்ல! உடலே அழியும்! உயிரல்ல! நான்..... நான் என்று ஒலித்துக்கொண்டிருப்பது உடம்பல்ல. உள்ளிருக்கும் ஆத்மாவே. நான் என்பது சீவாத்மாவாகிய பரமாத்மாவே. நானே அவன். அவனே நான். நான் என்பது தேனாக இனித்தால் அதுவே பேரின்பம் நான் என்பதைக் கடவுளிடம் விட்டுவிட்டால் அதுவே இப்பிறப்பின் உச்சம் என்றும் அதுவே இப்பிறப்பின் பேறு என்றும் கூறலாம். ரமணர் இதனையே சாதனையாக்கினார். உடலிலும் உள்ளத்திலும் சிவம் பிரவாகித்தது. மெய், வாய், கண், மூக்கு, செவி யாவற்றிலும் அருணாசலப் பரம்பொருளை உரமாக்கினார். ஆதலால் எல்லாப் பசியும் அடங்கிற்று. அவரிடம் நெருங்கிய அனைவருக்கும் தெய்வீகப் பேரொளி பிரவாகித்தது. அவரிடம் இருந்து வசீகரமான ஆன்மீக அலைகள் அருணாசல திருவண்ணாமலையிலிருந்து உலகெங்கும் வசமாகின.

இன்று, நான் என்று மார்தட்டுபவர்கள் நாளை ஏன் என்று கேட்பாரின்றி மண்ணுக்கே இரையாகிவிடும் பரிதாபத்தை ஒருபோதும் உணர்வதில்லை. இதுதான் எமது மண்ணின் இன்றைய நிலையாகும். சுருக்கமாகச் சொல்வதானால், இந்த மண்ணில்

**நீங்கள் மிச்சம் நல்லவர்கள்!**
**உங்களுக்கு மதம் பிடிக்காதவரை!**

ஆனால் எல்லோருமல்ல, பலர் இன, மத, மொழி, ஜாதி, பதவி, பண, மன, மது, மாமிச, போதை, காணி, பூமி, மாடி, மனை, கோடி சம்பாத்தியம், வட்டி, அறாவட்டி, கலப்படம், மேடை, தற்புகழ்ச்சி, பட்டங்கள், விளம்பரம், சாப்பாடு ஆகிய ஏதேனுமொன்றில் அதீத வெறித்தனம் கொண்டு வென்றுவிடப் படாத பாடுபடுகிறார்கள். இந்த வெறிகளுக்குள் எமது சமயம் அகப்பட்டு மீளமுடியாதவாறு ஆழ அமிழ்ந்துள்ளது. கௌபீன ஆடையோடு ரமணர் சிவத்தை வரமாக்கினார். யோகசுவாமி, செல்லப்பாசுவாமி, கடையிற்சுவாமி, குடைச்சாமி, நயினாதீவுச்சாமி, சபாரட்ணம் சாமி, சந்நியாசியார், ரமணர் ஆகியோரின் மொழி மௌன மொழியாகும். மற்றும் பரம்பொருளோடும், தத்தமது கடமையோடும் நாம் எளிமை ததும்பப் பயபக்தியோடும் ஆசையை வென்று வாழுதலாகும். பரபரப்போ, பணம் சம்பாதிப்பதோ, புகழ் சம்பாதிப்பதோ, பிரமாண்டமான கட்டுமானங்களோ, விளம்பரங்களோ சமயம் அல்ல. உள்ளக்கமலத்தைப் பூக்கச் செய்யப் பாடுபடுவதாகும். உண்டியல் என்பதும் ஒரு மௌனமான ஆன்மீக மொழியாகும். அதில் போடப்படும் ஒவ்வொரு ரூபாவும் இறைவனின் கண்களைத் துயிலெழுப்பும் திருப்பள்ளி எழுச்சியாகும். வசதியானவர்களுக்கும், கோடி பண,

*முயன்று செயல்களைச் செய்பவனே வாழ்க்கையில் வெற்றிபெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடி மனை, வாகன மந்திரி அரச மேதாவி களுக்கும் அழைப்பிதழ் கொடுத்து சமயத்தை வளர்ப்பது என்பது ஒரு மாயையேயாகும். இன்றுவரை கவனிக்கப்படாததே கௌரவம் என்று எம்மால் ஓரம்கட்டப்பட்ட நிலையில் பல ஆலயங்கள் வரங்கொண்டு வாழ்வு தரு கின்றன. எமது மண்ணின் பொறுப்பான சீமான் கள் அங்கு சென்று வழிபாடாற்றி அந்தந்த சமூகத்தை வரமாக்கவும், வாழ்விக்கவும், புத் தெழுச்சி பெறச்செய்யவும் முடியவில்லையே என்று நமது சமூகம் வெதும்புகிறது. நாமோ இறும்பூத்தெய்துகின்றோம். கவனிக்கப்படாத சமூகமானது கவனிக்கப்படும் ஏணைய தாபனங் களினால் கருணைகொள்ளப்படுகிறது. உலக மயமாகிறது. இதில் நாம் செய்யவேண்டியது உலகிலே, அனைவரும் சமன், பேதம் இல் லாத பேறாக்குதல், அனைவரிடத்தும் ஒரே விதமான அன்பைப் பேணுதல், மௌன மொழிப் பிரார்த்தனை, சும்மா இருத்தல், சுமக் காமல் இருத்தல், பலனுக்கும் பதவிக்கும் வாழ்வதைத் தவிர்த்தல். நிறைவாகப் பரம் பொருளாக வாழ்தல்.

ரமண பகவான் சிறுபராயத்தில் வள ரும்போது படிப்பில் நாட்டம் செல்லவில்லை. மாறாக விளையாட்டிலேதான் அதிகப் பிரியம் கொண்டார். மேலும் அபார ஞாபகசக்தி கைவரப்பெற்றார். 16ஆவது வயதில் திடீரென மரணபயம் அச்சுறுத்தியது. இந்த மரண பயத்தை வெல்வதற்கான உபாயத்தைக் கண்டுபிடித்தார். ஆன்மா நிரந்தரமானது அழி யாதது! அதைக் கொண்டிருக்கும் உடல் நிலையில்லாதது. நீறாகி மண்ணாகிவிடும். இந்த உடல் எனக்குச் சொந்தமல்ல. உள் ளமோ இறைவனுக்கே சொந்தமாகிவிடும். அப்போ நான் என்பது எல்லாம் வல்ல பரம் பொருளே! அவனே நானாக நடமாடுகிறேன், ஆகவே அவனிடமே ஒப்படைப்பதற்காக, அவர் 1896 செப்டெம்பர் முதலாம் திகதி அருணா சல அருட்தந்தையை நாடி திருவண்ணா மலையை வந்தடைந்தார். தந்தையே உன் ஆணைப்படி வந்தடைந்துவிட்டேன். இனி எனக்கு அப்பா அம்மா எல்லாமே நீதான். இனி எனக்கு வீடு என்ற சொந்தபந்தமில்லை. என்னை ஆட்டுவிப்பவன் அவனின்றி வேறு யாருமில்லை. ஆதலால் நடப்பது நடந்தே தீரும். அதை எவராலும் தடுக்கமுடியாது. ஆகவே மௌனமாக இருப்பதே மிகமிக நன்றாகும் என்றார். தத்தம் கடமையோடு விருபாட்சிக் குகையிலேயே வாழ்ந்த ரமணர் தன்னை நாடிவந்த பசு, நாய், காக்கை, மான் மற்றும் தாயானவருக்கும் முத்திப் பேறளித்தார்.

**அழகு சுந்தரம் போல்**
**அகமும் நீயுமுற்று**
**அபின்னமாய் இருப்போம்**
**அருணாசலா!**
**அருணாசலம் என அகமே நினைப்பவர்**
**அகத்தை வேரறுப்பாய் அருணாசலா**

என சதா அவனையே எண்ணியவராய் 1950 ஏப்ரல் 14ஆம் திகதி திருவண்ணாமலை ஜோதியில் சிவப்பேறெய்தினார்.

ஸ்ரீ ரமண மகரிஷியின் வருடாந்த பிரதோஷ விழா, மன்னார், திருக்கேதீஸ்வரம் அம்மை அப்பன் இல்லத்தில் 28.02.2022 அன்று கொண்டாடப்பட்டது. ரமணர் மண்டபத் தில், மேற்படி விழா, அம்மை அப்பன் இல்ல ஸ்தாபகர் திருமதி சி. வல்லிபுரம் அவர்களின் தலைமையில், சிறப்பாக நடைபெற்றது. டாக்டர். பவானி, விரிவுரையாளர் ஏ. அனுசாந்தன், கலாபூஷணம் கே.எஸ். சிவஞானராஜா ஆகி யோர் ரமணப் பேறுகளை விருந்தாக்கினர். 2023இல் இவ்விழா பெருவிழாவாகக் கொண் டாட ஆவன செய்யப்பட்டது. அம்மை அப்பன் இல்லம், திருக்கேதீஸ்வரம் ஆலயத்தோடு

*சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்பவனுக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய தொண்டுகளைப் பேணி வருகிறது. பூமாலை, பாமாலை, பிரசாதம், அன்னதானம், குருபூஜைகள், தங்குமிடம், தானதர்மம், உப காரம், உபசாரம், பிரதோஷ விரத மான்மியம், மகா சிவராத்திரி அடியார்களைப் பேணுதல், திருவிழா அடியவர்களுக்கான மகேஸ்வரப் பேறு என பற்பல புண்ணிய கருமங்களை அம்மை அப்பன் மடம் இல்லமாகப் பணி செய்து சிவப்பேறு கொள்கிறது. "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்ற பெய ரோடு ஒரு அன்னசாலை வந்தோரை வர வேற்று செந்தண்மை பூண்டொழுக வைக் கின்றது.

இலங்கையாம் சிவபூமியில், ஒரு இல்லம் பரபரப்பின்றி பரோபகாரம் செய்வது அற்புதமானது மட்டுமல்ல அதிசயமானதும் கூட. வல்லிபுரம் அம்மா மும்மொழியும் பிரவாகிக்கும் தாயவளாக இருப்பதனால், இலங்கை சிவப்பொலிவடைகிறது.

## தெளிவான முடிவுகள்

ஒரு நாள் தந்தையொருவர் தன் மகனை ஒரு பெரிய கூடாரத்திற்குள் அழைத்துச் சென்றார். அங்கு பெரிய கண்ணாடித் தொட்டியொன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கண்ணாடித் தொட்டி முழுவதும் அழுக்குத் தண்ணீர். அந்த தந்தை தன் மகனை தொட்டிக்கு அருகில் அழைத்துச் சென்று, "இதன் வழியாக உத்துப்பார். உனக்கு ஏதாவது தெரியுதா?" என்றார். மகனும் உற்றுப் பார்த்தான் எதுவும் தெரியவில்லை. தந்தை மகனைப் பார்த்து, "இந்தத் தொட்டியின் மறுபக்கத்தில் நான் உனக்காக ஒரு வாசகம் எழுதி வைத்துள்ளேன். தொட்டி முழுவதும் அழுக்கு தண்ணீர் என்பதால் அவ் வாசகம் உன் கண்களுக்குத் தெரியவில்லை. நான் இன்று உனக்கு வைக்கும் சோதனை என்னவென்றால், சரியாக ஒரு மணிநேரத்துக்குள் தொட்டிக்கு அந்தப் பக்கத்திலுள்ள வாசகத்தை எனக்கு வாசித்துச் சொல்ல வேண்டும். ஆனால் அதற்கு மூன்று நிபந்தனைகள் உண்டு.

ஒன்று, இந்தத் தொட்டியினுள் இருக்கும் நீரை எக்காரணம் கொண்டும் வெளியேற்றக்கூடாது. இரண்டு, இந்தக் கூடாரத்தைவிட்டு எங்கேயும் வெளியே போகக்கூடாது. மூன்று யாரையும் துணைக்கு அழைக்கக்கூடாது" என்றார். என்ன செய்வதென்று மகன் சிந்தித்தான். முதலில் அந்தக் கூடாரத்திற்குள்ளே ஏதாவது பொருள் கிடைக்குமா என்று தேடிப் பார்க்கையில் நீளமான இரும்புக்கம்பி ஒன்று கிடைத்தது. சிந்தித்துக்கொண்டே மறுபடியும் கூடாரத்திற்குள் தேடிப் பார்த்தான். ஒரு மூலையில் ஒரு கற்குவியல் இருப்பதைப் பார்த்தான். அந்தக் கற்குவியலைச் சுற்றிப் பார்க்கையில், வண்ண வண்ண கற்கள் கிடந்தன. ஒவ்வொரு கல்லாய் எடுத்துப் பார்க்கும்போதுதான் அவன் கையில் வெள்ளை நிறத்தில் படிகாரம் கிடைத்தது. படிகாரத்தை அழுக்கு நீருக்குள் போட்டு கலக்கிவிட்டால் அந்த அழுக்கெல்லாம் படிந்துவிடும் என்பது அவனுக்கு நினைவில் வர, அந்தப் படிகாரத்தை தூள் தூளாக்கினான். அந்தத் தூளைக் கொண்டுபோய் அந்த அழுக்கு நீருக்குள் போட்டு, ஏற்கனவே அவனுக்குக் கிடைத்த இரும்புக்கம்பியால் அதை நன்றாகக் கலக்கிவிட்டான். சிறிது நேரத்திற்குள் அதற்குள் இருந்த அழுக்கெல்லாம் படிந்து தண்ணீர் முதல் இருந்ததைவிட இப்போது கொஞ்சம் தெளிவாக இருந்தது. அந்தப் பக்கம் எழுதியிருந்த வாசகம் ஓரளவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவன் அவ்வாசகத்தை வாசித்துவிட்டு, தன் தந்தையிடமும் சென்று அவ்வாசகத்தைக் கூறினான். "குழம்பிய மனதோடு எந்தவொரு முடிவையும் எடுக்காதே" என்று கூறி முடித்ததும், அந்த சோதனையில் அவன் வெற்றி பெற்றதாகக் கூறி, அவனை வாழ்த்தியனுப்பினார்.

நமது வாழ்க்கையில் நாம் எடுக்கும் முடிவு முக்கியமானது. குறிப்பாக, பிரச்சினை வரும்போது எடுக்கும் முடிவுகள், எதிர்காலத்தைப் பற்றிய முடிவுகளை எடுக்கும்போது எமது மனம் தெளிவாக இருந்தால்த்தான் முடிவுகள் சரியாக இருக்கும். பல நேரங்களில் தெளிவான மனநிலையிலிருந்து எடுக்கவேண்டிய முடிவுகளை குழம்பிய மனநிலையிலிருந்து எடுக்கிறோம். ஒருவேளை இந்தத் தவறை நாம் செய்துவிட்டால், அடுத்து என்ன செய்யவேண்டும் தெரியுமா? சிந்தனை, நிதானம், நேரம் என்கிற படிகாரங்களைப் பயன்படுத்தி மனதைத் தெளியவைத்துவிட்டு அதன்பிறகு முக்கியமான முடிவுகளை எடுக்கவேண்டும். அப்போதுதான் நாம் எடுக்கும் முடிவுகள் நமது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

*உழைப்புதான் எல்லா செல்வங்களுக்கும், மதிப்புகளுக்கும் மூலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 56

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 எதிர்பார்த்து ஒன்றைநீர் ஒருபோதும் செய்திடாமல்
எதைநீங்கள் எடுத்தாலும் திறம்படவே முடித்திடுவீர்
எதிர்பார்ப்பு சிலநேரம் எதிர்மாறாய்ப் போனாலும் கூட
எதையும் நீர்தாங்குதற்கு எதிர்பாராமையே வழியாகும்.

02 தொடக்கத்தில் இருந்ததைப்போல் தொடர்ந்தும்நீர் இருந்திடாமல்
முடிக்கின்ற போதெதிலும் அவதானம் காத்திடுவீர்
ஆபத்து எப்போதும் முடிவில்தான் காத்திருக்கும்
முடிவுகள் சுபமாய் மாற அவதானமே வழியதாகும்.

03 இன்சொல்லும் சுடுசொல்லும் உரைப்பதற்கு இருந்தாலும்
இன்சொல்லைத் தேர்ந்தெடுத்தே எப்போதும் உரைத்திடுவீர்
சுடுசொல்லால் விழைவது நெடுந்துன்பம் ஆதலினால்
இன்புற்று வாழ்வதற்கு இன்சொல்லே வழியதாகும்.

04 வன்செயலும் அகிம்சையும் தீர்வெட்டும் வழியெனினும்
அகிம்சையையே தீர்வினிற்கு வழியதுவாய்த் தேர்ந்திடுவீர்
வன்செயலால் எஞ்சுவது வெறுமையே ஆதலினால்
நிறைவோடு வாழ்வதற்கு அகிம்சையே வழியதாகும்.

05 விட்டிடலும் விடாப்பிடியும் வெற்றிபெறும் வழியெனினும்
விட்டுக் கொடுத்தலையே வழியதுவாய் ஏற்றிடுவீர்
விடாப்பிடிகள் சிலவேளை சம்பவத்தில் வெற்றிதரும்
வாழ்வெல்லாம் வெற்றிபெற விட்டுக்கொடுத்தலே வழியதாகும்.

06 காய்ச்சிப் பழுக்கவைத்த ஒருபானை பாலதனை
ஊற்றுகின்ற ஒருதுளி உறைமோரே மாற்றுதல்போல்
போற்றிப் புகழ்ந்திடநீர் சேர்த்துவைத்த நற்பெயரை
சாற்றுகின்ற ஒருவார்த்தை மாற்றிவிடும் ஆய்ந்துரைப்பீர்.

*வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ அப்படியேதான் உழைப்பும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 குளக்கரைநீர் அழுக்கென்று நெடுந்தூரம் நீர்சென்று
நடுக்குளத்தே நன்நீர் எடுத்துவரும் தன்மைபோல
கிட்டநிற்கும் கெட்டபெயர் எட்டியதை வாங்கிடாமல்
நெடுந்தூரம் நடந்தேனும் நற்பெயரை வாங்கிடுவீர்.

08 பெயரொன்று இல்லையெனில் அடையாளம் இல்லையென்று
பெற்றோர்கள் இட்டபெயர் போதுமென்று எண்ணியே
எப்படியும் நடக்கலாம் என்றெண்ணி நடந்திடாமல்
நற்பெயரை வாங்குதற்காய் நாளெல்லாம் உழைத்திடுவீர்.

09 மௌனத்தை ஒருபோதும் தரக்குறைவாய் எண்ணாதீர்
அதுவே உலகத்தின் அதிசிறந்த மொழியாகும்
மொழிபுரிந்த பின்னால்தான் பொருள்புரியும் மற்றயவை
பொருள் புரிந்தபின்னாலே மொழிபுரியும் மௌனம்.

10 மௌனத்தால் விழைவது ஏதுமில்லை என்றெண்ணி
அதுகலைந்த பின்னாலே பெருவிழைவுக் காட்டட்டு
துன்பமும் துயரமும் சூழ்ந்தெம்மை வருத்திடத்தான்
மௌனத்தில் விலைமிகவும் அதிகமெனத் தெரியவரும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவத்தை அடக்கி அருள் பாலிக்கும் முருகன்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

வினை தீர்க்கப் பூமியில் பிறந்த மனிதர்களின் நல்லறிவை மழுங்கச்செய்து ஞான ஒளியைப் பெறவிடாது தடுக்கின்றது ஆணவம். மனிதர்கள் நற்பணிகள் செய்யவிடாது தடுக்கின்ற ஆணவத்தின் செயல் மிகவும் பொல்லாதது. மனிதர்களின் ஆணவத்தை நீக்கி நல்லறிவை உணர்த்தி அருள்பாலிக்கும் கடவுளாக விளங்குகின்றான் முருகன்.

இறைவன் மனிதர்களுக்கு ஆற்றிவைக் கொடுத்து, உண்மை நெறியை உணரவைத்து வினையை ஒழித்து திரும்பவும், தனது திருவடியில் வந்துசேர பூமியில் படைத்தான். பூமியில் பிறந்த மனிதர்கள் மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசைகளினால் கவரப்பட்டு, அலைந்து உலைந்து திரிகின்றனர். மனிதர்கள் தினமும் கோயில் சென்று இறைவழிபாடு செய்து வர, ஞான ஒளி பிறந்து ஆசைகள் அகன்று விடும். மனிதர்கள் ஆலயம் சென்று, மனம் ஒடுங்கி இறைவனைத் துதிக்க அருள் பிறந்து விடும். ஆணவப் பீடிப்பினால், செருக்கடைந்து தானே பெரியவன், எதையும் செய்யும் ஆற்றல் தனக்கு உண்டென மனிதன் எண்ணுகின்றான். பிறர் சொல்லும் நற்காரியங்களை ஏற்காது, தான் எண்ணியபடி நடந்து அல்லற்படுவதை நாம் காண்கிறோம். ஆணவத்தால் ஏற்பட்ட காம வேட்கையில் மோகம் கொண்டு, தீரா நோயால் பீடிக்கப்பட்டு, தொழுநோயராக வாழ்ந்தவர் அருணகிரிநாதர். தினமும் முருகன் பணி செய்கின்ற அவர் தமக்கையார் கூறிய வாசகம் "நானும் ஒரு பெண்தான். ஏன் நீ அங்கு சென்று அலைகிறாய்" அது அருணகிரிக்கு ஞானத்தை ஊட்டியது. தான் இது வரை காலமும் செய்த தீய செயல்களை உணர்ந்தேன், இனி நான் பூமியில் வாழக் கூடாது என்று எண்ணி திருவண்ணாமலை உச்சியில் ஏறிக் குதித்தார். தீயவர்களுக்கும் அருள் புரிந்து அருள் செய்யும் முருகன் இரு கரங்களாலும் கையில் ஏந்தி, "அருணகிரி நீ இறக்கக்கூடாது. உன் ஆணவமலம் நீங்கியது. இனி நீ என்மேல் திருப்புகழ் பாடு" என "முத்தித்தரு" என்னும் திருப்புகழின் அடியையும் எடுத்துக் கொடுத்தார். அன்று முதலே அவர் முருகன் அடியவரானார். திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி என்னும் நூல்களை கிளி உருவில் இருந்து பாடினார் என்று சொல்லப்படுகின்றது.

மீன்பிடித் தொழிலே தனது தொழிலாகக் கொண்டு முருகன் நம்பிக்கையுடன் வாழ்ந்த கதிர்காமரை ஆட்கொண்டு பூசை முறைகளையும் சொல்லிக் கொடுத்து அடியவனாக்கியவன் செல்வச்சந்நிதி முருகன். இன்று கதிர்காமர் பரம்பரையினரே பூசை செய்து வருகின்றனர். தன்னை அன்புடன் வழிபடும் அடியார்களுக்கு எந்நிதியும் வழங்கி நிம்மதியையும் கொடுத்து ஆட்கொண்ட அடியார்கள் தொகையினை அளவிடவும் முடியுமோ? அதுபோல் ஆணவத்துடன் வந்து, குறும்பு செய்கின்ற கொடியவர்களுக்கு நோய்களைக் கொடுத்து, வைத்தியம் செய்தும் குணமடையாது, தன்னடியில் வந்து கலங்குகின்றவர்களுக்கு, பூசகர் மூலம் விபூதி உச்சியில் போட்டு குணமடைய வைக்கின்றார். அருள் முருகன் செல்வச்சந்நிதியான் ஆசாரம், பக்தி இன்றி நேர்த்திக்கடன் செய்பவர்களுக்கு,

*வெற்றி நிச்சயம் என்ற மனஉறுதியே வெற்றிக்கு ஆதாரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்களைக் காட்டி, ஆட்கொள்ளுகின்றார். ஔவையிடம் முருகன் சிறு பையனாக நாவல் மரத்தில் நின்று, இளைப்பாற நின்ற பாட்டி யைப் பார்த்து "சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என வினவ ஔவை சுட்ட பழம் வேண்டுமென்று பதில் கூற, பழங்களை நிலத்தில் போட, பழங்களில் மணல் படிந்த தால் ஊதி பழங்களை உண்டார். அப் பொழுது பையன் "பாட்டி பழங்கள் சுடுகிறது நன்றாக ஊதிச் சாப்பிடு" என்ற பதிலைக் கேட்டு வெட்கமடைந்து, இது முருகனின் திருவிளையாடல் என்று நினைந்து வேண்டி னார். செருக்குடன் ஆலயத்திற்கு வருபவர் களுக்கு, சந்நிதியான் ஆலய தென்கீழ்த் திசையில், நந்திக்கருகாமையில் நிற்கும் நாவல் மரம் நினைவூட்டுவதாக அமைந்திருப் பது செல்வச்சந்நிதியான் புதுமையன்றோ? செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் உள்வீதி, மேற்குத் திசையில் நிற்கும் பூவரசமரம், பல காலம் தவம் கிடந்து இறையடி அடைந்த யோகியை நினைவூட்டுவதாக விளங்குகிறது. எனவே சந்நிதியான் ஆலயத்தில் நிற்கும் இரு விருட்சங்களும் புதுமையுடையனவாக விளங்குவதை உணர முடிகின்றது.

காசிப முனிவர்களின் பிள்ளைகள், தாரகன், சிங்கன், சூரன் ஆகியோரும் ஏனை யோரும் பூமியில் உள்ள அண்டங்களை ஆள முருகனுடன் போருக்கு வந்தனர். தாய் மாயையின் சொற்படி, தேவர்களை அடக்கி, செய்யக்கூடாத தொழிலைச் செய்ய வைத் தும், துன்புறுத்திய சூரன், தாரகன், சிங்கனை வதை செய்து, சேவலும் மயிலுமாக ஏற்றுக் கொண்ட முருகன் அருள் புரிந்ததை முருகன் திருப்புராணத்தில்

"தீயவை புரிந்தாரேனும்
குமரவேல் திருமுன் உற்றால்
தூயவராகி மேலை
தொல்கதி யடைவர் என்கை
ஆயவுங் வேண்டும் கொள்ளோ
அடுசமர் இன்நாட் செய்த
மாயையின் மகனும் மன்றோ
வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்.

என்னும் பாடல் மூலம் முருகனின் அருளை விளக்குகின்றார். ஆணவத்தை அடக்கி அருள்பாலிக்கும் முருகனின் பெரு மையை அறிய வைக்கின்றார்.

கதிர்காமக் கந்தன் கொடியேறி விட் டது. பலாப்பழமும் பழுத்துவிட்டது. யாரிடம் இப்பழத்தைக் கொடுத்தனுப்பி வைப்பது என்று சொல்லிக் கண்ணீர் வடித்தார் இடைக்காட்டு வள்ளிப்பிள்ளை. "முருகா நான் என் செய்வது என்று சொல்லி பலாப்பழத்தை கத்தியால் பறித்தாள். அவ்வளவுதான் பலாப்பழத்துடன் கதிர்காமக் கந்தன் வாசலில் நிற்பதை உணர்ந் தாள். கதிர்காமக் கந்தனை மனமுருக வேண்டி பலாப்பழத்தைப் படைத்தாள். விபூதியை உடல் எங்கும் பூசி ஆனந்தக்கூத்து ஆடி வேண்டி நின்றாள். கதிர்காமக் கந்தனைக் கண்டு விட்டேன், அவன் அருள் பெற்றுவிட்டேன் என்று எண்ணும்போது வீட்டு நினைவு அவள் மனதில் உதித்தது. என் கணவர் தேடுவார் எப்படிச் செல்வது முருகா என வேண்டினாள். என்ன அதிசயம் வீட்டில் நிற்பதை உணர்ந் தாள். வீட்டில் கணவரும் அவர் உறவினரும்

*எல்லாம் இழந்தாலும் கலங்காதே! வெறும் பாத்திரம்தான் நிரப்பப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதைக் கண்டு அதிசயித்தாள். கணவன் தனது மனைவியைப் பார்த்து, வள்ளி உன்னைக் காணாது எத்தனை இடங்கள் தேடினோம். எத்தனை எண்ணங்கள் கொண்டோம். நீ எங்கே போய் வந்தாய் சொல்லு எனக் கேட்டான். அதற்கு வள்ளி படைத்த பலாப் பழத் துண்டையும், முருகன் வழங்கிய விபூதியையும் காட்டி கதிர்காமம் சென்று வந்தேன் என்றாள். இவள் கூறிய வார்த்தையைக் கேட்டு வியப்படைந்து கதிர்காமக் கந்தனின் அருட் கடாட்சத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இதுபோல் இடைக்காட்டு சோதி வைரவர் ஆலய பின்புறமாக வசித்த சின்னத்தம்பியின் பிள்ளைகள், தந்தை இறந்தபின் தாயாரை அழைத்துக்கொண்டு கதிர்காமம் சென்றனர். மலை ஏறும் படியில் தாயாரை இருக்கச் சொல்லிவிட்டு பிள்ளைகள் மலை ஏறினர். தாயார் அப்படியில் இருந்து "கந்தா எனக்கு உனது உச்சிமலை பார்க்கமுடியவில்லையே, வயது முதிர்ந்ததனால் நான் மலை ஏறமாட்டேன் என என்னை இங்கே இருத்திவிட்டுப் போய்விட்டார்கள். என் செய்வேன்" என முருகனை வேண்டினாள். வயது முதிர்ந்த ஒரு கிழவனார் வந்து "ஏன் அம்மா இங்கு இருக்கிறீர்? என வினவினார். அப்பொழுது அம்மணி தாத்தா, நான் முதிர்ந்தபடியால், மலை ஏற முடியாதென பிள்ளைகள் விட்டு போய்விட்டார்கள் என்று கூறினார். அதன் பின் அந்த அம்மா தான் உச்சியில் நிற்பதையும், வத்தகப்பழம், பை நிறைய விபூதிச்சரையுடன் நிற்பதையும் உணர்ந்து, முருகா என்னை உச்சிமலைக்குக் கூட்டி வந்தாயா? உன் புகழை எப்படிக் கூறுவேன், உன் திருவருளை யார் அறிவாரென நினைக்கும்பொழுது, பிள்ளைகள் ஓடிவந்து எப்படி அம்மா வந்தாய் என வினவினர். வத்தகப்பழம், விபூதி யார் தந்தது என வினவினார்கள். கதிர்காமக் கந்தனின் திருவருளை மெச்சிப் புகழ்ந்தனர். ஐந்து வருடங்களுக்கு முன் இடைக்காட்டு சின்னத்தம்பி மனைவிக்கு அருள் கதிர்காமக்கந்தனால் வழங்கப்பட்டது. என்னை நம்பி உச்சிமலை ஏறவந்த அடியவளை, பிள்ளைகள் விட்டு போய்விட்டார்கள். இனி என் கடமைதான் இது என்று எண்ணியாற்போல், உச்சிமலை கொண்டுபோய்ச் சேர்த்து, வத்தகப்பழமும் விபூதியும் கொடுத்து வழிபட முருகன் அருளினார் என்பதைப் பார்க்கும்போது மனிதர்களிடம் முருகன் கொண்ட பெருங்கருணை வெள்ளிடை மலைபோல் தோன்றுகின்றது.

ஆணவத்தை உடையவர்களின் செருக்கை அடக்கி அருள் பாலிக்கும் கடவுளாக முருகன் விளங்குகின்றானென்பது யாவரும் மறுக்கவோ மறக்கவோ மாட்டார்களென்பது உண்மையிலும் உண்மை.

**ஆறுமுகா வேலவா வா என்றே அருள்பெற்று மகிழ்வேன்**

காலிருக்கும் போது நான் நடந்து வருவேன் - எந்தன்
கையிருக்கும் போதும் உனைக் கூப்பித் தொழுவேன்
வாயிருக்கும் போது உனை வாழ்த்தி மகிழ்வேன் - எந்தன்
மனம் இருக்கு உனை என்றும் போற்றிப் புகழ்வேன் - உனது
கோவிலெங்கும் நாடித்தேடிக் கும்பிட்டெழுவேன்
ஏலாத நிலை தந்து எமை ஒதுக்கிடாதே முருகா
ஆவிவிட்டு உடல் பிரியுமுன்னே உனதடி பற்றித் தொழுவேன்
ஆறுமுகா வேலவா வா வா என்றே அருள்பெற்று மகிழ்வேன்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*உலகைப் பார்த்து வாழ்பவன் சராசரி மனிதன் உலகமே பார்க்க வாழ்பவன் சாதனை மனிதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி (தொடர்ச்சி...)

– திரு **ஆ.தா.இ. ஜெயபாலன்** அவர்கள் –

நாம் வாழ்க்கையில் தினசரி தவறாமல் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி எடுத்துச் சொல்கிறார் தவயோகி.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை

(இறைவற்கு- இறைவனுக்கு இலிங்கம் அல்லது மூர்த்தி யாவர்க்கும்- ஏழை தனவந்தன் எல்லோர்க்கும் பொதுவாக ஆம்- ஆகும் அதாவது செய்யக்கூடிய எளிய காரியமாகும்.)

தினந்தோறும் பூசையில் ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமாகும். அதை ஒரு கிரமமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை

(ஒரு வாய் உறை- ஒருவாய் ஏதேனும் உணவு)

பசு என்பது எந்த ஊமைப் பிராணியையும் குறிக்கும். பசுவுக்கு ஒரு வாய் உணவு கொடுப்பது யாவர்க்கும் ஆகக்கூடிய எளிய செயல். இது ஜீவ காருண்யத்தை வளர்க்கின்ற தினசரி ஒழுக்கமுறையாகும். இதைச் செய்யுங்கள்.

யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

நாம் உண்ணும் ஒரு பிடி பவியாக எடுத்து வைப்பது பழைய ஆசாரம். உணவில் ஒரு கவளம் பிற ஜீவனுக்கு என்று எடுத்து வைத்து விடுவது புராதன வழக்கமாகும். இது எல்லோராலும் ஆகக்கூடிய அறச்செயல்தான். இதைத் தவறாமல் செய்ய வேண்டும் என்கிறார் தவமுனி.

யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே.

பிறரிடம் கடுஞ்சொல் பேசாமல் அதைச் சொல்லும்போதும் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் ஆகக்கூடிய செயலே அதைப் பழக்கத்திற்கு கொண்டுவர வேண்டும்.

ஆண்டவனை வழிபடுவதும் பிற உயிர்களிடத்தில் கருணை காட்டுவதும் இனிய பேச்சும் எமது வாழ்க்கைப் பண்பாகும். இந்தக் கடமைகளை எவ்வளவு ஏழையாக இருந்தாலும் எல்லோராலும் செய்ய முடியும். அதைச் செய்ய வேண்டும் என்பதை யாவர்க்கும் புரியும்படியான தமிழில் எடுத்துச் சொல்கிறார் தவயோகி இந்த திருமந்திரப் பாட்டில் சொல்கிறார்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே.

இந்தப் பாட்டில் முனிவர் சொல்லியவற்றை ஒருவன் செய்தானானால் அவன் பூரணம் அடைந்த மனிதனாவான்.

தர்மத்தையும் தர்மம் செய்யும் முறைகளையும் எடுத்தோதிய திருமூலர் அன்பின் சிறப்பையும் விளக்குகிறார்.

*துன்பங்களைக் கண்டு அஞ்சாமல் இருப்பதே விரைவான முன்னேற்றத்திற்கான வழியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்

அன்பு என்றும் சிவம் என்றும் வெவ்வேறாக பிரித்து சொல்வது தவறு என்கிறார். இரண்டும் ஒன்றே என்கிறார்.

அன்பே சிவமாவ தாரு மறிகிலார்

அன்புதான் கனிந்து கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறிவதில்லையே என்று மனம் வருந்துகிறார். அறிகிலார். அறியமாட்டாமல் அலைகிறார்களே என்பது தவமுனியின் துயரமாகும்.

அன்பே சிவமாய் யமர்ந்திருந் தாரே

அனிபிலே சிவத்தைக் கண்டு அந்தப் பேரின்பத்திலே பதிந்து நிற்பார்கள். அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்துவிட்டால் அந்த அன்பு வெள்ளத்திலே இதயம் திளைத்து சிவானந்தப் பேறு பெறுவார்கள்.

"அமர்ந்திருப்பார்" என்று சொல்லாமல் "அமர்ந்திருந்தான்" என்று முனிவர் சொல்வதன் பொருளைக் கவனிக்க வேண்டும். அந்தப் பேரின்பத்திலே அமர்ந்து விடுவார்கள். சந்தேகமில்லை என்பதை உறுதியோடு உணர்த்துவதற்காக எதிர்காலத்தை இறந்த காலமாகப் பாடுகிறார்.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

அன்பு என்றும் சிவம் என்றும் நினைத்த மாத்திரத்திலே நிஷ்டை கூடிவிட்டது முனிவருக்கு! மோனத் தவத்தில் ஆழ்ந்து விட்டார். பின்பு சிவதரிசனம் பெற்று பாடுகிறார்.

பொன்னைக் கடந்து இலங் கும்புவித் தோலினன்
கம் புலித் தோலினன்

(பொன்னை- தங்கத்தை கடந்து இயங்கும்- மிஞ்சும்படியான பிரகாசத்துடன் ஒளி வீசுகின்ற புலித்தோலினன்- புலித்தோலை ஆடையாக உடைய பெருமான் தோலினன்- தோலை ஆடையாக அணிந்தவன்)

பொன்னைக் கடந்து இலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை

(மிளிரும்- பளபளக்கின்ற இளம்பிறை- இளம்பிறைச் சந்திரன்)

மின்னல் தோன்றியதும் மறையக்கூடியது. ஆனால் சிவபெருமானுடைய சடையிலே மின்னல் கீற்று ஒன்று என்றும் மறையாமல் நிற்கிறது.

மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை

(மின்னிக் கிடந்து மளிரும்- மின்னிக் கொண்டு மறையாமல் நின்று ஒளி வீசுகிறது.)

மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்

(துன்னிக் கிடந்த- மேனியிலே பூசிக் கிடக்கின்ற, சுடுபொடி- திருநீறு ஆடி- ஆடல் புரிகின்ற நடராஜன். சுடுபொடி ஆடிக்கு- திருநீறு தரித்த நடராஜனிடம், துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்கு- மேனி முழுவதும் திருநீறு பூசி ஆடல் புரிகின்ற நடராஜனிடம்)

*மெதுவாக நடக்கும் தோல்வியை வேகமாக ஓடிப்பிடிக்கிறது சோம்பல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்பு தானே.

அந்த நடராஜனோடு என்னுடைய அன்பு பிரியாமல் பிணைந்து நிற்கிறதே- இது முனிவருடைய ஆனந்தமாகும்.

பொன்னைக் கடந்து இலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்பு தானே.

பெருமானின் தரிசனத்தைக் கண்ட முனிவர் நமக்கு புலித்தோலையும் சடையில் மின்னும் பிறையையும் மேனித் திருநீற்றையும் சொல்லி நிறுத்துகிறார். கைதேர்ந்த ஓவியன் இரண்டு மூன்று கோடுகளில் ஒரு வடிவத்தை சித்தரித்து நிறுத்துவதுபோல், சொல்லுக்கடங்காத பொருளை முனிவர் தோலும் பிறையும் சுடுபொடியும் சொல்லி நம் கண்முன் நிறுத்துகிறார். பாட்டை பக்தியுடன் ஓதினால் அதுவே நாம் செய்யும் தவமாகும்.

இறைவனுடைய அருளைப் பெறவேண்டும் என்பதற்காக மக்கள் விரதங்கள்பூண்டு நோன்பு இருக்கிறார்கள். உடம்பை வருத்தி யோகப் பயிற்சி செய்கிறார்கள். துறவுபூண்டு சரீரத்தை துன்புறுத்தி இந்திரியங்களை ஒடுக்கப் பார்க்கிறார்கள். இவர்களை நோக்கியே பாடுகிறார் தவயோகி. அன்பு ஒன்றினால்தான் என் அன்பை அடைய முடியுமென்று

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்

(என்பு- எலும்பு இறைச்சி தசை)

எலும்பையே விறகாகப் போட்டு உடம்பின் தசைகளை கறிகாயைப் போல் வறுக்கும் சட்டியில் இட்டு தங்க நிறம் அடையும் வண்ணம் நன்றாக பொரியும்படி வறுத்தாலும்,

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டு
பொன் போல் கனவில் பொரிய வறுப்பினும்

அதாவது கடுமையான தவங்களாலும் விரதங்களாலும் இந்த உடம்பை எவ்வளவு தூரம் வருத்திய போதிலும்

அன்போடு உருகி அகம்குழை வார்க்கு அன்றி

(அன்பொடு உருகி- அன்பினால் உருகி அகம் குழைவார்களன்றி- உள்ளம் இளகி நெகிழ்கிறார்க்கல்லாமல் மற்றவர்களுக்கு)

என்போன் மணியினை எய்தஒண் ணாதே.

(என் போன் மணியினை- தங்கமணியான என் அப்பனை, எய் ஒண்ணாது- அடைய முடியாது. "என்" என்பது திருமூலருடைய உள்ளம் அன்பினால் உருகி குழைவதைக் காட்டுகிறது)

அன்பினால் உருகி உள்ளம் குழைந்தால் அல்லாமல் என் அப்பனை அடைய முடியாது! இதயம் உருகாமல் உடலை வருத்தி எத்தனை தவங்கள் இருந்தும் பயனில்லை. அன்பு ஒன்றுதான் இறைவனை அடையும் மார்க்கம்.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்

*சோர்வு, வறுமை, தீயசெயல் மூன்றிலிருந்தும் நம்மைக் காப்பது உழைப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடு உருகி அகம்குழை வார்க்கு அன்றி
என் போன் மணியினை எய்தஒண் ணாதே.

உடலை வீணாக வருத்துவதை விட்டு அன்பைச் செலுத்தி அதனால் தன்னுள்ளத்திலும் இன்பம் அடைந்து, இறைவனையும் திருப்தி செய்வதே முறை என்கிறார் தவமுனி.

அன்போடு மனம் குழைந்து இறைவனை வழிபடும் பக்தர்களுக்கு அவனுடைய அருள் எப்படிக் கிடைக்கிறது எனப் பாடுகிறார்.

ஈசன் அறியும் இராப்பக லும்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிசுசெய் வார்களைத்

(ஈசன் அறியும்- இறைவனுக்குத் தெரியும், இராப் பகலும்- இரவும் பகலும் அதாவது இடைவிடாமல் வேறு பொருட்களில் இச்சை செலுத்தாமல், தன்னைப் பாசத்துள் வைத்து- அன்போடு இறைவனை ஆராதித்து அதாவது தன்னையும் இறைவனையும் நன்றாகப் பிணைத்துக்கொண்டு பரிவு செய்வார்களை- பக்தி செலுத்துகிறவர்களை)

ஈசன் அறியும் என்று கூறும்போது, யார் அன்பு செலுத்துகிறார்கள். எவ்வளவு செலுத்துகிறார்கள் என்பதெல்லாம் ஈசனுக்குத் தெரியும். உலகத்தார்க்கு தெரிய வேண்டியதில்லை என்பது முனிவரின் கருத்தாகும்.

தன்னைப் பக்தியோடு வழிபடுகின்ற பக்தர்களை இறைவனுக்குத் தெரியும். அதனால் நாம் செய்யவேண்டியது என்ன?

தேசு உற்று இருந்து செயல் அற்று இருந்திடில்

(தேசுற்று அறிந்து- தெளிவடைந்து அந்த ஞானத்தோடு, செயலற்று இருந்திடில்- எல்லாம் ஈசன் செயலே, நமது செயல் ஒன்றுமில்லை என்று ஆணவம் ஒழிந்த நிலையிலே இருந்தால்)

ஈசன் வந்து எம்மிடை ஈட்டிநின் றானே.

(ஈசன் வந்து- இறைவன் அவனாகவே விரைந்து வந்து, எம்மிடை- எம்மிடத்தில், ஈண்டி நின்றான்- ஆலிங்கனம் செய்வான்போல் மிக நெருங்கி நின்று கொள்வான். "நின்றானே" என்பதிலுள்ள இறந்தகால வினையும் "ஏ" காரமும் உறுதியையும் அதிலுள்ள ஆனந்தத்தையும் காட்டுகின்றன.

நமக்கு தொழில் அன்பு செய்தல் ஒன்று தான்- வேறு செயல் இல்லை. அரண் புகுந்து இறைவனுக்கு பத்தி செலுத்துவோமானால் திருவருள் தானாகவே வந்து அணைந்து கொள்ளும் என்கிறார் தவமுனி.

ஈசன் அறியும் இராப்பக லும்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய் வார்களைத்
தேசு உற்று இருந்து செயல் அற்று இருந்திடில்
ஈசன் வந்து எம்மிடை ஈட்டிநின் றானே.

(தொடரும்...

அனைத்தும் தன்னுடையது என நினைப்பதுதான் துக்கத்தின் காரணம். எதுவுமே எனக்குச் சொந்தமில்லை என நினைப்பது சுகம். மகிழ்ச்சி. நீயே யாரென்று உனக்குத் தெரியாது! பின்னர் எதனை உனக்குச் சொந்தம் என்று கூறமுடியும்?

*மனிதனின் மனஉறுதி மலைகளையும் தகர்த்தெறியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடமும் இறையும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மனிதப் பிறவி மிக உயர்ந்துள்ளது: சக்தி வாய்ந்தது, பகுத்தறியும் உணர்வே அதன் சக்தி உரிய முறையில் ஆகும். இப் பிறவியை யாம் பயன்படுத்த வேண்டுமெனின் எம்மிடம் பக்தி, அன்பு, கருணை, ஒழுக்கம், புரிந்துணர்வு, முயற்சி ஆகிய நற்குணங்கள் இருந்தே ஆக வேண்டும். அவற்றை நாம் அன்றாடம் பயின்றே ஆக வேண்டும். எமக்கு இப்பிறவியை அளித்த ஆண்டவனை நாம் மகிழ்விக்க வேண்டுமானால், அவர் அருளைப் பெறவேண்டுமேயானால் நாம் மேற்கூறிய நற் பண்புகளைக் கடைப்பிடித்தல் அவசியம் ஆகின்றது.

எமது வாழ்வை சமயத்தோடு இறை வழிபாட்டோடு இணைத்து வாழ நாம் பழகிக் கொள்ள வேண்டும். நாம் மட்டும் தூய வாழ்வு வாழ்ந்தால் போதாது, எமது இளைய தலை முறையினருக்கு நாம் இவற்றை உணர்த்தி யாக வேண்டும். இது எமது தலையாய கடமை ஆகும்.

அன்பு, கருணை, பணிவு, மூத்தோரை மதித்தல், ஒழுக்கம், ஆகியவற்றிற்கும் சமயத் துக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. இந்த நற்குணங்கள் எம்மிடம் இருப்பின் எம்மையே அறியாமலேயே எம்மிடம் தர்ம சிந்தனை இருக்கும். தீயவற்றைத் தீண்டும்போது பயம் ஏற்படும். இந்தப் பயம் நல்ல மார்க்கங்களில் எம்மை இட்டுச் செல்லும். நல்ல வழிகளில் ஒன்று பக்தி மார்க்கம் ஆகும்.

ஆகவேதான் இந்த நற்பழக்கங்களை நாம் எம் இளம் சந்ததியினரின் மனதில் ஆரம்பத்திலேயே விதைத்து விடவேண்டும். இதனால் வளரும் சிறார்கள் நல்லதையே நாடுவர், நல்லதையே சிந்திப்பர், நல்லதையே செய்வர். தீயவைக்கு அஞ்சுவர். இதன் பய னாக முதலில் வீடு பயன் அடையும் தொடர்ந்து நாடும் பயன் அடையும்.

எமது பிறப்பினால் பெற வேண்டி யதை காலமுள்ள போதே யாம் பெற முயற் சிக்க வேண்டும்.

மீண்டும் பிறவாமல் இருக்க முயற்சி செய்வதே மனிதப் பிறவியின் இலட்சியமாகும்.

ஏதோ சம்பாதிப்பதும், சாப்பிடுவதும், இறப்பதும் தான் மனிதனின் வாழ்க்கையல்ல.

வெந்ததைத் தின்றுவிட்டு விதி வந் தால் சாவோம் என்று சாமானியமாக இராது, உன்னதமான மனிதப் பிறவியின் பயனை, நாம் பக்தி மார்க்கத்தை, அஹிம்சையை, தர்மத்தை, கருணையைக் கடைப்பிடித்துப் பெற முயலவேண்டும்.

எமது மனதில் பக்தி, இறை நம் பிக்கை, தூய்மை இருப்பின் நாம் யாருக்கும் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.

அப்பர் சுவாமிகளின் வாழ்வில் இடம் பெற்ற ஒரு சம்பவத்தைப் பாருங்கள்.

வேற்று மதத்தினனான மன்னன் அப் பருக்கு ஆள் அனுப்பி அவரைத் தன்னிடம் வரும்படி கட்டளை பிறப்பித்தான். பக்தி வைராக்கியத்தில் இருந்த அப்பர் சுவாமிகள் மன்னன் கட்டளைக்கும் சிறிதும் அஞ்ச வில்லை.

"நாம் ஆர்க்கும் குடி அல்லோம்" என்று பதில் அளித்தார் அப்பர் சுவாமிகள்.

மன்னன் அழைப்பினை மறுத்தால் மரண தண்டனை கிடைக்கும் என ஏவலர் அச்சுறுத்தினார்.

*அறிஞர்கள் அறிவைத் தேடுகிறார்கள். முட்டாள்கள் அதைப் பெற்றதாக நினைக்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எமனை அஞ்சோம்" என்றார் அப்பர் சுவாமிகள்.

"நரக வேதனைக்கு உட்படுவீர்" என்றார்கள், "நரகத்தில் இடர்ப்படோம்" என்று பதில் வந்தது அப்பர் சுவாமிகளிடமிருந்து.

இவ்வாறான அவரது பதில்களுக்குக் காரணம் அவர் உள்ளத்தில் பக்தி உணர்வும் மன வைராக்கியமும் ஓங்கி இருந்தமையே ஆகும். பக்தி ஓங்கி வர பிறப்பு இறப்பு பற்றிய பயம் அகலும். பக்திக்கும் உலகப் பற்றுக்கும் வித்தியாசம் உண்டு.

பக்தி, அனைத்தையும் தன்மயமாகக் கருதுகிறது. தூய அன்பை உருவாக்கிறது. உலகப்பற்றோ எம்மைத் தவறுகள் செய்யவும் வழி அமைக்கின்றது. ஆசை திருட வைக்கிறது. ஒரு உயிரைக் கொல்லுதலும் பாவம் தான். உரிய நேரத்தில் எமது கடமையைச் செய்யாமலிருத்தலும் அதற்கு ஈடான பாவம் தான்.

எம்மால் பிறருக்குத் துன்பம் ஏற்படாமல் வாழவேண்டும். என்று நினைப்பது மிக உயர்ந்த எண்ணமாகும். இவ்வாறு எண்ணிப் பார்த்தால் நாம் செய்யும் தவறுகள் எமக்கு எளிதில் புலப்படும். எமது தவறுகள் மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டாலும், அவை எமக்கு நன்கு தெரிந்துவிடும்.

எனவே மனிதப் பிறவியில் நாம் சாதிக்கவேண்டியவற்றுள் முதன்மையானது "தன்னைத் தானே திருத்திக் கொள்வதாகும்" இது பற்றிச் சிந்தித்துச் செயற்படுவோமா?

---

## நீ காணும் உலகம்

"இவ்வுலகம் மிகப் பெரும் சமுத்திரம் போன்றது எனவும், அதில் உனது வாழ்க்கையை ஒரு சிறு துளி நீரைப்போன்றது எனவும் உன்னிடம் பலர் கூறியிருப்பார்கள். இவ்வுலகம் உனக்குத் தரும் வாழ்க்கையை பெருந்தன்மையோடு ஏற்று, அதில் கிடைப்பதை வைத்து மகிழ்ச்சியாக வாழ்வதே சாதுரியமானது என அவர்கள் கூறுவார்கள். அதை விடுத்து இவ்வுலகினதும் சமூகத்தினதும் போக்கை எதிர்த்து எதிர்நீச்சல் போடுவாயாக இருந்தால், உனது வாழ்க்கையே மண்ணோடு மண்ணாகிவிடும் என அவர்கள் உன்னைப் பயமுறுத்துவார்கள்.

இவ்வாறான மனிதர்களை நீ எதிர்கொண்டால் அவர்களது அறிவுரைகளை துளிகூட செவிமடுக்காதே... இன்று நீ காணும் உலகம் உன்னைப்போன்ற மனிதர்களால் உருவாக்கப்பட்டதே. அம் மனிதர்கள் உன்னைவிட எதிலும் உயர்ந்தவர்களாக இருக்கவில்லை. அறிவாளிகளாக இருக்கவில்லை. அவர்களால் இவ்வுலகை உருவாக்க முடியும். ஆனால், நிச்சயம் உன்னால் இதை மாற்றியமைக்கவும் முடியும். இதில் ஒரு சக்திமிக்க மனிதராக மாற முடியும். அதை எவ்வாறு செய்வது என்பதை அறிந்துவிட்டால் நிச்சயம் உன் உலகம் முழுக்க முழுக்க உனது விருப்பப்படியே மாறும். அதில் நீ விரும்பிய சுதந்திரமும் நிம்மதியும் முழுமையாக உன்னை வந்தடையும்" என்கின்றார். அப்பிள் நிறுவனத்தின் தலைவரும், ஐடி துறையின் ஆளுமைமிக்க மனிதருமான Steve Jobs.

"இன்று உன் வாழ்வில் ஒரு தீர்க்கமான முடிவை நீ எடுக்கவேண்டும். உன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் உனக்கு வரையறுத்துத் தந்த உலகோடு உனது வாழ்க்கையை முடித்துக்கொள்ளப் போகிறாயா? அல்லது வேண்டா வெறுப்பாக எவ்வித இலக்கும் இன்றி வாழும் வாழ்க்கையை உதறிவிட்டு இவ்வுலகின் வரம்புகளை எல்லாம் உடைத்தெறிந்து உனக்கான உலகை நீ உருவாக்கப் போகிறாயா? முடிவு உன் கையில்!" இதையும் அவரே சொல்கிறார்! சிந்திப்பீர்!!

*துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல வேறு ஒன்றும் போதிக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| ஆ. பாலசிங்கம் | மருதனார்மடம் | 500. 00 |
| ர. ஆகாஸ் | துன்னாலை வடக்கு | 5000. 00 |
| த. பாஸ்கரன் | தாவடி | 5000. 00 |
| சு. திருச்செல்வம் | கொழும்பு | 2500. 00 |
| திருமதி கார்த்திகா கையிலைநாதன் | சுதுமலை (கற்றல் செயற்பாட்டிற்காக) | 10000. 00 |
| செ. சண்முகலிங்கம் | திருநெல்வேலி | 1000. 00 |
| அ. பரமநாதன் | அளவெட்டி | 1500. 00 |
| S. கலாவதி | நுவரெலியா | 5000. 00 |
| பு. சிவகண்ணன் | கைதடி | 1500. 00 |
| திரு சிவகரன் குடும்பம் | துன்னாலை | 2000. 00 |
| R. விஜிதன் | கொழும்பு | 1000. 00 |
| செ. பத்மநாதன் | கைதடி | 500. 00 |
| ஜெ. கஜவேணி | சங்கானை | 5000. 00 |
| ம. ருக்மணிதேவி | சிறுப்பிட்டி | 1000. 00 |
| செ. பாலசுந்தரம் நினைவாக | தெல்லிப்பழை | 3000. 00 |
| இ. ஆறுமுகம் | மாவிட்டபுரம் | 7000. 00 |
| R. இராஜகுலேந்திரன் குடும்பம் | உடுப்பிட்டி | 30000. 00 |
| ஸ்ரீ அபிலசா | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| செ. மயூரன் | புன்னாலைக்கட்டுவன் | 2500. 00 |
| ப. சந்திரமோகன் | நவாலிவடக்கு | 5000. 00 |
| ரெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 1000. 00 |
| S. சிவசுதன் | சாவகச்சேரி | 2000. 00 |
| கு. கிரிதரன், கு. சசிதரன் | வவுனியா | 1000. 00 |
| செ. சரண்யா | மீசாலை | 10000. 00 |
| ந. ஸ்ரீகாந் | நோர்வே | 1100. 00 |

*எதையும் செய்யாமலிருப்பதைவிட ஏதாவது ஒன்றை செய்துகொண்டிருப்பது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு கேதீஸ்வரக்குருக்கள் | உசன் | 10000. 00 |
| கி. அபிலாஸ் | கைதடி | 2000. 00 |
| K. ரவீந்திரன் குடும்பம் | காரைநகர் | 5000. 00 |
| வ. கருணிகா | சிறுப்பிட்டி | 1000. 00 |
| N. வரதன் | அளவெட்டி | 5000. 00 |
| பா. சிவபாலன் | அளவெட்டி | 10000. 00 |
| சி. செல்வநாயகம் (செல்வம்ஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| தி. தனேஸ்வரி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| N. கஸ்பஜீம் | கைதடி | 5000. 00 |
| சி. மார்க்கண்டு, மா. பரமேஸ்வரி நினைவாக | சுன்னாகம் | 2000. 00 |
| சி. குமாரசாமி | அச்சுவேலி | 1000. 00 |
| ப. லித்திகேஸ், ப. கௌசிக் | கொக்குவில் | 500. 00 |
| T. தயாபரன் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு பரணிதரன் குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| திரு மகேந்திரராஜா குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| ம. ஜெயக்குமார் | நீர்வேலி | 1000. 00 |
| வை. வரதராணி | கற்கோவளம் | 1000. 00 |
| லோ. சர்மினி | அச்சுவேலி | 1000. 00 |
| கமலா குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| Dr K. குலேஸ்வரகுமார் | கொழும்பு | 2000. 00 |
| யோ. லிங்கேஸ்வரன் | கொடிகாமம் | மரக்கறி 2புட்டி அரிசி |
| செ. சக்திதரன் | கொழும்பு | 2000. 00 |
| நித்தியா கிருஷ்ணரமணன் | பருத்தித்துறை | 15000. 00 |
| யா/ கந்தரோடை த.க.வி. | சுன்னாகம் | 5500. 00 |
| N. குணரெட்ணம் குடும்பம் | சுதுமலை | 2000. 00 |
| கிஷா நந்தன் | நீர்வேலி | 10000. 00 |
| ம. சியாமளன் | கொழும்பு | 5500. 00 |
| ந. தெய்வேந்திரராஜா | வல்வெட்டி | 3000. 00 |
| K. செல்வராணி | பிரான்ஸ் | 20500. 00 |
| K. பேரம்பலம் | வெள்ளவத்தை | 2000. 00 |
| சி.க. சண்முகசுந்தரம் | கொழும்பு | 1000. 00 |
| N. ஜெயரட்ணராசா | சுழிபுரம் | 4000. 00 |
| சு. ராம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. மனோகரன் | கொக்குவில் | 15000. 00 |
| க. சரவணபவன் | சாவகச்சேரி | 2000. 00 |
| திரு ராஜேஸ்வரன் குடும்பம்<br>திரு மகாலிங்கம் குடும்பம்<br>திரு விக்னேஸ்வரன் குடும்பம் | இணுவில் | 2000. 00 |

*வாழ்க்கையைப் புரிந்துகொள்வதைவிட அதை வாழ்ந்து பார்ப்பதே சிறந்த முயற்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மு. அற்புதராசா | மட்டுவில் | 2000. 00 |
| திரு ஆனந்தம் | ஆவரங்கால் | 5000. 00 |
| S. பொன்னம்பலம் | சுன்னாகம் | 1000. 00 |
| கணபதிப்பிள்ளை சிவலிங்கம் | உரும்பராய் | 5000. 00 |
| சூரியமூர்த்தி கலைவாணி புறாப்பொறுக்கி | 10k உ.கிழங்கு, 10k பருப்பு, 1மூடை அரிசி | |
| ந. சிவபாலன் | கெருடாவில் | 2000. 00 |
| K. பிரபாகரன்<br>A. சஞ்சி<br>K. ஆகாஸ் | உடுப்பிட்டி | 2மூடை அரிசி |
| மா. திவாகரமூர்த்தி | லண்டன் | 2000. 00 |
| பிறேமா | கொழும்பு | 6000. 00 |
| வை.ச. பரஞ்சோதி | கோண்டாவில் | 1000. 00 |
| திருவருள் | சித்தங்கேணி | 1மூடை அரிசி |
| சோமசுந்தரம் நாகம்மா | சுன்னாகம் | 2500. 00 |
| திருமதி கந்தையா நினைவாக | கந்தரோடை | 5000. 00 |
| சி. ரவிக்குமார் | இந்தியா | 500. 00 |
| திரு வேல்மணி | இந்தியா | 500. 00 |
| ச. வைத்தியநாதக்குருக்கள் | பொலிகண்டி | 4000. 00 |
| திருமதி S. சாரதா, S. சோபிகா | கனடா | 2000. 00 |
| திரு சுஸ்ருதன் மூலம் | | |
| த. தர்மநாயகி நினைவாக<br>மு. யோகேஸ்வரி நினைவாக | கொக்குவில்<br>உரும்பராய் | 30000. 00 |
| T. சிவனேசன் மூலம் Dr. சிவபாலன் | அவுஸ்திரேலியா | 40000. 00 |
| திரு கணேசன் குடும்பம்<br>ஸ்ரீ பாலகிருஸ்ணன் குடும்பம்<br>திரு மணிவண்ணன் குடும்பம் | அச்சுவேலி | 3000. 00 |
| க. கணேசராசா | நீர்வேலி | 1000. 00 |
| முருகன் அடியார் | சாவகச்சேரி | 9000. 00 |
| S. தனுஜா | கோண்டாவில் | 10000. 00 |
| இ. உமாபதி | நீர்வேலி | 1000. 00 |
| திரு சிவசுப்பிரமணியம் | நீர்வேலி | 500. 00 |
| திரு ஆசைப்பிள்ளை ஐயா குடும்பம் | கோண்டாவில் | 10000. 00 |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 5000. 00 |
| க. தெய்வேந்திரம் | பண்டத்தரிப்பு | 2500. 00 |
| கே. தர்ஷ் | ஆவரங்கால் | 2000. 00 |
| ச. வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| துசி, கஜி | சுன்னாகம் | 2000. 00 |

*எதிர்ப்பவரிடம் துணிந்து நில். மதிப்பவரிடம் பணிந்து செல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சு. மதன் | திக்கம் | 1000. 00 |
| இ. குகதாசன் | கோப்பாய் | 5000. 00 |
| ஆ. விஜயானந், ஆ. குகானந்தன் | மானிப்பாய் | 2000. 00 |
| ஆ. கிருஷ்ணானந்தன் | மானிப்பாய் (u.k) | 2700. 00 |
| சு. பாலச்சந்திரன் | அச்சுவேலி | 5000. 00 |
| தி. கௌரிதேவி | அல்வாய் | 5000. 00 |
| நவிக்கா கிருபாகரன், கி. அகல்யன் | லண்டன் | 15000. 00 |
| S. கார்த்திக், S. கிருஸ்ணி | லண்டன் | 10000. 00 |
| பா. நிலக்ஷன், பா. திஷான் | லண்டன் | 5000. 00 |
| கந்தையா இராசதுரை | சிறுப்பிட்டி வடக்கு | மரக்கறி அரிசி |
| ஈஸ்வரதேவி ஆழ்வாப்பிள்ளை | கனடா | 2500. 00 |
| அருந்தவம் சிவமணி | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| பொ. செல்வக்காந்திமதி | மீசாலை | 5000. 00 |
| கமலதாஸ் கேசினி | நீர்வேலி | 500. 00 |
| ஆ. குலசிங்கம் | உடுவில் | 1000. 00 |
| சி. ஸ்ரீஸ்கந்தராசா நினைவாக | உடுப்பிட்டி | 10000. 00 |
| திரு சந்திரகோபன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| பி. தமிஸ்ரா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு குமாரலிங்கம் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| செல்லையா சுப்பிரமணியம் | திருநெல்வேலி | 7000. 00 |
| S. டயானந் | வேலணை | 500. 00 |
| திரு நடேசன் மூலம் குமுதினி நேசரத்தினம் | நினைவாக யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. சியாமளா | (u.k) ஊரெழு | 10000. 00 |
| ச. சாமிகா ஆதியாமலை (சுவிஸ்) | 10k பருப்பு, 3புட்டி அரிசி, | 4000. 00 |
| அருளம்பலம் சிவானந்தம் | நீர்வேலி | 2000. 00 |
| A. ராமநாதன் | புலோலி | 1000. 00 |
| R. கிருஷ்ணராஜ் | குப்பிளான் | 1000. 00 |
| ச. ரவித்தா | கந்தரோடை | 1000. 00 |
| இ. மனோகரன்<br>ம. செந்தில்ராஜ் (கனடா)<br>ம. குமரராஜ் | கொம்மந்தறை | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 5000. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 5500. 00 |
| க. பரமேஸ்வரி | மீசாலை | 1000. 00 |
| Dr ராதாகிருஷ்ணன் | நெல்லியடி | 5000. 00 |
| குணரெட்ணம் குடும்பம் | மானிப்பாய் 3புட்டி அரிசி | 2000. 00 |
| T. திஜிகரன் | அச்சுவேலி | 5000. 00 |

(தொடரும்...

*தைரியம், புத்தி, நுண்ணறிவு இவை மூன்றும் ஒருவருக்கு நல்ல நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் வெள்ளிப் பாடல்கள்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

சைவசமயத்தில் எழுந்த பக்தி இலக்கியச் செல்வங்களுட் திருவாசகமொன்றே அதியுயர்ந்த தோத்திரமாக மிளிர்கின்றது. இதன் சோடி நூல் திருக்கோவையார். இதைக் காமஞ் சான்ற ஞானப் பாடல் எனக் குருபரர் போற்றியுள்ளார். அதே பாணியிற் தேவார திரு வாசகத்தைப் பின்வரும் வரிகளிற் பாடினார்.

வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவம் மதித்தருளிய...

திருவிடை மருதூர் மும்மணிக்கோவை. கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் நான்மணி மாலையில் திருவாசகம் பற்றிப் பத்துப் பாடல்கள் எழுதியுள்ளார்.

செய்யவார் சடைத் தெய்வசிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூ வெனப் படுவது பொறி வாழ்பூவே.

-நான்மணிமாலை.

பிற்காலத்து இராமலிங்க சுவாமிகளும் இப்பக்திப் பனுவலை அனுபவித்து மனங் குழைந்து பாடிய பாமாலையில் யாவர் நாவிலும் தவழும் இரு பாடல்கள் வருமாறு:-

வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

-அருட்பா ஐந்தாந் திருமுறை 59.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் இங்கு நானடைதல் வியப்பன்றே.

-மேலது 62.

இவ்வண்ணம் பல்லோராலும் போற்றப்படும் திருவாசகத்தில் 656 பாடல்கள் தான் என திருவாசகப் பதிகத்தொகை பற்றிவரும் பாடற்றொகுப்பின் இறுதிப்பாடல் வரையறை செய்கிறது.

திருப்புலம்பல் மூன்றாகும் குலாப்பத் தற்புதமே
சென்னிதிரு வார்த்தை பத்து எண்ணப் பத்தாரும்
பரற்குரிய யாத்திரைப்பத் தொருபதாகும்
படையெழுச்சி இரண்டாகும் பதினொன்று வெண்பா

*அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டவாம் பண்டாய நான்மறை ஏழாம்
எட்டாகும் படையாட்சி மின்னே ரேழாகும்
அருட் பெறும்அச் சோவொன்பான் நாற்பத்தேழ் பதிகம்
அகவலுடன் பாட்டாறு நாற் றைம்பத் தாறே.

-திருவாசகப் பதிகத்தொகை 3.

இவ்வரிசையிலே அமைந்த முதற்பாட்டில் திருப்பூவல்லி, திருவுந்தியார் பத்தொன்பதென அறுதிஇட்டுக் கூறப்படுகிறது. ஆனால் பின்வரும் இரு பாடல்கள் சில பதிப்புகளில் மிகைப் பாடலாக இடம்பெற்றுள்ளன.

ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பாலுங் காவலென் றுந்தீபற

-திருவுந்தியார் 20.

மாவாரவேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ.

-திருப்பூவல்லி 20.

இவ்வண்ணமே அச்சோப்பதிகம் ஒன்பது பாடல் எனப் பேசப்பட்டாலும் ஒரு பதிப்பிலே பின்வரும் பாடல் இடம்பெற்றிருக்கிறது.

செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறிவுமறிவு எவ்வறிவோ
ஒத்தநில மொத்தபொருள் ஒரு பொருளாம் பெரும்பயனை
அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே.

தேவாரத்தில் இடைச்செருகலாகப் பல பாடல்கள் புகுந்துள்ளன. அதைப் பாடிச் சேர்த்தவர் வெள்ளியம்பலத்தம்பிரான் அவர்கள். எனவேதான் அவற்றை வெள்ளிப் பாடலெனப் பெயர் கொடுத்து வழங்கினர். பெரியபுராணத்தில் கண்ணப்பநாயனார் கதையிலும் சில பாடல்கள் புகுத்தப்பட்டுள்ளன என ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். இந்தச் செருகல் இராமாயணத்திலும் இடம்பெற்றிருக்கிறது. டி. கேசி இதைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நோக்கிலே வரும் மிகைப்பாடல்கள் சில வருமாறு.

பிணக்கற்று அவாவற்றுப் பேதைமையும் பிணியுமற்று
உணக்கிப் பசையறுத் தானுயிர் ஒன்றி நின்ற
குணக்குன்று வந்தென்னை ஆண்டலுமே என்னுடைய
கணக்கற்ற வாபாடித் தோணோக்கம் ஆடாமோ.

-திருத்தோணோக்கம்.

விடையனே விடமுண்டு வேதம் விளைந்த
விண்ணவர் வேந்தனே
இடையிலே உனக்கன்பு செய்து பெருந்துறைக்
கன்று இருந்தி லேன்

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையனே சைவநாதனே உனைச் சாருந்
          தொண்டரைச் சார்கிலாக்
கடைய னேனையும் ஆட்கொள்வான் வந்து
          காட்டினாய் கழுக்குன்றிலே.

நரியெலாம் தெரியா வணம் இந்த
          நாடெலாம் அறியும்படி
பரிகளாகப் படைத்துநீ பரிவாக
          வந்து மெய்க் காட்டிடும்
புரிகொள் நூலணி மார்பின் புலியூர்
          இலங்கிய புண்ணியா
கரிய மாலயன் தேடநீ வந்து
          காட்டினாய் கழுக்குன்றிலே.

-திருக்கழுக்குன்றப் பதிகம்.

படியதனிற் கிடந்திந்தப் பசுபாதந் தவிர்த்துவிடும்
குடிமையிலே திரிந்தடியேன் கும்பியிலே விழாவண்ணம்
நெடியவனும் நான்முகனும் நீர்கான்றுங் காணவொண்ணா
அடிகளெனக் கருளிய றார்பெருவார் அச்சோவோ.

பாதியெனும் இரவுறங்கிப் பகலெமக்கே இரைதேடி
வேதனையில் அகப்பட்டு வெந்துவிழக் கடவேனைச்
சாதிகுலம் பிறப்பறுத்துச் சகமறிய எனை யாண்ட
ஆதியெனக் கருளியவா றார்பெருவார் அச்சோவே.

-அச்சோப்பதிகம்.

இப்பாடல்கள் சில ஏட்டுப்பிரதிகளிலும், சைவசித்தாந்த மகா சமாஜம் திருவாசகப் பதிப்பிலும், மர்ரே அண்டுகம்பணியார் திருவாசகப் பதிப்பிலும் உள்ளன.

அன்னையும் ஆயமும் கேண்மின் களோ எனது
          ஆருயிர் ஆயசிவ பெருமான்
என்னது யான்என் னும்இவ் விரண்டும்
          என்னுளனாய் இருந்தே கவர்ந்தான்
முன்னை உறவும் பிறவும் காணேன்
          மூவுலகும் பரந்தெங்கும் தானாய்
இன்ன தளவென் றியம்ப ஒண்ணா
          இன்பவெள் ளத்தெனை இட்டனனே.

வானும் நிலனும் அடையக் கேண்மோ
          வள்ளல் பெருந்துறைமேய பெம்மான்
தானும்தன் தையலும் ஆகி என்றன்
          சதுரை யழிந்து மால் தந்த போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனும் உயிரும் உணர்வும் ஒன்றாய்
உரோம மெல்லாம் சிலப்பித்த தென்னே
யானும் எனைஅறி யாத வண்ணம்
இன்பவெள் ளத்தெனை இட்டனனே.

இவ்விரு பாடல்களும் சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் திருவாசகப் பாடல் என்றுள்ளன. இவ்விரண்டும் எப்பதிகத்தில் அமைந்தன என்று புலப்படவில்லை.

ஆதாரம் திருப்பனந்தாள் வெளியீடு. திருவாசகமூலம்.

## நயினையம் பதிவாழும் நாகபூஷணி அம்மன்

அலைகடல் நடுவே அழகுறவே கோயில் கொண்டு
அகிலத்தை வாழ்விக்கும் அன்னையவள் நாகபூஷணி
அனுதினமும் தன்னிடத்தில் அலைமோதும் உள்ளங்களை
அன்புடனே என்றும் ஆதரித்து அருள் பாலிக்கின்றாள்
அடியளித்து தலை வணங்கி அன்புருக தன்தலத்தை
பணிவுடனே வலம் வந்து பக்தி செய்வோரின்
துன்பங்கள் துயரங்கள் தொல்வினைகள் அகற்றி
தூயசம வாழ்வில் துலங்க வைக்கின்றாள்
நோய் என்று நொடி என்று நெட்டுரம் குடிகொண்டு
நிம்மதியில்லாமல் நொந்துவரும் அடியவரை
தாயென்று தானேற்று தயவுடன் மனம் இரங்கி
தண்ணருள் புரிந்து மனம் குளிர வைப்பாள்
போட்டிகள் பொறாமைகள் பொல்லாமைகள் - மற்றும்
பேதங்கள் பிளவுகள் பின்னடைவுகள் இல்லாமல்
போற்றும் சமுதாயம் பொலிவுடன் விழங்க
ஏற்றிய தீபம் போல் எல்லோர்க்கும் இரங்கி நிற்பாள்
ஏழாற்றுப் பிரிவோடு எதிர்நீச்சல் போட்டு
போராடி வந்து தன்னை பூசிக்க வருவோரை
ஏறெடுத்துப் பாராமல் ஏளனங்கள் செய்யாமல்
இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றவரம் தந்து நிற்பாள்
மாசற்ற சோதியே மன்பனைமேல் அன்புகொண்டு
மண்ணுலகில் வந்துதித்த மாண்புமிகு தெய்வமே
தேசுற்ற வானிலே திகழும் வெண்நிலவு போல்
திக்கெட்டும் ஜெயக் கொடியை திகழ வைப்பாய்
பாம்பணியும் பரமனுடன் பாகமுறவேயிருந்து
வான்புகழ வரம் கொடுக்கும் வள்ளலவள் - நாகபூஷனி
சேமமுறவே மக்கள் சிறப்பெல்லாம் வென்றெடுத்து
வாய்மை நெறி தழைத் தோங்க வழிசமைப்பாள் நாகபூஷனி.

-முருகுப்பிள்ளை செல்லத்தம்பி-

*சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

(தொடர்ச்சி...

## அத்தியாயம் – 08

## கர்மயோகம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 13. புலன்களின் தன்மை

புலன்கள் மிகப் பலமான ஏமாற்றுக் காரர் ஆகும். அவை எம்மைத் தவறான வழி களில் செலுத்தும் கொள்ளைக் கூட்டத்தினர் ஆகும். புலன்கள் என்ற இந்தக் கொள்ளைக் கூட்டத்தினரின் கொடிய செயல்களிலேதான் எமது உணர்வு சிறைப்படுத்தப்பெற்று உள் ளது. அத்துடன் அதுதான் எமது பந்தத்துக் கான மூலகாரணமே அன்றிச் செயல் எமது பந்தத்துக்கான மூலகாரணி அன்று. "நீ நான் செய்யமாட்டேன்" என்று கூறும்போது "நீ பிழை விடுகின்றாய்" நண்பனே! அர்ச்சுனா என்று கிருஷ்ணன் அர்ச்சுனனது மனதைத் தெளிவுபடுத்துகின்றான். வெறும் செயல் உன்னை என்ன செய்யப்போகின்றது? எனவே செயலைப் பொறுத்து உனது கீழ்ப்படிவு உன்னைப் பந்தப்படுத்தப் போவதில்லை. அது உன்னை விடுதலை அடையச் செய்யும். ஏன் அது உனக்கு விடுதலை தரும் என்றால் பிரபஞ்சச் செயலின் நோக்கம் ஆன்மாவை விடுதலை அடையச் செய்வதே ஆகும். பிர பஞ்சம் செயற்படுவது மனிதரைப் பந்தப் படுத்துவதற்காக அன்று. பிரபஞ்சப் படைப்பு முழுவதும் இறுதியில் நம்மை விடுதலைப் பாதை நோக்கியே அழைத்துச் செல்வதாக அமைந்து இருக்கிறது. அதனை நாம் பூரணத் துவத்தை உணர்ந்து கொள்வது எனலாம். அந்த இலக்கை நோக்கியே பிரபஞ்சம் வளர்ந்துகொண்டு இருக்கிறது.

### 14. இணைப்பே தெய்வம்

போய்க்கொண்டிருக்கும் ஒரு புகை வண்டியில் நாம் இழுத்துச் செல்லப்படுவது போலத்தான் பிரபஞ்ச இயக்கத்தில் நாம் இருக்கின்றோம். இந்த முழுப் பிரபஞ்சமும் ஒரு பெரிய வாகனம் ஆகும். அந்த வாகனம் தன்னைத் தானே நோக்கி ஓடிக்கொண்டு இருக்கின்றது. அதாவது, பிரபஞ்சம் தனது ஆன்மாவை அல்லது படைப்புக் கடவுளை அல்லது பூரணத்துவத்தை அல்லது பிர மத்தை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கின்றது. இந்த நிலையே உண்மையானதாக இருந் தால், எமது சிறிய ஆசைகளுக்கும் செயல் களுக்கும் பின்னாலுள்ள குறிக்கோளை மறந்து அக்குறுகிய நோக்கத்துக்காகச் செய லாற்றுவதும், அச்சிறிய ஆசைகளின் அடிப் படையில் சிந்திப்பதும் பொருத்தமாக இருக் காது. அதுமட்டுமன்றி அவற்றால் நாம் முன் னேறவும் முடியாது. எனவே, உனது தனித் துவத்தை அதற்குத் தியாகம் செய்யும் உணர் வோடு செயலைச் செய்யாது அதன்மூலம் தெய்வ உணர்வாகிய பெரும் நோக்கத்தினைப் படிப்படியாக அடையலாம். நீயே செயலுக்குக் காரணன் என்பதையும், நீயே வெளியேயுள்ள குறைபாடுள்ள இலட்சியத்துக்குக் காரணன் என்பதையும், கடந்த நிலையில் அத் தெய் வமே உள்ளது என்பதையும் அறிவாய். செய் பவனையும் அதனால் அடையும் இலட்சியத் தையும் அகம் அல்லது நான் என்றும் புறம் அல்லது இலட்சியப் பொருள் என்றும் கூறப்படும். இந்த அகத்தையும் புறத்தையும் இணைப்பதே தெய்வம் ஆகும்.

### 15. தொழப்படும் தெய்வம்

தெய்வத்தின் நிலைகள் பல உள் ளன. இதனாலேதான் பல சந்தர்ப்பங்களில் மதங்களிலே நாம் பல தெய்வங்களை வைத் திருப்பதாகத் தோன்றுகின்றது. உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கடவுளர்கள் இல்லை. அவை ஒரே கடவுள் வெவ்வேறு நிலைகளில் வெளிப்படும் பல நிலைகளே ஆகும். மதங்களில் உள்ள கடவுளர்கள் உண்மையில் கடவுளர்களே அல்லர். அவை அகம், புறம் என்பவற்றுக்கு இடையே பல்வேறு மட்டங்களில் இணைப்பு ஏற்படுத்தும் தத்துவத்தைச் செயற்படுத்தும் ஒரு பெரிய கடவுளின் பல்வேறு நிலைகளின் தோற்றமே ஆகும். பகவத்கீதையின் கருத்துப் படி, நாம் யோகத்தைப் பயிலும்போது எமது எல்லைக்கு உட்பட்ட தன்மையின் கீழ்மட்டம் ஒன்றில் இருந்து சற்று மேலான வேறொரு மட்டத்திற்கு நகர்ந்து செல்கிறோம். நாம் யோகத்தில் படிப்படியாக முன்னேறும்போது எமது எல்லைக்கு உட்பட்ட தன்மையிலும் படிப்படியாகக் குறைந்துகொண்டு செல்கின் றோம். ஆனால், இன்றுள்ள எமது எல்லைக்கு உட்பட்ட தன்மையைக் கடந்து அதன் மிக உயர்ந்த பரிமாணத்துக்குள் எம்மால் நுழைய முடியாது எவ்வளவு காலம்வரை நம்மால் அப்படி முடியாதெனின் எமது இன்றுள்ள எல்லைக்கு உட்பட்ட தன்மையை எல்லாம் கடந்த நிலையிலுள்ள தெய்வத்துள் நுழை யும் மட்டுமே ஆகும். அதுதான் உலக மதங் களில் உள்ள தொழுகை என்பதன் அர்த்தம் ஆகும். இந்த உயர்ந்த தொழுகையினையே நாம் கடவுளுக்குப் படைக்க வேண்டும். அத னையே தொழப்படும் தெய்வம் என அழைக் கின்றோம்.

## 16. கடக்கவேண்டிய படிகள்

தொழப்படும் தெய்வம் என்பது எமது சொந்த ஆன்மாவின் ஓர் உயர்வான உணர்வு நிலையே ஆகும். எமது சொந்த உயர் ஆன்மா எம்மை அழைப்பதே அன்றி வானத்திலுள்ள வேறொரு கடவுள் எம்மை அழைப்பது அன்று. வெளியிலே எந்தக் கடவுளும் இல்லை. உண்மையான கடவுள் எமக்கு உள்ளேயே இருக்கின்றார். அத்துடன் எமது சொந்த உயர் மட்டமே எங்களை மேல்நோக்கி எழுமாறு விரும்புகின்றது. மேலும் அது எம்மை விழிப் படைந்து தனது உயர்மட்டத்துள் நுழையு மாறு அழைக்கின்றது. எம்மிடத்திலே இந்த உயர்வான தத்துவம் இருப்பதனை நாம் உணருவோம் ஆயின் அத்தத்துவத்துக்குள் எமது தற்போதய எல்லைக்கு உட்பட்ட தன்மை மட்டுமன்றி, எமது ஆசைகளினால் அடையவிரும்பும் எல்லைக்கு உட்பட்ட பொருள்களையும் கடக்கக்கூடிய ஓர் அம்சம் இருப்பதனை அறிவோம். அதனால் அகம், புறம் என்பவற்றுக்கு இடையே தற்போதுள்ள எதிர்ப்பின் எல்லைக்கு உட்பட்ட தன்மைகளை யும் நாம் வென்று எடுப்போம். மகாபாரதம் என்ற இதிகாசத்தில் பதினெட்டு நாள் நடத்த யுத்தத்தில் நாமும் ஓர் வெற்றியைப் பெற்றவர் ஆவோம். அதன் குறிப்பு எமது உயர்வு பதினெட்டுக் கட்டங்களை உடையதாக இருக் கலாம் என்பதே. அக்கட்டங்கள் எவையெனக் கண்டுகொள்வது இலகுவானது அன்று. இன் னும் நாம் எத்தனை படிகள் அடைய வேண் டும் என்பதனையும் நாம் அறிந்துகொள்வது மிகக் கடினமே.

## 17. கடந்த நிலை

நாம் கடக்கவேண்டிய அவ்வழியில் உள்ள ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு தெய் வத்தை நாம் சந்திக்க வேண்டும். அந்த ஒவ் வொரு படியிலும், எமது தற்போதுள்ள எல் லைக்கு உட்பட்ட தன்மையை ஒப்படைக்கும் வடிவில் யாகம் அல்லது தியாகத்தை நாம் செய்துகொண்டு இருக்கின்றோம். "தெய்வத் தின் வடிவில் ஓர் உயர் உண்மையினை உணர்கின்ற ஈடுபாட்டில் உனது தற்போது உள்ள எல்லைக்கு உட்பட்ட தன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகொள்ளத் தேவையான ஓர் நிபந்தனை ஆக ஒரு செயலை நீ நிறைவேற்றும்போது ஓ அர்ச்சுனா! எனது பிரிய நண்பனே! ஏ மனித சமுதாயமே! கடவுளின் குழந்தைகளே! அதுதான் சரியான செயலின் தத்துவம் ஆகும். அதனையே இங்கு முழுமையாகக் கர்ம யோகம் என்று விளக்கப்பெறுகிறது. அத் தெய்வம் உம்மை ஆசீர்வதிக்கட்டும். "நாம் கடவுளைத் தொழவேண்டும் என்றும், அதனால் கடவுள் எம்மை ஆசீர்வதிப்பார் என்றும் எமக்குச் சமயங்கள் கூறுகின்றன. அந்த ஆசீர்வாதம் எமது கீழ்மட்ட உணர்வும் மேல்மட்ட உணர்வும் ஐக்கியமாகும். ஓர் கடக்கும் நிலையே அன்றி வேறேதும் இல்லை. அக் கடந்த நிலை எமது தற்போதுள்ள எல்லைக் கட்பட்ட தன்மையையும், அதனுடைய எல்லைக்கு உட்பட்ட சுழற்சியையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

## 18. செயலின் பலனும் பிரதிச் செயலும்

பகவத்கீதையின் மூன்றாம் அத்தியாயத்தின் ஒருசில சுலோகங்களில் முன்வைக்கப் பெற்றுள்ள யாகக் கொள்கைக்குப் பின்னாலுள்ள தத்துவ ரீதியான அர்த்தம் இது ஆகும். கடமையை நிறைவேற்றும் இந்த யோகம் ஆகிய செயல் ஒருவரது வாழ்வில் உள்ள துன்பத்தை நீக்கிவிடுகின்றது. ஏனெனில், இங்கு ஒருவர் தனது செயலை அர்ப்பணிப்பாகச் செய்கிறார் அன்றி அதனை ஓர் உள்நோக்கத்தை அடையும் வழியாக மேற்கொள்ளவில்லை. இங்கு மீண்டும் செயல்களின் பலன்களது தன்மை பற்றிய ஒரு புரிதலோடு நாம் நேரடியாகக் கொண்டு வரப்படுகின்றோம். நாம் பொதுவாகக் கருதும் அர்த்தத்தில் செயலின் பலன்கள் என எவையும் இல்லை. செயல் சுயநலத்தோடு செய்யப்படுமாயின் அதிலுள்ள பலன் ஒரு பிரதிச் செயலாகவே அமையும். செயலினது அவ்வாறான ஒரு பிரதிச் செயலும் இறுதியில் மகிழ்ச்சி அற்றது ஆகவே இருக்கும். ஒவ்வொரு சுயநலச் செயலும் பொருள்களின் சமநிலையில் ஒரு தலையீடாகவே அமைகிறது. அச்சமநிலை பொருள்களுக்கு இடையே இருக்கின்ற ஒத்திசைவு ஆகும். அத்துடன் இயற்கை தனது முழுமையில் தனது சமநிலையைப் பேண முயல்கிறது. இயற்கை தனது பகுதிகளில் இருந்து எவ்வகையான தலையீட்டையும் தாங்கிக்கொள்ளாது. அது எப்போதும் எல்லாவகையான தலையீட்டையும் எதிர்க்கும். நாம் சுயநல நோக்கோடுகூடிய ஒரு செயலின் வடிவில் அந்த இயற்கையைத் தொட்ட அக்கணமே அது ஒரு பிரதிச் செயலின் வடிவத்தில் தனது எதிர்ப்பை வெளியிடுகிறது. அப்பிரதிச் செயலானது செயலின் பலன் அல்லது கர்மபலன் ஆக எம்மீது சூழ்ந்து கொள்கின்றது. அதுவே துக்கமும் மறுபிறப்பும் ஆகும். நாம் எமது சொந்தச் செயல்களின் காரணம் ஆகவே துன்பப்படுகிறோம்.

## 19. புலன்கள்

எமது எல்லாச் செயல்களுக்கும் துன்பத்தை மட்டும் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. எமது எல்லைக்குட்பட்ட தன்மையைக் கடக்க உதவும் செயல்களாக அச்செயல்கள் இருக்கவும் கூடும். எமது புலன் அறிவுக்கு அப்பாலுள்ள தெய்வத்தின் உயர் நிலைக்கும் அச்செயல்களால் நாம் உயரலாம். எமது தற்போதுள்ள எல்லைக்கு உட்பட்ட தன்மையின் போலி உண்மையைக் காட்டிலும் அத்தெய்வீக நிலை ஓர் உயர்ந்த உண்மைநிலை ஆகும். அதனால் நாம் மகிழ்ச்சியாகவும் இருக்கலாம். பொருள்களை நோக்கியே புலன்கள் செல்லும். புலன்களின் இந்த

*பிழையை எங்கு கண்டாலும் அதை உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தை நாம் வழமையாகச் செயல்கள் என்று கருதுகின்றோம். நாம் அப்படி ஏதோ செய்கிறோம் என்றே கற்பனை செய்துகொள் கின்றோம். நாம் ஏதோ செய்கிறோம் என்று எப்போதும் நாம் ஓர் உணர்வு உடையவர் களாகவே இருக்கின்றோம். சாங்கியம் என்ற சரியான ஞானம் இல்லாத காரணத்தால் நாம் ஏதோ செய்யவேண்டி உள்ளது. ஆனால் அந் தச் சாங்கிய ஞானமே எல்லாச் செயல்களை யும் வழிநடத்தவேண்டும். வெளியே உள்ள பொருள்களை நோக்கிப் புலன்கள் செல்வது அந்தப் பொருள்கள்மீது ஓர் உண்மையான விருப்பம் இருப்பதனால் அன்று. அவ்விருப்பம் இருப்பதற்கான காரணம் பொருள்களுக்கும் புலன்களுக்கும் இடையே உள்ள ஓர் ஈர்ப்பே ஆகும். வெளிப்படையாக நாம் பொருள் களை விரும்புவது போலத் தோன்றினாலும் உள்ளே இயற்கையின் நோக்கம் வேறாகவே உள்ளது. காலம், இடம் என்பவற்றில் புலன் களின் அசைவினது இந்த உள்ளே உள்ள நோக்கத்தை மட்டும் நாம் உணராதவர்களாக இருக்கின்றோம்.

## 20. குணங்கள்

பிரகிருதியின் பண்பான சத்துவம், இராசதம், தாமதம் என மூன்று குணங்கள் இருக்கின்றன. எம்மிடத்திலும் சரி வெளி உலகத்திலும் சரி பிரபஞ்சத்திலுள்ள எல்லா வற்றினதும் கட்டுமான அடிப்படைப் பொருள் கள் இக்குணங்களே ஆகும். நிலம், நீர், தீ, ஆகாயம், வாயு என்ற ஐம்பூதங்களே வெளியே உள்ள உலகின் பொருள்களும், எமது உட லும் ஆகும். எமது மனமும் புலன் கருவி களும் கூடச் சத்துவம், இராசதம், தாமதம் என்பவற்றையே கொண்டிருக்கின்றன. இயற் கையிலுள்ள இக் குணங்கள் யாவும் சேர்ந்து தமக்கிடையே ஒரு சமநிலையைப் பேண முயற்சிக்கின்றன. இதனாலேதான் மூன்று குணங்களின் விளைவான புலன்கள் வெளியே பொருள்களாக உள்ள அதே குணங்களோடு சேர முயற்சிக்கின்றன. குணங்கள் தமக் கிடையே செயற்படுகின்றன. நாம் பொருள் களைத் தொடுகிறோம் அல்லர். புலன் கருவி களும் வெளியே உள்ள பொருள்களை விரும்புகின்றன அல்ல. எமது குணங்கள் வெளியே உள்ள குணங்களோடு தொடர்புபட முயற்சிக்கின்றன. ஒரே சமுத்திரத்தில் உள்ள ஓர் அலை மற்ற அலையோடு மோதுவதைப் போன்றதே குணங்களினது தொடர்பும் ஆகும். சத்துவம், இராசதம், தாமதம் என்று அழைக் கப்படும் இச்சக்திகளைக் கொண்ட சமுத்திரத் தில் தனிமனிதனும், ஒவ்வொரு பொருளும் ஒவ்வோர் அலையாகவே இருக்கின்றன. சமுத் திரத்தின் அடியிலுள்ள கட்டமைப்பின் அடிப் படை ஒற்றுமை காரணமாக ஒன்று மற்றொன் றோடு ஈர்க்கப்படுவதனால் ஓர் அலை மற்ற அலையோடு மோதுகிறது. எமது செயல்கள், எமது கடமைகள் அவை எவையாக இருந் தாலும் - உண்மையில் எமது செயல்களோ எமது கடமைகளோ அல்ல. அவை சத்துவம், இராசதம், தாமசம் என்ற பிரபஞ்ச சக்திகளின் செயற்பாடே ஆகும். (தொடரும்...

மனதின் ஆற்றல் அளவைக் கடந்தது. மனிதன் எந்த முடிவெடுத்தாலும் அதைச் சாதிக்க அவனால் முடியும். இறைவனையும் தனக்குள் காண இயலும். இத்தகைய தெய்வீக ஆற்றல் மனிதனிடம் மட்டுமே உள்ளது. தன்னிடம் மறைந்துள்ள ஆற்றலை மனிதன் அறிந்துகொள்ளவில்லை. தன்னை சாதாரண மனிதன் என்று நினைத்துக் கொள்கிறான். தன்னிடம் உள்ள தெய்வீகத்தை மறந்துவிட்டான்.

*நாளை என்பது கனவைப் போன்றது. இன்றைய நிஜத்தை ரசித்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த வேலையைப் பார்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"ஆன்ம ஈடேற்றம் பெறத்தான் இந்தப் பிறவி கிடைத்திருக்கு. இதை வீணாக்காதே; வந்த வேலையைப் பார்" - திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் வழங்கிய, இம் மறை வாக்கு; மிக ஆழமான, அகலமான, கூர்மை யான, நுண்ணிய பொருளை உள்ளடக்க மாகக் கொண்டு விளங்குகிறது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி; மந்திரம்" எனப்படுகிறது. சுவாமிகள், திருவாய் மலர்ந்து அருளிய இத்திருவாக்கு, மந்திரம் ஆக மிளிர்கின்றது. "மந்திரமும் தந்திரமும் மருந்தும் குருவருளும் உண்டென்பார்க்கு உண்டு", ஆகவே, கருத்து உணர்ந்து, வாழ்க்கையில் கடைப்பிடித்து, இம்மியும் வழுவாது, வாழ்பவர்கள், ஆன்மீகச் செல்வர். அத்தகையவர் ஈசன் எந்தை இணை யடி நீழலில், நிரந்தரமாக, வதிந்து, பேரின்பம் அநுபவிப்பர். ஆன்ம ஈடேற்றம் பெறுதல் என் பது கடவுளை வணங்கியும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தும் அதன்பேறு ஆக முத்தி யின்பம் பெறுதல் ஆகும்.

மனிதன் பரிணாம வளர்ச்சியில்; ஏனைய உயிரினங்களைவிட, ஒருபடி உயர்ந்த நிலையில், பகுத்தறிவு என்னும் நல்லது, கெட்டது பிரித்தறியும் திறனைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பகுத்தறிவைப் பறிகொடுத்து விட்டு; உலக வாழ்வின் பகட்டுக்களிலும் மருட்டல்களிலும் ஏமாந்து; அவற்றின் நீர்க் குமிழி போன்று தோன்றிமறையும் சிற்றின்பங் களால் கவரப்பட்டு; ஆசைகளைப் பெருக்கி, "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என மனம்போன போக்கில் வாழ்ந்து, "வந்த வேலையை" மறந்து; அதாவது மனித்தப் பிறவியெடுத்து, இவ்வுலகிற்கு வந்தது, கடவுளை வணங்கி, ஆன்ம ஈடேற்றம் பெறு தல் என்பதில் கருத்துச் செலுத்தாமல் குறிக் கோள் இலாத வாழ்க்கை வாழ்ந்து மீண்டும் பிறப்பு - இறப்பு தொடரை நீடித்துக்கொள் கிறார்கள். இது குளிக்கப்போய் சேறு பூசிக் கொண்டதற்கு ஒப்பாகும்.

மேலும், "கூலிக்கு வேலை செய்யப் போய், வேலிக்கு வழக்குப் பேசியது" போன் றது நாம் வந்த வேலையை மறந்து வேறு உலகியல் சார்ந்த விடயங்களில் கருத்துச் செலுத்தி அவலத்திற்குள்ளாவது ஆகும்.

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்கிறார். முற்றும் துறந்து, ஆன்மீகத்தில் முழுமையாக மூழ்கி, இறை வனிடம் தம்மை ஒப்படைத்து, அவனிடம் சரணாகதி அடைந்து, தாம் வந்த வேலையில் மட்டும் கருத்தையும் கவனத்தையும் பதித்து; தொண்டு நெறியில் தம் வாழ்க்கையை முழு மையாக இட்டு, எண்பத்தொரு வயது வரை இவ்வுலகில் வாழ்ந்து, "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற ஔவையாரின் அருள்வாக்கு உறுதிபெற உத்தமசீலராக இறைபணி செய்து "வந்த வேலையை" மட்டுமே நிறைவு செய்து அதன் பயனாகச் சிவபதம் பெற்று முத்தியடைந்த சைவசமய குரவர்களுள் மூத்தவரான "அப்பர்" என அழைக் கப்படுகின்ற திருநாவுக்கரசு நாயனார். "மூத் தோர் வார்த்தை அமுதம்" என்பது முதுமொழி. அது பொய்யாமொழி.

"ஆன்ம ஈடேற்றம் பெறத்தான் இந்தப் பிறவி எமக்குக் கிடைத்திருக்கு. இதை வீணாக்காதே; வந்த வேலையைப் பார்" என்ற

*மனித வாழ்வில் தேவையும் தேடலும் என்றும் தீர்வதேயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு மெய்ப்பட வேண்டுமானால் வழி முறைகள் அறநெறிக்கும், ஒழுக்கப் பண்புகளுக்கும் உடன்பாடானவையாக அமைதல், முன் நிபந்தனையாகும். இவ்வாறு நீதி வழுவா நெறிமுறையில் நின்று பெற்றுக்கொள்ளப்படும் பயன்கள், அடைவுகள், வெற்றிகள் என்பனவே; உலகியல் வாழ்க்கைக்கும் சரி, ஆன்மீக வாழ்க்கைக்கும் சரி; நிறைவையும் இன்பத்தையும் சுபீட்சத்தையும் தரும்.

"குறிக்கோள் இலாது கெட்டேன்" என்கிறார் ஓர் அருளாளர். குறிக்கோள் இல்லாத வாழ்வு; மீகாமன் இல்லாத படகு கடலில் தத்தளிப்பதுபோல சம்சார சாகரத்தில் சிக்கி அங்குமிங்கும் அலைந்து கரைசேரமுடியாமல் தவிப்பர். வாழ்க்கையில் ஆன்மீகத் துறையிலும் சரி; உலகியல் வாழ்விலும் சரி; வெற்றி பெறுவதற்கு திட்டமிடுதல் மிகப் பிரதான பங்கினை வகிக்கிறது. திட்டமிடுதலில் நோக்கங்கள் குறிக்கோள்கள் என்பவற்றை வகுத்தல் அதன் பிரதான கூறுகளாக உள்ளது. குறிக்கோள் அடையப்படுவதற்குப் பின்பற்றப் படுகின்ற வழிமுறைகள் நீதிவழுவா நெறியைத் தழுவியனவாக அமைதல் முன் நிபந்தனையாகும்.

விளைவறிந்து; நோக்கங்கள், இலக்குகள், குறிக்கோள்கள் என்பவற்றை வகுத்துச் செயலாற்றும்போது அச்செயல்கள், "தமக்கோ, பிறருக்கோ; தற்காலத்திலோ பிற்காலத்திலோ; உடலுக்கோ, உயிருக்கோ, உடைமைக்கோ; ஊறுகள், தாக்கங்கள், தீங்குகள், இடைஞ்சல்கள், இன்னல்கள் ஏற்படாதவாறு கண்காணித்தல்" இன்றியமையாததாகும்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

எனும் திருவள்ளுவர் மறைமொழி, சைவநெறியின் நிறைமொழியாக விளங்குகிறது. வாழும் முறையறிந்து, உலகில் வாழ்வாங்கு, தடம்புரளாது அறநெறியில் நின்று, வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வங்களின் நிலையில் வைத்து மதிக்கப் படுவான் என்பது இக்குறட்பா தரும் உறுதி மொழியாகும்.

செல்வர் சிவபுரத்தினுள்ளார் "வந்த வேலை" இன்னது என்பதை அறிந்து, அதில் மட்டும் தமது கருத்தைச் செலுத்தி, வாழ்வாங்கு வாழ்பவர்களுக்கு அவர்கள் வேண்டி நிற்காமலே, வீடுபேறு இறைவனால் வழங்கப் படுகிறது என்பதே சைவநெறியின் நிலைப்பாடு ஆகும். தாமும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து, மற்றையோரையும் செவ்வையாக வாழ வழி காட்டுதல்; தான் பெற்ற செல்வம் பிறரையும் பெறவைக்கும் உயரிய, மானுடம் தழுவிய நோக்கில் ஆகும்.

சேக்கிழார் பெரியபுராணம் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற தமிழ் அன்னை ஔவையாரின் ஔடத மொழியின் தாற்பரியத்திற்கு அமைய, வாழ்ந்து காட்டி பரமபதம் அடைந்து "வந்த வேலை" எது? என்பதை உலகத்தார்க்குச் செயல் மூலம் உணர்த்திய அறுபத்துமூன்று நாயன்மார்களின் தொண்டின் சிறப்பையும்; அவர்கள் ஆற்றிய அற்புதங்கள் நிறைந்த ஆன்மீக வாழ்வின் மகத்துவத்தையும் பக்திச்சுவை சொட்ட, எடுத்துக் கூறும் திவ்விய நூல் ஆகும். இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்". இந்நூல் இறை பக்தியை வளர்த்து ஆன்மீக வாழ்வின் மகத்துவத்தை விளக்கி, தொண்டின் பெருமையைப் போற்றி; இம்மண்ணுலகில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழவும்; வந்த வேலை இன்னது என்பதை உள்ளுணர்வாக உணரப்பெற்று அவ் வேலையில் கருத்துச் செலுத்தி உய்வு பெறவும் சிவனடியார்களின் தெய்வீக வாழ்க்கை வரலாறுகள் வாயிலாக, வழிகாட்டுகின்றது.

*சிரித்துக்கொண்டே இரு.... வலிகள்கூட விலகிக்கொள்ளும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மெய் வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண் துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணாயினார்"**

தாம், இப்பூவுலகில் வந்து, மனித்தப் பிறவியெடுத்ததன் தொலைநோக்கு, "கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல்" என்பதை உணர்ந்து; அதுவே, "தாம், வந்த வேலை" என்பதை சிரமேற்கொண்டு, அப்பணியை நிறைவேற்றும் காலப்பகுதியில் காலத்தின் அருமையை உணர்ந்து காலம் பொன்னானது என்பதைக் கருத்திற்கொண்டு தாம் மேற்கொண்ட கருமத்தை ஆற்றும் காலத்தில் எதிர்கொள்கின்ற உடல்சார்ந்த, மற்றும் உள்ளம் சார்ந்த நோய்கள், துன்பங்களுக்கு இடம்கொடாது அவற்றைப் புறக்கணித்து, பசியைப் பொறுத்து, தூக்கத்தைத் துறந்து, பிறருடன் முரண்படாது, அவர்களின் வேலையில் குறுக்கீடு செய்யாது; தமக்கு ஏற்படுகின்ற அவமானம், அவமரியாதை, அவதூறுகளைப் பொருட்படுத்தாது புறந்தள்ளி ஏனைய உலகியல் சம்பந்தப்பட்ட கவனக் கலைப்பான்களை இலட்சியம் செய்யாது, அலட்சியம் செய்து, குறிக்கோள் வாழ்வு வாழ்பவர்களே, "வந்த வேலையைச் சிரத்தையுடன் கண்ணும் கருத்துமாக இருந்து, நிறைவேற்றுபவர்; நினைத்ததை நினைத்தபடி முடிப்பவர்; இறைநிலையை எய்தி, "ஈசன் எந்தை இணையடி நீழலில்" பேரின்பம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்பவராவர்.

**"தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்"**

"தேன்"; "தேனாமிர்தம்"- அதுவும் கெடாது; நீண்ட, நெடுங்காலமும் பழுதடையாமல் இருக்கும் தன்மையது. அதேவேளை தன்னுடன் இணைக்கப்பட்டவற்றையும் கலந்த வேறு பொருள்களையும், பழுதுபடாமல் பாவனைக்கேற்றவையாகவும், நீண்டகாலம் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அதியற்புத சக்தியையும் தம்முள் கொண்டுள்ளது. தேன் நோய் தீர்க்கும் அற்புதக்குணமுடைய அருமருந்தாகவும் விளங்குகின்றது. மலர் வண்டுகள்- தேனீக்கள், தினமும் ஒவ்வொரு மலர் மலராகத் தேடிச் சென்று; மலர்த்தேனைத் துளித்துளியாகச் சேகரித்து; ஓர் இடத்தில் தேன்கூடு கட்டி அதில் சேமித்து வைக்கின்றன. இந்த மலர்த் தேனைத் தினமும் காலையில் நீருடன் கலந்து அருந்தி வந்தால், உடல்நலம் பேணி, நோயற்ற வாழ்வு வாழலாம். அவ்வாறே, "வாதவூர்வண்டு" எனச் சிறப்பிக்கப்படும் திருவாதவூரர், எனும் மாணிக்க வாசகப் பெருமான், நமக்கு, நம் பிறவிப் பிணியை முற்றிலாக நீக்கிப் பேரின்பம் பெறுவதற்கு; திருவாசகம் என்னும் அற்புதத்தேனை அருமருந்தாக வழங்கியுள்ளார்.

நாம் மனிதப் பிறவியெடுத்து, இப்பூலோகத்திற்கு வந்ததன் பிரதான நோக்கம்; அதாவது "வந்த வேலை"- இப்பிறவிப் பிணியை நீக்கி; பரம்பொருள் ஆகிய சிவபெருமான் திருவடிகளை அடைந்து "நீங்காத பேரின்பம் பெறுவதற்கேயாகும். ஆதலால் வந்த வேலையில் மாத்திரம் முழுக் கருத்தையும் கவனத்தையும் செலுத்தி வேறு கவனங்களில் சிக்குண்டு மீண்டும் பிறப்பு - இறப்புச் சுழற்சியில் அகப்பட்டு அவதிப்படாமல், ஈசன் எந்தை இணையடியில் தங்கி, பேரின்பப்பேறு பெறுவதற்கு அதியற்புத சஞ்சீவி மருந்து ஆக விளங்குவது "திருவாசகம் என்னும் தேன்" ஆகும். திருவாசகம் கற்று, பாடல்களின் பொருள் உணர்ந்து; வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி ஒழுகி வருபவர்கள் சிவநேயச் செல்வர்கள். அத்தகையவர்கள், சிவகதியடைவது உறுதி.

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு"** -திருக்குறள்.

**"வாழ்க வளமுடன், வாழ்க வையகம்"**

*தேவைப்படும்போது தேடப்படுவாய். அதுவரை அமைதியாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவாசகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

149. பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேனின் றுழைத்தனனே.

**ப-ரை:**

மணி- மாணிக்க மணியைப் போன்றவனே, நீ ஒளித் தாய்க்கு- நீ காட்சியளித்து மறைந்தனை, அங்ஙனம் மறைந்த நின் பொருட்டு, பாடிற்றிலேன்- நினது புகழ்ச்சியமைந்த பாடல்களைப் பாடினேனல்லேன்; பணியேன்- நின்னை வணங்கிலேன்; ஆங்கு வியந்து- நீ அருள் செய்து மறைந்த அப்பொழுது உண்டாகிய மருட்கை பற்றிய வியப்பினால், சிவன் எவ்விடத்தான் எவர் கண்டனர் என்று அலறி ஓடிற்றிலேன் தேடிற்றிலேன்- எனக்கு அருள் செய்த சிவன் எவ்விடத்துள்ளான்? யார் அவனைக் கண்டனர் என்று வினவிக் கதறிக்கொண்டு ஓடினேனுமல்லேன்; ஓடித் தேடினேனுமல்லேன்; கிடந்து உள் உருகேன்- நின் பிரிவின் கவலை மிகுதியால் செயலற்றுக்கிடந்து உள்ளம் உருகப் பெற்றிலேன்; நின்று உழைத்தனன்- பயனின்றி நின்று வருந்தினேன், பசு ஊன் வீடிற்றிலேன் விடுதிகண்டாய்- செவ்வித் தசையையுடைய உடம்பு நீங்கப்பெற்றிலேன்; இத்தன்மையுடையேனாயினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மாணிக்கமணி போன்றவனே, நீ ஒளித்தாய்க்குப் பாடிற்றிலேன்; பணியேன்; நீ அருள் செய்துமறைந்த அப்பொழுதுண்டாகிய மருட்கை பற்றிய வியப்பினால், "எனக்கு அருள் செய்த சிவன் எவ்விடத்துள்ளான் யான் அவனைக் கண்டனர்" என்று அலறி ஓடிற்றிலேன்; நின் பிரிவின் கவலை மிகுதியால் செயலற்றுக் கிடந்து உள்ளம் உருகேன்; நின்று உழைத்தனன்; பசிய ஊனுடம்பு நீங்கப் பெற்றிலேன்; இத்தன்மையுடையேனாயினும் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பாடுதல் பணிதல் அலறுதல் தேடுதல் ஓடுதல் உருகுதல் என்னும் இச்செயல்களெல்லாம் உடைய அடிகள் இவை ஒன்றுஞ் செய்திலேன் என எதிர்மறை முகத்தாற் கூறியது அவற்றின் பயனாக இறைவனது திருவடிப்பேறு உடன் கிடைக்கப்பெறாமை பற்றியுமாகும். மணி- அண்மை விளி; ஆசாரியருள் மேலானவராக அறிந்தமையின் மணி என்றார். எனவே குருமணி என்றவாறு "குருமணி போற்றி" (போற்றி 91)

*வானிலையைவிட அதி வேகமாய் மாறுகிறது மனிதனது மனநிலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காத்தாட்கொள்ளும் குருமணியே" (ஆனந்த 4) என அடிகள் பிறவிடங்களிலும் அருளியமை காண்க.

பச்சூன்- செவ்வித்தசை. "பஞ்சூன் நின்று பைந்நிணம் பெருத்த" புறம் 258:4. "செவ்வியான இறைச்சி" பெரும்பாண் 283 நச். ஈண்டு பச்சூன் என்றது பச்சூன் பொருந்திய உடம்பை இறைவன் திருவருட் காட்சி மறைந்த நிலையில் பிரிவாற்றாது ஊனுடலை நீங்கப் பெறுதல் முறையாகவும் அது செய்திலேன் "ஒளித்தாய்க்குப் பச்சூன் வீடிற்றிலேன்" என்றார். "முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்" "தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் தலைவனை நனிகாணேன், தீயில்வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே" (சத 37:39) என அடிகள் அருளியமை ஈண்டறியற்பாலன.

வியப்பு- இறைவன் திருவுரு உடன் மறைந்ததனால் உண்டாகிய மருட்கைபற்றிய வியப்பு. ஆங்கு- இறைவன் ஆட்கொண்டு மறைந்த காலத்தை உணர்த்தியது. "மறையினின் மணந்தாங்கே மருவறத் துறந்த பின்" கலி 53:8. என்புழி ஆங்கு என்பது காலத்தை உணர்த்தி நிற்றல் காண்க. ஆங்கு வியந்து என்பதற்கு ஆட்கொண்டருளிய அப்பொழுது மகிழ்ச்சியால் வியப்படைந்திருந்தும் என உரைக்கினும் அமையும்.

அடிகள் தம்மைக் குருந்தமரத்தடியில் குருவாக எழுந்தருளி ஆட்கொண்டு மறைந்தவர் சிவனென்று தெரிந்தனராதலின் சிவன் எவ்விடத்தான் என்று வினவுவராயினர்.

"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினேன் காண்க" (61:2)

எனத் திருவண்டப் பகுதியில் வருதலுங் காண்க.

சிவன் எவ்விடத்தான் எவர் கண்டனர் என்பன தேடிச் சென்றபோது முற்படுவாரிடத்து வினவுவனவாகும். உழைத்தல்- வருந்துதல்.

இதன் கண், பச்சூன் வீடிற்றிலேனை விடுதிகண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் போதருதல் காண்க.

**150. உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினொப்பாய்**
**விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்**
**மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்**
**பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே.**

**ப-ரை:**

பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்- பலாப்பழத்தின்கண் ஈயினை ஒத்து, உழை தரு நோக்கியர் கொங்கை விழைதரு வேனை- மானினது நோக்குப் போலும் நோக்கினையுடைய மகளிருடைய முலையை விரும்புகின்ற என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்; விடின்- கைவிடுவையாயின், வேலை நஞ்சு உண் மழை தரு கண்டன் என்று- கடலில் எழுந்த நஞ்சை உண்ட கரிய மேகம் போலும் கண்டத்தை யுடையவன் என்றும், குணம் இலி என்று- குணமில்லாதவன் என்றும், மானிடன் என்று- மானிடன் என்றும், தேய்மதியன் என்று- குறைமதியன் என்றும், பழை தருமாபரன் என்று- பழமையாகிய பெரிய பரதேசி என்றும், என்று பழிப்பினை அரைகுவன்- என்று இப்படி இப்படி நினக்கு இழிவுரையினைக் கூறுவேன்.

*உங்களை நீங்களே மதியுங்கள். அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாப்பழத்து ஈயினொப்பாய், மகளிரது கொங்கைகளை விரும்புகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கைவிடின் வேலை நஞ்சுண் மழைதரு கண்டன், குணமிலி மானிடன், தேய்மதியன், பழைதருமாபரன் என்று என்று நினக்குப் பழிப்புரையினைக் கூறுவேன் என்பதாம்.

உழை- மான். உழையதட பள்ளி" மதுரைக் 310. ஈண்டு ஆகுபெயரான் அதன் மருண்ட பார்வையை உணர்த்திற்றே தரு- உவமைச் சொல். மானின் நோக்குப் போலும் நோக்கினையுடைய அழகிய மகளிர் என்பது தோன்ற "உழைதரு நோக்கியர்" என்றார்.

"ஆய் தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழிலென
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ"

-கலி 56:15-8.

எனப் பிறரும் கூறுதல் காண்க. கொங்கை என்றது கோங்கின் கணுண்டாகிய பொலிந்த அரும்பை யொக்கும் முலையை. "கோங்கிற் பொலியரும் பேய் கொங்கை" (கோவை 13) என அடிகள் அருளியமை காண்க. "முதிர் கோங்கின் முகையென முரஞ் செங் குரும்பையெனப், பெயல் துளி முகிழெனப் பெருத்த நின் னிளமுலை". பலாப்பழத்தின் ஈயினொப்பாய் கொங்கை விழை தருவேனை எனக் கூட்டி பலாப்பழத்தில் மொய்க்கும் ஈ அதனை விரும்புதல் போல மகளிர் கொங்கையை விரும்புகின்ற என்னை என்றவாறு. ஈயின் என்புழி இன் சாரியை, ஒப்பாய்- ஒத்து. விழைதரு- ஒரு சொல். விழைதல்- விரும்புதல். "துனையு நர் விழைதக்க சிறப்புப் போல்" கலி 145:1.

வேலை நஞ்சுண் மழைதரு கண்டன் என்றது, திருப்பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை உண்டு மேகம் போலக் கறுத்த கண்டத்தையுடையவன் என்றவாறு. வேலை நஞ்சு உண்டமை இறைவன் பேரருளுடைமையையும் முடிவிலாற்றலுடைமையையும் புலப்படுத் துவதாகும்.

"உம்பர் உய்யக் களமாம் விடமமிர்தாக்கிய தில்லைத் தொல்லோன்"

-22.

"ஓங்குமொரு விடமுண்டம் பலத்தும்பருய்ய வன்று
தாங்கு மொருவன்"

-158.

"நஞ்சிமஞ்சி மறுகி விண்ணோர், பணியக் கருணை தரும்பரன்" -195.

"விண்ணோர் குழுவினையுய்ய நஞ்சுண்டு..... பிரான்" -229.

எனத் திருக்கோவையாரினும்,

"உலகுய்யக் காரின் மல்கு கடல் நஞ்சமதுண்ட கடவுள்"

-ஞான 2:4.

"உண்டான் நஞ்சை யுலக முய்யவே"

-ஞான 23:2.

*குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வெறும் குப்பைமேடுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறையே கருணையாய் உண்பரிய நஞ்சதனை உண்டு உலகம் உய்ய அருளுத்தமன்"

-ஞான 335:7.

"வேலை நஞ்சண் டுனமொன்றில்லா ஒருவன்"

-நாவு 112:8.

"சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவர மூவாச் சிங்கமே" -312:2.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

வேலை- கடல். மழை- முகில். "மழை குழுமி நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள்" (திருக்கோவை 156) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விடத்தை உண்டமையால் இறைவன் கண்டம் மேகம்போலக் கறுத்தமையை;

"காரென்ன வாருங் கறை மிடற்றம்பலவன்"

-கோவை 56.

"காரியல் கண்டர்"

-301.

"கருமால் விடையுடையோன் கண்டம் கோற் கொண்டலெண்டிசையும் வருமால்" -326.

"சிற்றம்பலத்தான் மிடற்றின், முற்படு நீண்முகில்' -348.

எனத் திருக்கோவையாரிலும்

"கொண்டது நீலமும் புரை திருமிடற்றர்" -ஞான 79:2.

"மேகம் பால் மிடற்றர" -நாவு 58:7.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. வேலை நஞ்சுண் மழைதரு கண்டேன் என்பதில் கடலில் எழுந்த நஞ்சை உண்டு உள்ளே சென்றால் கொன்றுவிடும் என்று எண்ணி கண்டத்தில் அடக்கியபோதும் அதன் கருமை புறத்தார்க்குப் புலப்படுமாறு கருமையடைந்த கண்டத்தினை உடையவன் என்னும் பழிப்புரையும் அடங்கியிருத்தல் காண்க.

குணமிலி- உயிர்களுக்கு மாறி மாறி நிகழுகின்ற சாத்துவிக இராசத தாமத என்னும் முக்குணங்களும் இல்லாதவன். குணாதீதன் என்றபடி. "குணமொன்றில்லீர் குறிப்பில்லீர்" (சுந் 77:10) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இதில் நற்பண்பில்லாத குணங்கேடன் என்ற பழிப்புரையும் அடங்கியிருத்தல் காண்க.

மானிடன்- மானை இடத் திருக்கரத்தில் ஏந்தியவன், தாருகாவனத்து இருடிகளின் யாகத்தினின்றும் தோன்றிய பேரொலி செய்துகொண்டு எதிர்ந்த மானினை இடத் திருக்கரத்தால் தாங்கித் திருச்செவிக்கண்மையில் சேர்த்து அதன் ஆற்றலை அடக்கிய பெருமையையுடையவன் என்பதனை இது புலப்படுவதாகும். மானை இடத்திருக்கரத்தில் தாங்கியமை,

"மானிடமார் தருகையர் மா மழுவாரும் வலத்தார்"

-ஞான 43:7.

"மங்குன் மதிவைப்பர் வானநாடர் மடமான் இடமுடையார்"

-நாவு 230:2.

**ஆசைப்படுங்கள் தவறில்லை. பேராசையே வாழ்க்கைக்குக் கேடு விளைவிப்பதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏறமரும் பெருமானை இடமானேந்தும் கையானை"

-நாவு 276:5.

"வார் பொதியும் முலையாளோர் கூறன் தன்னை
மானிடங்கை யுடையானை" -நாவு 303:71.

"மானிடங் கொண்டார் வலங்கை மழுவாட் கொண்டார்" -நாவு 309:7.

"மானை யிடத்தொர் கையன்" -சுந் 10:1.

எனத் தேவாரத்தும்

"வாமத்திலே யொருமானைத் தரித்தொரு மானை வைத்தாய்"

-கோயினான் 14.

எனப் பதினொராந் திருமுறையிலும்

"மற்றதன் பின்றை எந்தை மாண்பிணை அதனை நோக்கித்
தெற்றென விளித்து நந்தஞ் செவியினுக் கணித்தாய் மேவி
நிற்றலுங் கூவுகென்றே நீடருள் செய் வாமப்
பொற்றடங் கையிற் பற்றிப் பெருக்கென ஏந்தி நின்றான்"

-ததீசியுத் 104.

எனக் கந்தபுராணத்தும்

"கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்ற னென்னும்
மழுவலத்தன் மானிடத்த னென்னும்" -28.

எனச் சிதம்பரச் செய்யுட் கோவையினும் வருவனவற்றாலுமறிக. மானிடன் என்பதில் சில்வாழ்நாள் பல்பிணிச் சிறுதொழிலுடைய மனிதத் தன்மையுடையவன் என்னும் பழிப்புரையும் அமைந்திருத்தல் காண்க.

தேய்மதியன்- ஒரு கலையாகத் தேய்ந்த பிறைமதியை சடைமுடியிற் சூடினவன். தக்கன் சாபத்தால் தன் கலைகள் தேயப்பெற்று அடைக்கலம் புகுந்த சந்திரனைத் திருச் சடையில் தரித்து கலைவளருமாறு அருள் செய்தமையை இது புலப்படுத்துவதாகும். தேய்ந்த அறிவுடையவன் என்பது பழிப்புரை.

பழைதரு மாபரன் என்பது பழைய பெரிய மேலானவன் என்னும் பொருட்டு. இறைவன் பழையோன் என்பதை "படைப்போற்படைக்கும் பழையோன்", "பரமன் காண்க. பழையோன் காண்க" (திருவண்டம் 13:37) என அடிகள் பிறவிடங்களிற் கூறியிருத்தலுங் காண்க. "மிகவும் பழையான் றன்றை" (நாவு 224:7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பரன்- மேலானவன்; பரமன் திருக்கோவை 11 பேர். பழை தரு மாபரன் என்பதற்குப் பழமையான பெரிய ஆண்டி "ஐயமேற்றுணந் தொழிலார மண்ணலாரறை" (ஞான 213:9) என்பது பழிப்புரை. பரன்- பரதேசி; அந்நியன்.

விடின் நஞ்சுண் மழைதரு கண்டன் முதலிய பழிப்பினை அறைகுவன் என முடிக்க "விடின் வெங்கரியின் உரிப்பிச்சன் றோலுடையப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச் சுடுகாட் டெரிப்பிச்ச னென்னையு மாளுடைய பிச்சனென் றேசுவனே" (நீத் 49) என மேலும் அடிகள் அருளியமை காண்க.

***வார்த்தைகளில் உண்மை இல்லையெனில் எண்ணங்களில் தூய்மை இருக்காது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொற்றவ னேஎன்றுங் கோவணத்தாய் என்றும் வாவணத்தால்
நற்றவ னேஎன்றும் நஞ்சுண்டி யேஎன்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேஎன்றும் பிஞ்ஞக னேஎன்றும் மன்மதனை
செற்றவ னேஎன்றும் நாளும் பரவும் என்சிந்தனையே" -91.

எனப் பொன் வண்ணத் தந்தாதியில் தருதலும் ஈண்டறியற்பாலது.

பழிப்பினையே அறைகுவன் பழிப்பதுபோல் புகழமைந்த மொழிகளையே கூறுவன் என்றவாறு. இங்ஙனம் கூறுவது வஞ்சப்புகழ்ச்சி என்னும் அணியாகும்.

இதன்கண், "உழை தரு நோக்கியவர் கொங்கை விழைதரு வேனை விடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. (46)

(தொடரும்...

## வேறுபாடுகளுக்கிடையிலுள்ள ஒற்றுமை

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும், நாம் ஆற்றும் ஒவ்வொரு செயலுக்கும் காரணமாக இருப்பது எமது மனம். அவற்றால் ஏற்படும் விளைவுகளால் குழப்பமடைவதும் எமது மனம். எமது எண்ணங்களின் ஓட்டமே மனம் ஆகும். எனவே, எண்ணங்கள் அற்ற தியான நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அமைதி என்பது ஏற்கனவே உள்ளது. அது செயலினால் குழப்பப்படுகிறது.

எண்ணங்கள் அடங்க, மனக்கட்டுப்பாடும் அதிலிருந்து மன ஒருமைப்பாடும் அமைதியும் ஏற்பட தியான நிலையை ஒருவன் அடைகிறான். எனவே, மன அமைதிக்கேற்ப காரியங்களை ஆற்ற வேண்டும். அதுவே கர்மயோகம் எனப்படும். அதாவது, கர்மங்களை, செயல்களை ஏன் செய்கிறோம் என நினைத்துச் செய்தால், அமைதியும் இன்பமும் நோக்கிய தேடுதல் ஆக இருக்கும். செய்யும் கருமத்தைச் சரியா எனப் பார்த்துச் செய்தால், சரியான முடிவை அடைய மனம் அமைதி அடையும். அமைதியைக் கெடுக்கும் செயல்களை விலக்க வேண்டும்.

யார் ஒருவன் விருப்பு, வெறுப்பு இல்லாமல் கடமையில் ஈடுபடுகிறானோ, அவன் யோகி ஆவான். விருப்பு இருந்தால் செய்யக்கூடாதவையும் செய்வோம். வெறுப்பு இருந்தால் செய்யக்கூடுமானதையும் செய்யமாட்டோம். ஆத்மாவினால் ஆத்மாவை உயர்த்த வேண்டும். தாழ்த்தக்கூடாது.

நமக்கு நல்லதை விரும்புபவன் நண்பன். அது நட்பின் ஆழத்தைப் பொறுத்தது. ஆனால், எந்நேரமும் நட்பு உடைந்துவிடலாம், மறைந்துவிடலாம். எப்பொழுதும் எமக்கு நல்லதையே விரும்புபவர் நாமே. நாம் எப்பொழுதும் நம்முடன் இருக்கின்றோம். அதை எதுவும் எவரும் ஒன்றுமே செய்யமுடியாது. ஆகவே, நமக்கு நாமே நண்பன்.

உடலுக்கு, மனதுக்கு பங்கம் ஏற்படலாம். உணர்ச்சி பாதிக்கப்படலாம். இவை எல்லாம் நம்மால் நமக்கு ஏற்படுபவை. மற்றவர்கள் எமக்குச் செய்யும் தீங்கு இப்பிறவியில் அகன்றுவிடும்.

அனைத்து ஜட, ஜீவராசிகளிலும் உள் நிறைந்திருப்பது அந்தப் "பரமாத்மா" என்ற ஒன்றே, என்னும் மெய்யறிவோடு வேறுபாடுகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் எமக்கு, அதனால் மன அமைதி குலைந்துகொண்டே போய்க்கொண்டிருக்கும். இந்நிலையில், வேறுபாடுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமையையே பார்க்கும்போது மனம் அமைதி அடையும் என்ற முடிவான முடிவை அறிந்து அதைப் பழகிக்கொண்டால், மனத்தை ஒருமைப்படுத்தி பிரபஞ்சத்தோடு ஒன்றுபட்டு இயங்கும்போது நினைத்ததெல்லாம் கிடைக்கும். நமக்கு நாமே நண்பனாவோம் என்பதில் ஐயமில்லை.

*பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது அன்பிற்கும் உரியதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியும் ஏழு விநாயகர் ஆலயங்களும்

– திரு சண்முகலிங்கம் சஜீலன் அவர்கள் –

விநாயகக் கடவுளையும் அவர்தம் தம்பி முருகக் கடவுளையும் வழிபட்டு அருட் பேறடைந்த மகளிருள் இருவர் முக்கியமான வர்கள். அவர்களுள் ஒருவர் தமிழ் மூதாட்டி என அழைக்கப்பட்ட விநாயகர் அகவல் பாடிய ஔவைப்பிராட்டியாராகும். மற்றையவர் பல ரும் அறியாத ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத் தில் கீரிமலையை அண்டிய பிரதேசத்தில் கோயிற்கடவை கதிரையாண்டவர் கோவிலை மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலாகக் கட்டுவித்து அதன் பக்கங்களில் ஏழு விநாயகர் ஆலயங் களையும் ஸ்தாபித்த சோழ இளவரசி மாருதப் புரவீகவல்லியாவாள்.

உலகெங்கும் வியாபித்துள்ள இறை வன் தனது பேரருட் சக்தியினை ஆன்மாக் களுக்கு வழங்கும்பொருட்டு விரும்பி உறை யும் இடமே ஆலயங்களாகும். அவ்வாறான ஆலயங்களை அமைப்பதற்கு இறைவன் ஒவ் வொருவரைப் பிரேரித்து விடுகிறான். இவ்வா றாக பிரேரகம் பெற்ற ஒரு பேரருட் செல்வியே மாருதப்புரவீகவல்லி எனும் அரசகுலத்தில் பிறந்த இளவரசியாவாள். மாருதப்புரவீக வல்லியை விட்டுவிட்டு மாவிட்டபுரம் என்பதை விளங்கிக்கொள்வது முடியாத காரியமாகும். அதேபோன்று கீரிமலையை அண்டிய பிரதேசங் களிலிருக்கும் இவ் ஏழு விநாயகர் ஆலயங் களின் வரலாற்றிலும் மாருதப்புரவீகவல்லிக்கு முக்கியமான நெருங்கிய தொடர்பு உண்டு.

பத்தாம் நூற்றாண்டில் திசையுக்கிர சோழன் மகளாக அவதரித்து தனக்கிருந்த குன்ம வியாதியால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர் ஒருவராலும் குணமாக்க முடியாத தனால் தீர்த்த யாத்திரை செய்து பார்த்தால் சுகம்வரக்கூடும் என்றெண்ணி காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து புறப்பட்டு அங்கும் இங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் சாந்தலிங்கன் என்னும் சந்நியாசி கண்டு உன் வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத்தக்கதன்று. நீ இப்பொழுது எடுத்த முயற்சியே சுகந்தரத் தக்கது. ஈழத்திலே வடமுனையிலே கீரிமலை என்றொரு மலை உண்டு. அது சமுத்திரத் தீர்த்தத்தில் உள்ளது. அங்கே உவர்நீரும் நன்னீரும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தமொன்றுண்டு. அது உலகினுள் உள்ள எத்தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்த மாய் இருக்கின்றது. அதிலே நீ போய் நீராடிச் சிலகாலம் தங்கியிருந்தால் சுகம் பெறுவாய் என்ற அத் தவசிரேஷ்டர் வாக்குப்படி யாழ்ப் பாணத்திலுள்ள கீரிமலை எனும் புண்ணிய பதியை அடைந்தாள். இங்கு நகுல முனி வரைச் சந்தித்து வணங்கி அவரின் சொற்படி கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் தீர்த்தமாடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு வந்தாள். நகுல முனிவரின் கட்டளைப்படி கோயிற் கடவை முருகனையும் சென்று வழிபட்டு வந் தாள். அங்கே அவளது குதிரைமுகம் நீங்கி யது. குதிரைமுகம் அகன்ற இடமாதலால் அப் பதி மாவிட்டபுரம் என அழைக்கப்பட லாயிற்று.

மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் மாறிய போதிலும் மனதில் குதிரை முகம் இருப்பதான உணர்விருந்தது. எக்காரி யத்தைச் செய்ய முற்படுமுன்னர் எல்லாம் வல்ல விநாயகரை வணங்கியே செயற்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். விநாயகரை வணங்காமல் முருகன் கோவில் கட்டியமையால்தான் இக்குறைபாடு இருக்கிறதென ஒரு பெரியவர் கூறினார். தன் தவறை உணர்ந்த இளவரசி கணபதியைப் பலமுறை வணங்கி தென்திசை நோக்கி ஏழு விநாயகர் ஆலயங்களைக் கட்டுவித்து அங்கு விநாயகர் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தாள். அத்தலங்கள் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், அழகொல்லை முத்து விநாயகர் ஆலயம், கும்பழாவளை சந்திரசேகர விநாயகர் ஆலயம், பெருமாக் கடவை சித்தி விநாயகர் ஆலயம், ஆலங் குழாய் விநாயகர் ஆலயம் (தற்போது முருக மூர்த்தி ஆலயம்) கல்வளை பரமானந்த விநாயகர் ஆலயம் என்பனவே அவையாகும்.

## 01) கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த முதலாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். ஆதியில் தற்போது இருக்கும் ஆலயத்தின் மேற்குக் கரைக்கேணியின் வாசலில் நின்ற ஓர் ஆலமர நிழலிலேயே மாருதப்புரவீகவல்லி விநாயகரைப் பிரதிஷ்டை செய்தாள் எனக் கூறப்படுகிறது. பின்னர் இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஓர் அன்பர் தற்போது ஆலயம் இருக்கும் கர்ப்பக் கிரகத்தில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தார். தற்போது இவ்வாலயம் பெருங்கோயிலாகக் காட்சியளிக்கிறது. இங்கு மூலமூர்த்தி விநாயகப் பெருமானுடன் சிவனுக்கும் தனி சந்நிதி அமைக்கப்பெற்று அது தனிக்கோவிலாக விளங்குகிறது.

## 02) பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலயம்

சோழ இளவரசி ஸ்தாபித்த இரண்டாவது ஆலயம் இதுவாகும். ஆரம்பத்தில் தற்போது ஆலயம் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருந்த வன்னிமர நிழலிலேயே விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பெற்றதாக வரலாறு கூறுகிறது. அவ்வூரிலுள்ள கற்பகநாயகி என்ற அம்மையாரால் மிகவும் பக்திபூர்வமாக வழிபடப்பட்டு வந்தமையால் கற்பகவிநாயகர் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஏலவே இருந்த இவ்வம்மையாரால் அமைக்கப்பட்ட பிள்ளை யாரையே மாருதப்புரவீகவல்லி வந்து வழிபட்டுச் சென்றதாகவும் இன்னொரு வரலாறு கூறுகிறது.

## 03) அழகொல்லை முத்து விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்றாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற விநாயகர் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. எனினும் இன்னொரு வரலாற்றுத் தகவலின்படி அமைப்புப் பிரமாணப்படி பிழையாக அமைக்கப்பட்ட ஆலயத்தை விநாயகர் இடிந்துவிழச் செய்ததாகவும் அளவுஓலை என்று ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகவும் அதன் பிரகாரம் ஆலயத்தை அமைக்குமாறு விநாயகர் கூறியதாகவும் அதன்படி கட்டியபோது எவ்வித விக்கினங்களும் இன்றி கட்டடம் பூர்த்தியடைந்ததாகவும் கூறப்படுகிறது. இதனாலேயே அளவுஓலை என்பது மருவி அளவோலை எனப் பெயராயிற்று. காலப்போக்கில் அதுவும் மருவி அழகொல்லையாயிற்று என்று வரலாறு கூறுகிறது. அழகிய சோலைகள் சூழ்ந்த இடமாதலால் அழகொல்லை என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறப்படுகிறது.

*இருப்பதை இழக்காமல் இருக்க இழந்ததை மறந்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04) கும்பழாவளை சந்திரசேகர விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த நான்காவது விநாயகர் ஆலயம் இதுவாகும். இவ் ஏழு விநாயகர் ஆலயங்களிலும் நடுநாயகமாக விளங்குவது இவ்வாலயமாகும். மாருதப்புரவீக வல்லியின் குதிரைமுகம் அவளது கண்ணுக்குத் தெரியாது மறைந்த இடம் இவ்வாலயம் என வரலாறு கூறுகிறது. குதிரை முகம் முற்றாக நீங்கப்பெற்றதால் அவ்விடத்திற்கு மாவிழிதிட்டி எனும் பெயர் இன்றும் வழங்கப்பெறுகிறது. இப்பெயர் முதலில் மாவிழிதிட்டி என இருந்ததெனவும் அருமருவி மாவிடுதிட்டி என ஆயிற்று. மா+இழி+திட்டி குதிரைமுகம் இழிந்த திட்டி எனப் பொருள்படும். இழிதல் நீக்குதல் என்ற பொருளில் வரும். இவ்வாலயத்தின் தென்கிழக்கு மூலையில் குமாரத்தி திருக்குளமும் வயல்நிலமும் இருந்ததாகவும் அறிந்தோர் கூறுகின்றனர். இத்தலம் அரசகுமாரத்தி வருகைக்கு முன்னரே இருந்ததெனவும் அவள் தாபிக்கவில்லை புதுப்பித்தாள் எனவும் கூறப்படுகிறது.

மண்மேடாக இருந்த இவ்வாலயப் பகுதியில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவனுக்கு கொம்பை ஏந்திய விநாயகர் சோதிவடிவான பிழம்பாகக் காட்சி கொடுத்தார் எனவும் கொம்பு ஆவளை திரிபடைந்து கொம்பழாவளையாக மாறி கும்பழாவளையாயிற்று. பசுக்கள் கும்பலாக நின்று மேய்ந்த இடம் கும்பல் ஆவளை மருவி கும்பழாவளை என வந்தது என்றும் கூறப் படுகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலய அன்பர்கள் மூலவிக்கிரகத்தை எடுத்துச் சென்று ஒரு மரப்பொந்தில் வைத்து வழிபட்டனர் எனவும் ஆங்கிலேயர் காலத்தில் அது மீளவும் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் பழைய கதையொன்று உண்டு. 1811ஆம் ஆண்டு இவ்வாலய கர்ப்பக்கிரகமும் மகாமண்டபமும் கட்டப்பெற்றன என்று ஆங்கிலேயர்கால வரலாறு கூறுகிறது.

## 05) பெருமாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம்

அரசகுமாரத்தி மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஐந்தாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். பெருமாக்கடவை என்பது பெரிய குதிரைமுகம் முற்றாக நீங்கியது என்று பொருள்படும். ஆலய வரலாற்றின் இன்னொரு கர்ண பரம்பரைக் கதையில் முன்னொரு காலம் பெருமாலியன் எனும் அசுரன் இந்த ஆலயம் அமைந்துள்ள பாணாக்கை, பரவை ஆகிய நீர்நிலைகளைத் தொடுக்கும் வழுக்கையாற்றுப் பகுதியில் வயல் வெளிகளில் பயிர்களை நாசம் செய்து உழவர்களை வருத்தினான். ஆற்றின் குறுக்கே படுத்துக்கிடந்தான் எனவும் அதனால் ஆற்றின் போக்குத் தடைப்பட்டு வயல்களின் ஒருபகுதி வரட்சியாலும், மறுபகுதி வெள்ளத்தாலும் அழிந்ததாகவும் அதனால் வேதனையடைந்த மக்கள் விநாயகக் கடவுளிடம் வேண்ட விநாயகப் பெருமான் தாமே நேரில் வந்து அவ்வசுரனைக் கொன்றொழித்தார் எனவும் நிம்மதி பெற்ற மக்கள் விநாயகரை நினைவில் வைத்து சிற்றாலயம் அமைத்து வழிபட்டதாகவும் பெருமாலியன் ஆவி கடந்த இடமென்பதால் பெருமாக்கடவை எனும் பெயர் ஏற்பட்டது எனவும் கூறப்படுகின்றது. பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் இவ்வாலயத்தை ஸ்தாபித்த பெரும் நில உடமைச் சொந்தக்காரரான மணியகாரர் பரம்பரையினரே இன்னும் ஆலயத்தைத் தொடர்ச்சியாகப் பராமரித்து வருகின்றனர். ஆலயம் முன் உள்ள தாமரைத் தடாகம் அம்பலவாணமுதலியாரால் அமைக்கப்பட்டது.

*அவமானத்தின் வலி அழகிய வாழ்க்கைக்கான வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06) ஆலங்குழாய் விநாயகர் ஆலயம்

சோழ இளவரசியால் ஸ்தாபிக்கப்பட்ட ஆறாவது ஆலயம் இதுவாகும். மூலவராகப் பிள்ளையாரே நெடுங்காலமாகக் காட்சியளித்தார். தற்போது சுப்பிரமணியர் விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்று ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயம் என வழங்கப்பெறுகிறது. நூறு வருடத்திற்குள்ளாகவே இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் இவ்வாலயத்தில் தற்போதும் விநாயகர் வழிபாடு முதன்மைபெற்றுக் காணப்படுகிறது.

## 07) கல்வளை பரமானந்த விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழாவதும் இறுதியுமான விநாயகர் ஆலயம் இதுவாகும். பின்னர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகள் ஆலயப் பராமரிப்பிற்கு ஏழு கிராமங்களை தாமிரசாசனம் செய்து கொடுத்தனர் என ஆலய வரலாறு கூறுகிறது. பின்னர் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தை வெற்றிவேலாயுத முதலி குடும்பத்தினர் மீண்டும் நிறுவி தங்கள் குலதெய்வமாக வழிபட்டனர். அப் பரம்பரையினரே இன்றும் ஆலயத்தைப் பராமரித்து வருகின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் நல்லூரில் வாழ்ந்த சின்னத்தம்பி புலவரால் பாடப்பெற்ற கல்வளையந்தாதி இவ்வாலயத்தின் பேரிற் பாடப்பெற்றதாகும்.

## ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்ன விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லிக்கும் ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்ன விநாயகர் ஆலயத்திற்கு இடையிலும் சிறிய வரலாற்றுத் தொடர்பு ஒன்று உண்டு. மாருதப்புரவீகவல்லி தான் அமைத்த ஏழு விநாயகர் ஆலயங்களைத் தரிசிப்பதற்காக யானையில் ஏறிச் செல்லும்போது அவளது யானை ஓரிடத்தில் முன்னங்கால் நீட்டி வீழந்து வணங்கியது. யானை வீழ்ந்து வணங்கிய திசையை ஆராய்ந்தபோது புதர்களுக்கு இடையே விநாயகர் விக்கிரகம் இருக்கக் கண்டு அதனை வழிபாடு செய்துசென்றாள். பின்னர் அவ்விடத்திற் கோவில் ஒன்றினையும் கட்டுவித்தாள். அவளது யானை விழுந்து வணங்கியதால் அவ்விடத்திற்கு ஆனைவிழுந்தான் என அன்றிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

பத்தாம் நூற்றாண்டில் மிகப் பரந்துபட்ட தென்னாசியா, தென்கிழக்காசியா முழுவதையும் தமது ஆளுகைக்குட்படுத்தி ஆட்சி செலுத்திய சோழப் பேரரசு காலத்தில் வாழ்ந்த அரச குலத்தில் பிறந்த இளவரசியான மாருதப்புரவீகவல்லியை ஐதீக இளவரசியாகவே சில வரலாற்று நூல்கள் கூறுகின்றன. எனினும் யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் என்பவற்றில் மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்தினளாக விளங்கி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு கீரிமலையில் தீர்த்தமாடி நகுலேஸ்வரரையும், கோயிற்கடவை முருகனையும் வழிபட்டு குதிரைமுகம் நீங்கப்பெற்று பேரழகியாகத் திகழ்ந்தாள் எனக் கூறப் பட்டுள்ளது. பின்னர் குதிரை முகம் மற்றவர் பார்வைக்கு நீங்கியும், தனது பார்வைக்கு நீங்காததால் இதுபற்றி அவள் பிரஸ்தாபிக்க ஓர் பெரியவர் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளாத தால் ஏற்பட்டதெனக் கூற இளவரசியும் தன் தவறை உணர்ந்து ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்து வணங்குவேன் எனக் கூறி ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்தாள் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் வைபவமாலை, கைலாயமாலை போன்றவற்றில் இதுபற்றிக் கூறப்படவில்லை. கர்ணபரம்பரைக் கதை யாகவே வழங்கப்பெற்று வருகிறது.

கர்ணபரம்பரைக் கதை என்பது ஏட் டில் எழுதப்படாதது. நீண்டகாலம் வாய்வழி வந்த பரம்பரைக் கதைகள் செவிவழி கேட்டு வழங்கப்பெற்று வருவதாகவும். ஆயினும் மாருதப்புரவீகவல்லி பற்றியும் ஏழு விநாயகர் ஆலயங்களை அவள் ஸ்தாபித்தாள் என்பதை யும் வெறும் செவிவழிக்கதை என்றோ, வெறுங் கட்டுக்கதை என்றோ புறந்தள்ள முடியாது. ஏனெனில் இது வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு கதை அக்கதைகளின் அசையா நம்பிக்கை யிலேயே மக்களும் வாழ்கிறார்கள். அருள் மிக்க ஆலயமாக போற்றி வணங்குகிறார்கள். மேலும் இந்து மதத்தில் எழுந்த இவ்வாறான புராண இதிகாசக் கதைகள், கர்ணபரம்பரைக் கதைகளே இந்து மதத்தின் உயிர்நாடியாக விளங்கி உலகின் பெரிய மதங்களுள் ஒன் றாக அதனை நிலைநிறுத்தியிருக்கின்றது.

சோழ சாம்ராஜ்யத்தின் பின்னர் மாரு தப்புரவீகவல்லிக்குப் பின் வந்த தமிழரசர் பரம்பரையும் அவளாலேயே நிலைநிறுத்தப் பெறுகிறது. எட்டாம் நூற்றாண்டிலிருந்து போர்த் துக்கேயர் வரும் வரையில் நிலைபெற்றிருந்த தமிழரசர் பரம்பரையின் முதல்வி மாருதப்புர வீகவல்லியாவாள். அவளை அந்நாட் கதிரை மலையில் அரசாட்சி புரிந்த உக்கிரசிங்கன் என்பவன் மணந்தான். அவர்களின் புத்திர னாகத் தோன்றிய பாலசிங்கன் என்பவன் தந்தைக்குப் பின் அரசாட்சி செய்தான். கால கதியில் அப்பரம்பரை சந்ததியற்றுப் போகவே மீளவும் திசையுக்கிரசோழன் மரபில் தோன்றிய சிங்கையாரியன் இங்கு அழைக்கப்பட்டு ஆட்சி புரிந்தான். இதனால் ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரை இங்கு உருவாயிற்று. இப்பரம்பரை யில் வந்த பரராஜசேகரன், செகராஜசேகரன் போன்றவர்களும் அவர்களது பரம்பரையின ரும் பிற்காலத்தில் பல விநாயகர் ஆலயங் களை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்தார்கள். எனவே இவற்றுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது மாருதப்புரவீகவல்லியும் அவள் அமைத்த ஏழு விநாயகர் ஆலயங்களும் என்றால் மிகையில்லை.

பின் வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இவ் விநாயகர் ஆலயங்களுக்கும் வேண்டிய உதவிகள் வசதிகளை வழங்கி பேணிப் பாது காத்தனர் என்பதே உண்மையாகும். ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலத்தில் மிகுந்த முக்கியத்துவத்துடன் சிறப்புற்றுக் காணப் பட்டிருந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உட்பட இவ் ஏழு விநாயகர் ஆலயங்களும் போர்த்துக்கேயர் ஆட்சியில் முற்றாக அழி வைச் சந்தித்ததனால் இவ்வாலயங்கள் பற்றிய அத்தனை தகவல்களும் மறைந்து போய்விட்டன. பின்னர் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவ்வூர் மக்களின் அயரா முயற்சியினாலேயே இவ் ஆலயங்கள் மீளப் புதிதாகக் கட்டப்பெற்று அல்லது புனருத்தாரணம் செய்யப்பெற்று படிப்படியான வளர்ச்சி நிலைகளினூடாக இன்றுள்ள ஆலயங்களாக மிளிர்கின்றன.

இவ் விநாயகர் ஆலயங்கள் மாருதப் புரவீகவல்லி ஈழத்திற்கு தீர்த்த யாத்திரை மேற்கொள்வதற்கு முன்பே இருந்ததாகவும் அவள் இவ்வாலயங்களை ஸ்தாபிக்கவில்லை என்றும் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வித் தாள் என்றும் ஓர் வரலாறு கூறுகிறது. இது பற்றிய ஓர் உண்மைத்தன்மையினை நோக் கும்போது மாருதப்புரவீகவல்லி தீர்த்த யாத் திரை மேற்கொண்டு ஈழத்தின் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி குமாரத்திபள்ளம் என்னும் இடத்தில் பாளையம் போட்டிருந்தாள் என்றும்

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலேஸ்வரரைத் தரிசிப்பதற்கு உக்கிரசிங்க மன்னன் வந்திறங்கி வளவர்கோன் பள்ளம் என்னுமிடத்தில் தங்கியிருந்தான் என்றும் இரு வரும் ஒருவரை ஒருவர் சந்தித்து காதல் கொண்டு திருமணம் பற்றி பிரஸ்தாபிக்க அரச குமாரத்தி தான் எடுத்திருக்கும் காரியம் பற்றிக் கூறி அதாவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வித் தல் அதன் பின்பே திருமணம் பற்றிச் சிந்திக்க முடியும் என்று கூறினாள். இதற்கு உடன்பட்ட உக்கிரசிங்கன் தானும் அக்காரியத்தில் பங்கு கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்தான் என்றும் யாழ்ப்பாண வைபவமாலை கூறு கிறது. எனவே மாருதப்புரவீகவல்லி புதிதாக ஏழு விநாயகர் ஆலயங்களை அமைக்காது அவ்விடத்திலுள்ள பெரியார்களது வேண்டு கோளின்படி ஏற்கனவே இருந்த விநாயகர் ஆலயங்களை மீள்புனருத்தாரணம் செய்து பெருங்கோவிலாகக் கட்டுவித்தாள் என்பதே பொருத்தமுடையதாகின்றது.

விநாயகர் ஆலயங்கள் ஏழும் மாருதப் புரவீகவல்லியால் அல்லது அவளது வரு கைக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் சில:

## ஆதிமூலரான லிங்கப்பிள்ளையார்

இவ்விநாயகர் ஆலயங்களில் ஆதி யில் மூலவராக லிங்க வடிவிலேயே பிள்ளை யார் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். சிவ வழிபாட்டிற்கு முக்கிய இடம் வழங்கிய சோழர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் பல சிவாலயங்களை நிறுவி சிவலிங்கத்தையே பிரதிஷ்டை செய்திருந்தனர். லிங்க வழிபாடு எத் தெய்வத்திற்கும் பொருத்தமுடையது என்பதால் ஆதியில் லிங்க வடிவிலேயே பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக் கின்றார்.

இவ் விநாயகர் ஆலயங்கள் காணப் படும் அயற்சூழலில் தூர்ந்த நிலையில் மிகப் பழைய கட்டடங்கள் கேணிகள் என்பன காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இவ்விடங் களில் தொல்பொருளாய்வு செய்வதன்மூலம் பல உண்மைகள் வெளிப்படுத்தப்படலாம்.

இன்றும் சுற்றயற் பிரதேசத்தில் அல் லது ஆலயத்திற்கருகாமையில் தழைத்தோங்கி வளர்ந்திருக்கும் மிகப் பழமையான தலவிருட் சங்கள்.

சோழர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த சிவவழிபாட்டு முறைகள் இன்றும் இவ்வாலயங்களில் காணப்படுதல்.

சோழர் ஆட்சிக் காலத்தில் சிவ வழிபாடு முக்கிய இடம்பெற்றிருந்தது. அதே போன்று மூலவரான பிள்ளையாருடன் சிவன், பார்வதிதேவி போன்ற தெய்வங்களுக்கும் தனி சந்நிதி காணப்படுதல், நடராஜர் சந்நிதி காணப்படுதல், உற்சவ காலங்களில் விநாயக ருடன் சிவன் அம்பிகை சமேதராய் எழுந்தருளி அருள்பாலித்தல் போன்ற நடைமுறைகள் பின் பற்றப்படுதல் இவ்வாலயங்களில் இன்றும் காணப்படுகிறது. இவை சோழர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஆரியச்சக்கர வர்த்திகள் காலத்தில் பின்பற்றப்பட்ட நடை முறையாகும்.

இவ் விநாயகர் தலங்களின்மீது 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும் புலவர்களால் இயற்றப்பட்ட பிரபந் தங்கள், அந்தாதிகள், பதிகங்கள் என்பன அமைந்திருக்கின்றன.

இவ் ஏழு விநாயகர் ஆலயங்களும் வழுக்கையாறு பாயும் வழுக்கையாற்றின் ஓரத்திலேயே அரச குமாரத்தியால் அமைக் கப்பட்டிருக்கிறது. ஆதியில் கடல் குளம் ஆறு ஆகிய நீர்நிலைகளை அண்டிய பிர தேசத்திலேயே தமிழர் வழிபாட்டிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்ததாக வரலாறு கூறுகிறது. அத்துடன் இவ்விநாயகர் ஆலயங்கள் ஏழும் யாழ் மாவட்ட வரைபடத்தில் வரிசைக்கிரமப் படி ஓர் நேர்கோட்டில் காணப்படுவதும் குறிப் பிடத்தக்கது.

மாருதப்புரவீகவல்லி காலத்தில் சோழர் ஆட்சி சிறப்புற்றிருந்த காலத்தில் கோயில்களே தேசத்தின் அரசியல், பொரு ளாதார சமூக போக்குகளை தீர்மானிக்கும் முக்கிய மையங்களாக விளங்கின. கோயில் களே மக்கள் பெருமளவுக்கு கூடும் இடங் களாக இருந்தன. எனவே கோயிற்கடவை முருகன் கோவிலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாக பெருங்கோவிலாக்கி அதனை அண்டிய பிரதேசங்களில் ஏழு விநாயகர் ஆலயங்களையும் ஸ்தாபித்த அரச குலத்தில் பிறந்த இளவரசியான மாருதப்புரவீகவல்லி யாழ்ப்பாணம் சிவபூமியாகத் திகழ்வதற்கு முன் னோடியாக விளங்கினாள் என்று கூறினால் மிகையில்லை.

## திறமைகளை வெளிக்கொண்டு வாருங்கள்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இன்னொரு மனிதன் இருக்கிறான் என்றால் அது அவன் கொண்டிருக்கும் திறமை என்று கூறலாம். திறமை என்பது ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டதாக அமைந்திருக்கும். ஒருவர் நன்றாக நடனமாடக்கூடியவராக இருப்பார். இன்னொருவர் இனிமையாகப் பாடக்கூடியவராக இருப்பார், இன்னும் சிலர் நன்றாகப் பேசக்கூடியவராக இருப்பார் மேலும் சிலர் சிறப்பாக ஓவியம் வரையக்கூடியவராக இருப்பர்.

இவ்வாறு பல திறமைகள் எம்மிடம் இருந்தும் அதை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே அமைகின்றன. அப்படியே சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதை எந்தளவுக்கு பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதும் கேள்விக்குறியே. எமது திறமைகளை நாம் வெளிக்கொணராவிட்டால் வேறு யார் கொண்டு வருவார்? எம்மிடம் என்ன திறமைகள் இருக்கின்றன? அதை எவ்வாறு வெளிக்காட்ட வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.

எம் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு முதல் தடையாக இருப்பது கூச்சம். நான் எவ்வாறு எல்லோர் முன்னிலையிலும் நடனமாட முடியும், நான் பாடினால் என்னை எல்லோரும் ஒரு மாதிரியாகப் பார்ப்பார்களே! என்ற ஒருவித பயம் கலந்த கூச்சம் ஏற்படும்பொழுது நாம் ஒன்றும் தெரியாதவர்களைப்போல் ஓடி ஒளிந்துகொள்கிறோம். அடுத்ததாக நம்மேல் நமக்கிருக்கும் அவநம்பிக்கை. நான் நன்றாகத்தான் ஆடுவேன் இருப்பினும் ஒருவேளை சொதப்பிவிட்டால் என்ன செய்வது? நன்றாக சங்கீதம் கற்றவள்தான் இருப்பினும் சுருதி தப்பிவிட்டால் என்னவாகும்? என்று நம்மை நாமே தாழ்த்திக்கொள்கிறோம். நம்மேல் நமக்கே ஒரு சந்தேகம் தோன்றுகிறது. இவ்வாறு சில காரணங்களினால் என்னால் முடியாது எனக்கொன்றும் பெரிதாகத் தெரியாது என தனக்குத்தானே ஒரு வட்டம் வரைந்துகொண்டு அதற்குள்ளேயே இருந்து விடுகின்றோம்.

ஒரு விதைக்குப் பசளையிட்டு, தண்ணீர் ஊற்றிச் சரியாகப் பராமரித்தால்த்தான் அது ஒரு கன்றாக முளைக்கும். சரியான கவனிப்பில்லாவிட்டால் அது பட்டுப்போய்விடும். அதுபோலத்தான் எமக்குள் இருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து அது மேலும் மேலும் நன்றாக வளர என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அப்படியில்லையென்றால் காலப்போக்கில் அந்தத் திறமையும் எமக்குள்ளேயே இருந்து மங்கிப்போய்விடும். பிறர் பாராட்ட வேண்டும், விருதுகள் பெறவேண்டும் என்பதற்காக எமது திறமைகளை வெளிக்கொணர வேண்டிய அவசியமில்லை. எமது திறமைக்கான அங்கீகாரத்தை நாம்தான் பெற முயற்சிக்க வேண்டும். பெரும்பாலும் திருமணமான பெண்களுக்கு வீடு, குடும்பம், பிள்ளைகள் என வாழ்க்கை ஓடுகிறது. அவர்களின் விருப்பங்கள், திறமைகள் எல்லாம் இலைமறை காயாகவே கடைசிவரையில் இருக்கின்றன. அவர்களுக்கு அதற்கான நேரமும் சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை என்பதுதான் உண்மை.

எது எவ்வாறெனினும் எமக்குள் இருக்கும் திறமைகளை வெளிக்கொணர என்றுமே நாம் தயங்கக்கூடாது. இவை அனைத்திற்கும் முயற்சியே முதற்படி. முயற்சியுங்கள். வெற்றி கொள்ளுங்கள்.

*நீ வெற்றிபெறும் பொழுதெல்லாம் உன் முதல் தோல்வியை நினைத்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(ஐம்பதாவது)

## சுந்தரப் பேரம்பெய்த படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

வம்மிசசேகர பாண்டியன் செங்கோல் நடாத்தி அரசியற்று நாளிலே, விக்கிரம சோழன் பாண்டியனோடு யுத்தஞ் செய்யக் கருதிக் கயபதி நரபதி துரகபதி முதலிய வடதேசத்தரசர்களைத் தனக்குப் போர்த் துணைவர்களாகக்கொண்டு, எண்ணில்லாத சேனைகளோடு புறப்பட்டுப், பாண்டிநாட்டை அடைந்தான். பாண்டியன், அதையறிந்து திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "பரம கருணாநிதியே! விக்கிரம சோழன் அடியேனோடு யுத்தஞ் செய்யும்பொருட்டு வடதேசத்தரசர்களோடும் எண்ணில்லாத சேனைகளோடும் வந்து பாசறை யில் இருக்கின்றான். அடியேனிடத்து அத் துணைச் சேனை இல்லையே. இதற்கு யாது செய்வேன்?" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது, சிவபெருமான், ஆகாயத்தில் அசரீரியாய் நின்று, "பாண்டியனே! அஞ்சாதே. நீ முன்னே போய், அவனோடு போர் செய். பின் நாமும் உனக்குத் துணையாய் வந்து, உனக்கு வெற்றி கிடைக்கும்படி பொருது வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பாண்டியன், அது கேட்டு மனமகிழ்ந்து, கண் ணீர் பொழிய, வணங்கிக்கொண்டு புறப்பட் டான். அப்பொழுது ஓரொற்றன் வந்து, "விக்கிரம சோழனுடைய சேனை இடபமலைக்குச் சமீ பித்து வந்துவிட்டது" என்றான்.

பாண்டியன் தேர்மேற்கொண்டு, பல வாத்தியங்கள் ஒலிப்ப, நால்வகைச் சேனை களுஞ் சூழ, யுத்தத்துக்குச் சென்றான். பாண்டியனுடைய சேனைக்கும் திருவாலவாய் மதிலை வளைத்த சோழனுடைய சேனைக் கும் யுத்தம் நடந்தது. இரண்டு படையும் பின்னிடாது பொருதும்பொழுது, சோழ னுடைய போர்த்துணைவர்களாகிய வடதேசத்து அரசர்கள் எதிர்ந்து பொருதப், பாண்டியனுடைய சேனை உடைந்தது. அதுகண்ட சோழன், தருக்கடைந்து, வெற்றிச்சங்கை எடுத்து ஊதினான்.

அப்பொழுது, சோமசுந்தரக் கடவுள், ஒரு வேட வடிவங்கொண்டு, பாண்டியனுக்குச் சேனாதிபதியாய் வில்லை வளைத்துச் சுந்த ரேசர் என்னுந் திருநாமம் எழுதப்பெற்ற பாணங் களைச் சோழனுடைய சேனையின்மீது செலுத்தினார். அப்பாணம் ஒவ்வொன்றும் நூறு நூறு வீரர்களைக் கொல்லச், சோழன் அது கண்டு, "இப்பாணமொன்றுக்கு இவ்வளவு வலி ஏது?" என்று வியந்து, அப்பாணமொன்றை எடுப்பித்து, வாசித்து, "இது சுந்தரேசர்" என்று எழுதப்பட்டிருக்கின்றது. சோமசுந்தரக் கடவுளே பாண்டியனுக்குத் துணை செய்கின்றார்" என்று பயந்து, மீண்டு போவானாயினான். போகும் பொழுது, அவனுக்குப் போர்த் துணைவர் களாய் உள்ள வடதேசத்தரசர்களெல்லாரும், "நில் நில்" என்று அவனைச் சூழ்ந்து, "நீ போருக்குத் தோற்றோடுகின்றாயே! உன் ஆண்மை என்னை? மானமென்னை? போகாதே, வா" என்று திருப்பிக்கொண்டு, பாண்டியனு டைய சேனைமேற் சென்று, பாணங்களை விடுத்தார்கள். வேடவடிவங்கொண்டு வந்த

*வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமசுந்தரக் கடவுள், ஒரு பாணத்தைச் செலுத்தி, அவர்கள் செலுத்திய பாணங் களெல்லாவற்றையும் துணித்து விட்டுப், பின்னும் பற்பல பாணங்களை விடுத்துச், சோழனுடைய சேனையை அழித்தார். சோழன், தன் சேனை மடிந்தது கண்டு, பயந்து, எஞ்சிய சிறுசேனை சூழத் தோற்று, ஓடிவிட்டான். வேட வடிவங்கொண்ட சிவபெருமான், பாண்டி யனுடைய மலர்ந்த முகத்தைப் பார்த்து அருணகை சிறிது செய்து, மறைந்தருளினார். பாண்டியன், வெற்றிச் சங்கூதி, யானை மேலேறிப் பெண்கள் மங்கலமேந்த சென்று, திருநகரத்திற் புகுந்தான். தனக்கு வெற்றித் திருவையளித்த சோமசுந்தரக் கடவுளுக்கு இரத்தினாபரணங்களும் வில்லும் அவருடைய திருநாமந் தீட்டிய பாணமுஞ் செய்வித்துச், சாத்தி, நீதி வழுவாமல் அரசு செய்து கொண்டிருந்தான்.

## நரகத்தை விரும்பி ஏற்றவர்

சீடர்களின் வேண்டுகோளை ஏற்றுத் திருவரங்க மடத்தின் தலைமையை ஏற்றார் இராமானுசர். அவருடைய உள்ளம் மதுரையில் உள்ள திருக்கோட்டியூர் நம்பி அவர்களிடம் தீட்சைபெற விரும்பியது. மதுரை சென்ற அவர் நம்பி அவர்களைப் பணிந்து வணங்கித் தம்மைச் சீடராக ஏற்று மந்திர உபதேசம் வழங்குமாறு வேண்டினார்.

"தக்க சமயம் வரட்டும். உனக்கு மந்திர உபதேசம் செய்கிறேன்" என்று தட்டிக் கழித்தார் நம்பி அவர்கள். தன் முயற்சியை விடாத இராமானுசர் பதினெட்டு முறை நடந்து சென்று மதுரையை அடைந்து மீண்டும் மீண்டும் வேண்டினார். மந்திர உபதேசம் செய்ய முடிவு செய்தார் நம்பி அவர்கள். "நான் சொல்லும் மந்திரம் மிகவும் ஆற்றல் வாய்ந்தது. இம் மந்திரத்தை ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும். இதை உச்சரிப்பவர்கள் வீடுபேறு அடைவார்கள். உன்னை நான் பலமுறை சோதனை செய்தே சீடனாக ஏற்றுக்கொண்டேன். அதேபோலத் தகுதியுடைய சீடனுக்கு இந்த மந்திரத்தைச் சொல்லித்தர வேண்டும்" என்று இராமானுசரிடம் வாக்குறுதி பெற்றார்.

எட்டெழுத்து மந்திரமான "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தை இராமானுசருக்குச் சொல்லித் தந்தார் அவர். மந்திர உபதேசம் பெற்ற இராமானுசர் திருவரங்கம் திரும்பினார். "ஆற்றல் வாய்ந்த இந்த மந்திரத்தை மக்கள் எல்லோரும் சொன்னால் வீடுபேறு அடைவார்களே" என்று நினைத்தார். சாதிவேறுபாடு இல்லாமல் எல்லோரையும் கோயிலின் முன் கூடச் செய்தார். கோயிலின் முன்புற வாசலில் உள்ள கோபுரத்தின் உச்சியில் ஏறினார். அங்கிருந்தபடியே உரத்த குரலில் புனித மந்திரத்தை எல்லோரும் கேட்குமாறு சொன்னார். இதை அறிந்த அவருடைய குருவாகிய நம்பிகள் கடுங்கோபம் கொண்டார். திருவரங்கம் நோக்கி வந்தார்.

அவரைப் பணிவாக வணங்கிய இராமானுசர், "குருவே! என் தவறுக்கு நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். கோபம் அடங்காத நம்பிகள், "நீ என்றென்றும் நரகத்தில் கிடந்து துன்புறுவாய்" என்றார். "குருவே! வலிமை வாய்ந்த எட்டெழுத்து மந்திரத்தை என் வாயிலாகக் கேட்டு உலக மக்கள் அனைவரும் வீடுபேறு இன்பத்தை அடையும்போது நான் ஒருவன் வலிய நரகில் விழுந்து எனக்குக் கிடைக்கும் துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னார். இராமானுசரின் அருள் உள்ளத்தை அறிந்த நம்பிகள் பெருமகிழ்ச்சி அடைந்தார். அவரைக் கட்டித் தழுவி நல்லாசிகள் வழங்கினார்.

*எல்லாம் தெரியும் என்பவர்களைவிட என்னால் முடியும் என்று முயற்சிப்பவரே வெற்றியடைவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் சிவலிங்க வடிவில் சிவபெருமான் காட்சிதந்த இரவே சிவராத்திரி

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

சிவராத்திரி என்பது சிவபெருமானுக்குரிய "இராத்திரி" என்று சொல்லப்படும். சிவபெருமான் விருப்பு வெறுப்பு இல்லாதவர். ஞானமே திருமேனியாக உள்ளவர். சிவனை நோக்கி உலக இன்பங்களாகிய போக போக்கியங்களை விரும்பி, சிலர் காமிய தவம் மேற்கொள்கிறார்கள். அத்தகையவர்களுக்கு சிவபெருமான் நீண்ட வாழ்நாள், நோயற்ற வாழ்க்கை, அளவற்ற செல்வம், மாட மாளிகை போன்றவற்றைத் தந்து நல்ல வாழ்க்கை அமையும்படி செய்கிறார்.

தேவலோக இன்பங்களை விரும்பி தவம் செய்பவர்களுக்கு இந்திர உலகம், சொர்க்க உலகம், வைகுண்ட உலகம் முதலிய உயர்ந்த உலகங்களிலே எண்டிசைக் கனகமும், பைம்பொன் மாளிகையும், கற்பகப் பொழிலும் அனுபவிக்கும்படி சிவபிரான் அருள் புரிகிறார்.

## திருமாலும் பிரம்மாவும்

உயிர்களின் அறிவிலே கலந்திருக்கும் ஆணவமல சக்தி வலிமை குன்றும் வகையில் படைத்தல் முதலிய சக்தியையும் அந்த அயன், மால், ருத்திரன் ஆகியவர்களிடம் பதித்தருள்கிறார். அந்த சக்திகளே அவ்விதம் படைத்தல் முதலிய செயல்களைச் செய்கிறார்கள். இதை அயன் மால் முதலியவர்கள் அறிந்துகொள்ளாமல் அந்தப் படைத்தல், காத்தல் முதலிய செயல்களுக்குத் தாங்களே பரம காரணர் என்று தவறாக நினைத்துக் கர்வம் கொண்டதாகவும் ஒரு நிகழ்ச்சி சொல்லப்படுகிறது.

## பிரம்மாவுக்கும் திருமாலுக்குமிடையில் ஜோதி வடிவம்

ஒரு சமயம் திருமாலும் பிரம்மாவும் தங்களுக்குள் யார் பெரியவர்? என்று பூசலிட்டுக் கொண்டார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட இந்தப் பூசல் காரணமாக உலக உயிர்கள் துன்பமடைந்தன. இவ்விதம் நேர்ந்த உலக உயிர்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த இருவருக்குமிடையில் ஒரு ஜோதி வடிவமாகத் தோன்றினார். இந்த ஜோதியின் அடியையும் முடியையும் எவர் காண்கிறாரோ அவரே பெரியவர் என்று கூறினார்.

## பிரம்மா அன்னமாகவும் திருமால் வராகமாகவும் (பன்றி) அடிமுடி தேடச் சென்றனர்

பிரம்மாவும் திருமாலும் முறையே அன்னமாகவும் வராகமாகவும் உருவம் கொண்டு அந்த ஜோதியின் அடிமுடியைக் காண முயன்றார்கள். அது இயலாமல் போகவே அகந்தையிலிருந்து விடுபட்டு அந்த ஜோதியை வணங்கி நின்றார்கள். அப்பொழுது அவர்களுக்குச் சிவபெருமான் காட்சி தந்து அருள்புரிந்து அந்த ஜோதியில் மறைந்து சிவலிங்கமாகக் காட்சி தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் இறைவன் சிவலிங்கமாகக் காட்சி தந்த இரவே சிவராத்திரி

அந்த ஜோதி அனற் பிழம்பாகிய மலை வடிவமாக ஆயிற்று. அதுவே திருவண்ணாமலை ஆகும். இவ்விதம் பிரம்மாவுக்கும், திருமாலுக்கும் இறைவன் சிவலிங்க வடிவத்தில் காட்சி தந்த இரவே சிவராத்திரி ஆகும். அந்த ராத்திரியில் தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானைப் பூஜித்து பெரும்பேறு பெற்றார்கள்.

அயனும் மாலும் சிவபெருமானின் அடிமுடி தேடிச் சென்ற வரலாறு பலரும் அறிந்ததுதான். ஆனால் அவர்களுக்கு இறைவன் சிவலிங்க வடிவத்தில் காட்சி கொடுத்தது சிவராத்திரியில் என்பது சைவ சித்தாந்திகள் எழுதிய நூல்களிலிருந்தே நாம் அறிந்து வருகின்றோம்.

## இரவு பகல்

இனி "பகல்" என்பது கருவி கரணங்களோடு சேர்ந்து அறிவு தொழிற்படும் காலமாகும். "இரவு" என்பது கருவி கரணங்கள் ஒடுங்கிக் கிடக்கும் நிலையாகும். "படைப்பு" என்பது கருவி கரணங்களோடு உயிர்கள் கூடி நிற்கும் நிலையாகும். "சங்காரம்" என்பது கருவி கரணங்களிலிருந்து உயிர்கள் நீங்கி நிற்கும் நிலையாகும். இதனால் படைப்பு "பகல்" ஆகும். சங்காரம் "இரவு" ஆகும்.

## உமாதேவியார் சிவபெருமானை பூசித்த இரவு சிவராத்திரி என்றும் போற்றப்படுகிறது.

உயிர்கள் கருவி கரணங்களுடன் கூடாத ஒடுக்க நிலையிலிருந்து (தோற்றம்) படைப்புக்கு வருவதற்கு முன்பு அந்த நள்ளிரவில் உமாதேவியார் எல்லா உயிர்களும் சிவபிரான் அருளால் பந்த பாசப் பிணைப்புகள் (வினையின் வேகமும், மலத்தின் வலிமையும், மாயையின் மயக்கமும் முறையே) குறைந்து சிவபுண்ணியமும் சிவானந்த முத்தியும் உயிர்களுக்குச் சித்திக்க வேண்டி சிவபூசை செய்தார். அவ்விதம் உமாதேவியார் சிவபெருமானை பூசித்த இரவு சிவராத்திரி என்றும் போற்றப்படுகிறது.

இளங் குழந்தைகளுக்குக் கடும் நோய் வந்தபோது அந்த நோய்க்குரிய வண்மையான மருந்தை அக் குழந்தைகள் அருந்தமாட்டா. அப்போது அதன் தாய் மருந்துண்டு பத்தியம் காத்து தன் பாலை அந்தக் குழந்தைக்குப் புகட்டுகிறாள். அதனால் அந்தக் குழந்தைகளின் நோய் நீங்குவதை உலக வழக்கில் நாம் பார்க்கிறோம். அதுபோலவேதான் உயிர்கள் துன்பம் நீங்கி, இன்பம் பெறும் பொருட்டு உமாதேவியார் சிவராத்திரியில் சிவனைப் பூசித்தார்.

## சிவராத்திரி தினத்தில் பஞ்சாட்சர ஜபம் செய்தால் கோடி மடங்கு பலன் கிடைக்கும்.

பஞ்சாட்சர ஜபம், சிவாலய தரிசனம், சிவலிங்க பூசை ஆகியவற்றை எல்லா நாட்களுமே செய்யலாம். செய்யவேண்டும் என்றாலும் மற்ற நாட்களில் செய்வதைவிட சிவராத்திரி தினத்தில் அவற்றைச் செய்வது கோடிமடங்கு சிறந்த பலனைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரியில் நான்கு ஜாமப் பூசைகள்

மாசி மாதம் கிருஸ்ணபட்சம் இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் பதினாறு நாழிகைக்குட்பட்ட காலத்தில் சதுர்த்தசியோடு கூடிய காலமே சிவராத்திரி புண்ணிய காலமாகும். அன்றையதினம் இரவில் நான்கு காலமும் விசேட பூசை செய்து சிவனை வழிபட வேண்டும். இவ்விதம் செய்பவர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்தும் விடுபட்டு இம்மையில் நல்வாழ்க்கை பெறுவதோடு முடிவில் சிவபெருமானின் திருவருளுக்கு உரியவர்கள் ஆவார்கள்.

## சொன்னபடி இறைவன் வந்தாரா?

பத்ராசலத்தில் இராமதாசர் என்ற அடியவர் இருந்தார். எப்பொழுதும் இராமபிரானை வழிபடுவதிலேயே தன் காலத்தைக் கழித்து வந்தார். ஒருநாள் தன் குருவிடம் சென்ற அவர், "நீங்கள் பலமுறை இறைவன் இராமபிரானை நேரில் தரிசித்து இருக்கிறீர்கள். எனக்கு ஒரே ஒருமுறை அவர் தரிசனம் கிடைக்க அருள்செய்ய மாட்டீர்களா?" என்று பணிவுடன் வேண்டினர்.

இராமதாசரின் அன்பைக் கண்டு மகிழ்ந்த குரு, "நாளை உன் இல்லத்திற்கு இராமபிரான் வருவார். அவரை வரவேற்கத் தயாராக இரு" என்றார். எல்லையற்ற மகிழ்ச்சியுடன் தன் இல்லத்திற்கு வந்தார் இராமதாசர். இறைவன் இராமபிரான் வரப்போகும் நற்செய்தியை எல்லோர்க்கும் தெரிவித்தார். ஊர்மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இராமதாசரின் இல்லத்தையும் அவர் இருந்த வீதியையும் அழகாக அலங்காரம் செய்தார்கள். சுவையான விருந்து தயார் செய்தார்கள். எல்லோரும் இராமதாசரின் வீட்டின் முன் குழுமி நின்றார்கள். இராமபிரானின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தார்கள்.

அப்பொழுது எருமை மாடு ஒன்று வாலைத் தூக்கியபடி இராமதாசரின் இல்லத்திற்குள் நுழைந்தது. அங்கே பூசைக்கு வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களை எல்லாம் உருட்டியது. சமைக்கப்பட்டிருந்த உணவை உண்டது. இதைக் கண்டு எல்லோரும் கோபம் கொண்டார்கள். கையில் கிடைத்த பொருள்களை எல்லாம் எடுத்து அந்த மாட்டை நையப்புடைத்தார்கள். பக்த இராமதாசரும் அவர்களுடன் சேர்ந்து அந்த மாட்டை அடித்து விரட்டினார். வலி தாங்கமுடியாமல் அலறிய அந்த மாடு பின்வாசல் வழியாகத் தப்பி ஓடியது.

இராமபிரானை எதிர்பார்த்திருந்த வேளையில் இப்படி எருமை மாடு நுழைந்து அலங்கோலம் செய்துவிட்டதே என்று வருந்தினார் இராமதாசர். மீண்டும் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திய அவர் இராமபிரானுக்காக காத்திருந்தார். இராமபிரான் வரவே இல்லை. ஊர் மக்கள் அவரைக் கேலி செய்தபடி அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.

கோபத்துடன் குருவிடம் சென்ற இராமதாசர், "இராமபிரானுக்காகக் காத்திருந்தபோது எருமைமாடுதான் வந்தது. அதை அடித்து விரட்டினோம். நீங்கள் சொன்னபடி இராமபிரான் வரவே இல்லை. இப்படி என்னை ஏமாற்றலாமா?" என்று அழுதுகொண்டே கேட்டார். அதைக்கேட்ட குரு, "இராமபிரான் இங்கு வந்து தன் முதுகைக் காட்டினார். அவர் முதுகில் ஏராளமான காயங்கள் இருந்தன. வேதனையுடன் அவர் என்னிடம் 'உம் பேச்சைக் கேட்டு அடியவர் வீட்டிற்கு எருமை வடிவில் சென்றேன். எனக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்தீரா?" என்று சொல்லிவிட்டுச் சென்றார்" என்றார்.

"குருவே! எருமையாக வந்தது இறைவனா? உண்மை உணராமல் அடித்து விரட்டி விட்டேனே. என்ன செய்வேன்?" என்று அழுது புலம்பினார் இராமதாசர். அவரது அன்பிற்கு உள்ளம் நெகிழ்ந்த இராமபிரான் அவர்முன் காட்சி தந்தார்.

*பலமுறை முயற்சித்தும் உனக்கு தோல்வி என்றால் உன் இலக்கு தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத் தொண்டாற்றி உயர்வடைந்தவர்களின் வரிசையில் சந்தனக் காப்பிடும் தொண்டால் உயர்ந்த மூர்த்தி நாயனார்

(தொடர்ச்சி...

– *திரு மூ. சிவலிங்கம்* அவர்கள் –

பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் பல சீர்வளங்களும் கொண்ட வணிகர் குலத்தில் மூர்த்தி நாயனார் என்னும் தவசீலர் அவதரித்தார். இவர் மதுரை சோம சுந்தரப்பெருமான்மீது இடையறாத பக்தி பூண்டவர். தமது பொழுதை அவப்பொழுதாக் காது சிவப்பொழுதாகவே மதித்து வாழ்ந்தவர். இவர் தினமும் தமது நித்திய கடமையாக இறைவனை வழிபட்டவர். தமது பக்தி மேலீட் டினால் தினமும் சோமசுந்தரப் பெருமானுக் குச் சந்தனக் காப்பிட்டு இறைவனின் அழ கைக் கண்டு மகிழ்பவர். தூய சந்தனக் கட்டைகளைத் தேடி எடுத்து வேண்டியளவு வைத்திருப்பார். இதனால் மூர்த்தியாரின் பணி நெடுநாட்களாகத் தொடர்ந்தது.

அக்காலத்தில் சமண சமயத்தைத் தழுவிய வடுக மன்னன் கர்நாடக மாநிலத் தின் ஆட்சியை உயர்த்துவதன் பேரில் தனது நால்வகைச் சேனைகளுடன் பாண்டிய நாட் டின்மீது படை எடுத்தான். ஈற்றில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதுடன் மதுரையில் அரசாண்டான். இதனால் சமண சமயம் மேலோங்கியது. சிவாலயங்கள் இயங்காதபடி சிவனடியார்களைத் துன்புறுத்தினான். சோம சுந்தரப் பெருமானுக்குத் தொண்டு செய்த மூர்த்தி நாயனாருக்குப் பல கெடுதிகள் செய்தான். மூர்த்தி நாயனார் கொடியவனின் துன்பங்களை நோக்காது சந்தனக் காப்பிடும் பணியைத் தொடர்ந்தார். இதனால் சினமுற்ற வன் சந்தனக் கட்டைகள் ஏதும் கிடைக்காத வாறு தடை செய்தான். மூர்த்தி நாயனார் நல்ல சந்தனக் கட்டைகளைத் தேடிப் பகல் முழுவதும் அலைந்தும் ஏதும் கிடைக்காது இறைவனிடம் முறையிட்டார். இக்கொடிய வனின் ஆட்சியில் சந்தனக்காப்பிட முடிய வில்லையே, நல்லாட்சி புரியும் அரசன் எப் போது கிடைப்பான், அவ்வேளை எம்பெரு மானுக்கு என் பணி செய்வேன் எனக் கவலை யுடன் முறையிட்டார்.

மூர்த்தி நாயனாரின் சிவபக்தி உந்திய தால் உற்சாகமடைந்தார். சந்தனக்கட்டை இல்லாவிடினும் இதுவரை காலமும் சந்தன மரைத்த கை இருக்கிறதே என்று கூறித் தமது முழங்கையால் சந்தனமரைக்கும் கருங் கல்லில் தேய்த்தார். நாயனாரின் முழங்கை யின் தோல், தசை, என்பு யாவும் தேயவும் இரத்தம் வேகமாகப் பாய்ந்தது. அவர் மேலும் தேய்த்ததும் முழங்கை தேய்ந்து என்பில் துவாரம் தென்பட்டு அதனூடாக மச்சை ஒழுகி வெளியே வந்தது. இதனைக் கண்ட தும் சொக்கநாதப் பெருமான் தன் பக்தன்மீது கருணை கொண்டார். “ஐயனே! மெய்யன்பின் துணையால் இச்செயலைச் செய்யாதே. உனக் குக் கேடு விளைவித்தவனின் அரசு முழு வதையும் நீயே பொறுப்பேற்பாய். முன்பிருந்த தீமைகளை விடுத்து நாட்டைக் காப்பாற்று வதுடன் சந்தனக் காப்பிடும் தொண்டையும் செய்வாய். ஈற்றில் உன் சிவப்பணிக்காக சிவ லோகத்தை அடைவாய்” என்று அசரீரி வாக் குரைத்தது. இதைக் கேட்டதும் மூர்த்தி நாய னார் இறைவனை வியந்து எழுந்தார். அவரின் கையிலேற்பட்ட ஊறு நீங்கி வழமைபோல்

*எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம். எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை காட்சி தந்தது. மீண்டும் இறைவனை வணங்கி மகிழ்வடைந்தார். அன்றிரவு கொடிய சமண மன்னன் திடீரென மாண்டான். மனைவி முதலானோர் அழுது புலம்பினர். மந்திரிமார் அரசனின் உடலுக்கு மறுநாள் இறுதிக் கடன் களைச் செய்தனர். மாண்டுபோன அரசனுக்கு மக்கட் பேறில்லை. அடுத்து அரசாளப்போவது யாரென மந்திரி பிரதானிகள் ஆலோசித்தனர். இறுதி முடிவாகப் பட்டத்துயானையின் கண் ணைத் துணியால் மூடிக்கட்டி அரசாளத் தகுந்த ஒருவரை அழைத்து வருமாறு அனுப்ப முன் வந்தனர். மறுநாள் பட்டத்துயானை அனுப்பப் பட்டது. அது மதுரை வீதியெல்லாம் சுற்றி வந்த பின் சொக்கநாதப் பெருமானின் ஆலய வாசலை அடைந்தது.

அச்சமயம் மூர்த்தி நாயனார் இறை வனின் சித்தம் இதுவானால் நான் சிறப்பாகப் பணியை ஏற்பேன் என்று கூறித் திருக்கோயி லின் ஒருபுறத்தே நின்றார். அவ்வேளை பட்டத்து யானை மூர்த்தி நாயனாரின் முன் பணிந்து தாழ்ந்து நின்றதும் நாயனாரைத் துதிக்கை யால் தூக்கி தனது முதுகில் ஏற்றியது. அச்சமயம் மந்திரிகள் யாவரும் வியப்புடன் நாட்டின் துன்பங்கள் நீங்க ஒரு சிவனடியாரே அரசராவது எமது பேறாகும் எனக் கூறி மூர்த்தி நாயனாரின் திருவடிகளை வணங்கி னர். அச்சமயம் ஊர் மக்கள் யாவரும் மகிழ்ந்து ஆரவாரஞ் செய்தனர். பல்சுவை வாத்தியங் கள் ஒலித்தன. ஏற்கெனவே முடிசூட்டு விழா விற்கென அலங்கரித்த மண்டபத்தின் முன் யானை மூர்த்தி நாயனாரை இறக்கியது. அச்சமயம் மூர்த்தி நாயனார் உரிய சிம்மா சனத்தில் அமர்த்தப்பட்டார். உரிய விதிமுறைப் படி முடிசூட்டு விழா ஏற்பாடானது. இப்போ சமணம் மறைந்துள்ளது. சைவம் ஓங்கினால் தான் அரசபணி ஏற்பேன் என மூர்த்தி நாயனார் கூறினார். அச்சமயம் அமைச்சர்களும் பிரதானி களும் நீங்கள் இடும் கட்டளையை நாம் ஏற்போம். அரசு சிறப்படைவதே எமது விருப்ப மாகும் என்றனர். இந்த அரசில் விபூதி, உருத் திராக்கம், சடாமுடி ஆகியவையே என் ஆட்சிக்குரியவை என்றார். யாவரும் பூரண திருப்தியென மகிழ்ந்தனர்.

மூர்த்தி நாயனார் முடிசூட்டு வைபவம் முடிந்ததும் நேராக திருஆலவாய் திருக் கோயில் சொக்கநாதப் பெருமானை வாழ்த்தி வணங்கினார். அதன்பின் பட்டத்து யானை மீதேறி மதுரை நகரவீதியெல்லாம் பவனி வந்தார். பவனி முடிந்ததும் அரச அரண் மனைக்கு வந்து அரியணை ஏறினார். மூர்த்தி நாயனாரின் ஆட்சியில் சமண சமயமும் அதன் சார்பில் சைவ மக்களை வருத்தியோரும் அகன் றனர். சிவசின்னங்களான திருநீறு, உருத்திராக் கம் நிலைபெற்றது. சைவசமயம் முன்போல மேலோங்கியது. குடிமக்கள் யாவரும் நல்லா தரவு தந்தனர். மூர்த்தி நாயனார் முன் கூறிய படி விபூதி, உருத்திராக்கம், சடாமுடி ஆகிய மும்மையினால் மதுரையை அரசாண்டார்.

இவர் தமது பாரம்பரிய சைவ மரபுப் படி புலனடக்கத்துடன் இல்லறத்தை நாடாது சிறந்த ஒழுக்கசீலராக வாழ்ந்து வந்தார். உட்பகை, புறப்பகை யாவற்றையும் நீக்கிப் பகையரசர்களை வென்றொழித்தார். நாட்டு மக்களை நீதியுடன் சிறப்பாக வாழ வகை செய்து நீடியகாலம் அரசாண்டார். அரச பதவி ஏற்றாலும் அக்காலத்திலிருந்து தமது நித்திய தொண்டாக இறைவனுக்குச் சந்தனக் காப்பிடும் பணியை மேற்கொண்டார். இறை வனின் சித்தப்படி நல்லாட்சி நிறைவில் இறை வனடி சேர்ந்தார்.

இறைவனுக்காக முழங்கையைத் தேய்த்த பக்தன் இறைவனருளால் யானை மீதேறிச் சென்று அரசபணியேற்று திருநீற்றின் ஒளி துலக்கி சைவத்தை நிலைநாட்டினார். மூர்த்தி நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆனார்.

*ஒவ்வொரு நாளும் வெற்றிப் பயணத்தை தொடங்கிவிட்டேன் என்று முதலடியை எடுத்துவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணமும் ஈழத்து புராதன கந்தன் திருத்தலங்களும்

– திரு த. செல்வசோதி அவர்கள் –

"திடங்கொண்ட அந்தணன் கச்சியப் பன்திகழத்
திகடசக் கரஞ்சொல்லியும்
திளைத்தநின் மதுகரம் தாதூத விரியிதழ்ச்
செங்குமுத மலர்வாயினால்
கடம்பலரு திண்புயச்சோதியே! ஆதியே!"
-கந்தவனம் - பிள்ளைத்தமிழ்)

மனவுறுதிகொண்ட அந்தணன் குமரக் கோட்ட காஞ்சிக் கச்சியப்பருக்குத் "திகட சக்கர" என கந்தபுராணத்திற்கு முதலெடுத்துக் கொடுத்த மலர்வாய் கொண்ட கந்தனும், மனம் தளர்ந்து வாழ்வில் வெறுப்புற்று தற் கொலை செய்யத் துணிந்து திருவண்ணா மலை திருத்தல வடகோபுரத்து உச்சியில் ஏறிக்குதித்த அருணகிரிக்கு "ஸ்பரிச" தீட்சை அருளி "முத்தைத்தரு" என திருப்புகழிற்கும் முதலெடுத்துக் கொடுத்த கந்தனாம், சுப்பிர மணியர் ஏந்தியிருக்கும் "வேல்" என்றுமே எமக்கு பிறப்புதரும், உயிரூட்டும், வழிகாட்டும், வாழ்வுதரும், முத்திதரும் என்பதனை வர லாற்று ரீதியாக, அனுபவ ரீதியாக, இறை உணர்வுடன், அறிவுபூர்வமாக உணர்கிறோம், திடமாக நம்புகிறோம். சைவத்தமிழ்ச் சார் புடன் வாழ்வோர்க்கு இந்த நம்பிக்கையே முன்னிலையிலுள்ளது. பிறப்பு என்ற ஒன்று உண்டெனின் இறப்பும் உண்டு என்பதனை நாம் அனைவரும் சிந்தித்து உணர்ந்து கவனத் திற்கொண்டு செயற்படுகிறோம். முருகனை வாழ்த்திப் பாடும் மரபில் பல வரலாற்று இலக்கியங்கள் உள்ளன. முருகப்பெருமான் வாழ்த்துப் பொருள் மட்டுமன்றி வாழ்வுப் பொருள் என்ற உறுதி, சிந்தனை எம் இரத் தத்தில் ஊறி ஓடி இருதயத்தில் அடிக்க வேண்டும். "சுப்பிரமண்யோம்" என மூன்று முறை உள்ளத்திலும் உதட்டிலும், மந்திர உச்சாடனத்திலும் ஒலிக்கவேண்டும், ஒலிக் கின்றது. ஏகாட்சர பிரம்மமாகிய ஓரெழுத்து பிரணவம் எனும் "ஓம்" இல்லையாயின் ஓங் காரமின்றி அருட்சக்தி இல்லாதொழிக்கப்படு கிறது. அருட்சக்தியானவன் ஓங்காரத்தின் உட்பொருளாகி பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்றவற்றை இயக்குகின்றான். இதுவே மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவங்களுமாகும். இதனை அறியாத, தெரியாத, உணராத நம்மில் சிலர் நிலம், நீர் ஆகிய இரு பூதங்களின்மீதும் அதீத ஆசை, விருப்புக்கொண்டு மற்றயவர் களிற்கு தடைகள், இடையூறுகள் ஏற்படுத்தக் கூடியவாறான இழிவான செயல்களில் ஈடுபட்டு உழல்வதனை அவதானிக்க முடிகிறது. இவ் வாறான செயற்பாடுகளே இன்று அழிவுகள் வைராக்கிய முறைமை நிகழ்கின்றமைக்கு காரணியாக அமைந்துள்ளன. பழந்தமிழர் இயற்கையோடு ஒன்றிய வாழ்வினை இறை பக்தியுடன் இணைந்து செயற்பட்டுள்ளனர். பஞ்சபூதங்களான இயற்கையின் சீற்றத்தினை பேராற்றலை "கடல்கோள்" என பழந்தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று குறிப்பிட்டிருந்த இன்றைய "ஆழிப் பேரலை"யினை நேரில் காணும் உணரும் வாய்ப்பு இளம் தலைமுறையினருக்கு கிடைத் தமையானது அவர்களது உள்ளத்தில் இவை பதியப்பட்டிருக்கும். புதிய உலகியல் முறை யின்கீழ் இயற்கையை மீறி "நம்மாலாவது ஒன்றுமில்லை" என்ற தெளிவு, இறைசிந்தனை ஏற்படுகிறது.

நமது விருப்பு, வெறுப்பு, ஆசை என்பவற்றின் விளைவாகவே எமக்கு "பயம்" உண்டாகிறது. பயத்தின் காரணமாக பக்தி உண்டாகி இறைசக்தி எம்மைக் காக்கின்றது. நமது துன்பங்களைப் போக்கி இன்ப வாழ் வளித்து நம்மை வாழ்விப்பது முக்காலத்திற் கும் உண்மைப் பொருளான முருகப்பெரு மானது அளவற்ற கருணையும் திருவருளும் ஆகும். ஒருவர் அன்பும், அருளும், அறமும் உடையவராக இருப்பின் அறவாழ்வை நடாத் தும் உயரிய பண்புடையவராகிறார். மும்மல இருளைக் கெடுத்து ஞான ஒளியைக் கொடுத்து சோதியினுள் சோதியாக விளங்குவது அருள் சுரப்பது "ஞானசக்தி" ஆகிய ஞானவேல் அவனே ஞானபண்டிதன். முருகனின் ஆறு முகங்களின் அருட்கடாட்சங்களாக ஐசுவரி யம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகியன காணப்படுகின்றன. இதில் ஐந்தாவ தாக உள்ளது ஞானசக்தியே!

"பயந்த தனிவழிக்குத்துணை
வடிவேலும் செங்கோடன் மயூரமுமே"

என அருணகிரிநாத சுவாமிகள் கந்தரலங்காரத்தில் குறிப்பிடுகிறார். நெஞ் சத்திலே குடிகொண்டுள்ள வேதனைகளை யும், சோதனைகளையும் சமர்ப்பித்து மன ஆறுதல், நிம்மதி தேடி ஆறுதல் அடையும் இடம் ஆறுமுகனது "வேல்" உள்ள ஆலயங் களே! சந்நிதிகளே. இவ்வாறு மூலஸ்தானத் தில் "வேல்" உள்ள ஆலயங்களாக, செல்வச் சந்நிதி, நல்லூர், மண்டூர், கதிர்காமம், உகந்தை மலை முருகன் போன்றனவாகும். பொலி கண்டி கந்தவன ஆலயத்திலும்கூட ஆரம்ப காலத்தில் "வேல்"தான் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தமை வரலாறாகும். முல்லைத்தீவு குமரபுரம் முருகன் ஆலயத்தில் சோழர் ஆட்சிக்காலத்தில் சோழர் காலத்திற் குரிய சண்முகர் விக்கிரகம் மூலவராக பிர திஷ்டை செய்யப்பட்டிருந்துள்ளது. இக் குமரபுர முருகன் ஆலயம் போர்த்துக்கீசரால் (1507- 1657) இடிக்கப்பட்டபோது இச்சண்முகர் விக்கிரகம் பாதுகாக்கப்பட்டு அங்கிருந்து கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டு கந்தவன மூலவராக குமரபுர சண்முகர் பிரதிஷ்டை செய்யப்படும்வரை கந்தவன ஆலய மூலவ ராக "வேல்"தான் அமைந்து அருள்பாலித்துள் ளது. கந்தபுராணத்தில் குறிப்பிடப்பெறும் வீரவாகு தேவரின் தண்டத்தினால் இடித்து உண்டாக்கப்பெற்ற நறுநீர்க்கேணி அற்புதம் வாய்ந்தது. இக்குளத்தின் மத்தியபகுதியில் "விளைவு கற்பூரம்" விளைந்துள்ளது. குறிப் பிட்ட காலப்பகுதியில் இது கல்லாக மாறி விட்டது. இது இன்றும் கல்லாகவே காணப்படு கிறது. இக்கல்லின் மேல் பகுதியில் ஊருடக உயிரினம் "ஆமை" இளைப்பாறுவதை அவ தானிக்கலாம். இவ்விடத்தில் கவிஞர் ஒரு வரின் பாடல் நினைவுக்கு வருகிறது.

"கடவுள் ஏன் கல்லானான்
கல்லாய்ப் போன மனிதர்களாலே"

-விளைவு கற்பூரம்.

கல் ஆ(ன)மை; மூலஸ்தானங்களின் உட்பகுதி சுவர்களிற்கு பளிங்குக் கற்கள் பதிப்பது- ஆலய மூர்த்தியின்- மூர்த்திகரத் தினை மழுங்கடித்து- இல்லாதொழிக்கின்றது. இது விஞ்ஞானபூர்வமான யதார்த்த உண் மையும்கூட. இதை இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

*ஒருநாள் முடியும் என்று காத்திருக்காமல் இன்றே முடியுமென முயற்சிசெய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனத்தினது "ஆதிமூலவரான" "வேல்" ஐம்பொன்னினாலானது. சிவந்த நிற முடையது. இதன் வடிவத்தை எனது பேத்தி யார் "வச்சிரவேல்" எனக் குறிப்பிட்டு வணங் கியதுண்டு. இது சமயப்பெரியோர்களின் முடிபுக்கே!

போர்த்துக்கீசர் காலத்தில் சுண்ணாம் புக்கல், சர்க்கரை கொண்டு கட்டப்பட்ட மாவிட்டபுரம், குமரபுரம் போன்ற ஆலயங்கள் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதி யில் கந்தவன ஆலயத்தையும் போர்த்துக் கீசர் இடிக்க வந்து அருகில் காணப்பட்ட பூஞ்சோலையில் உள்ள மலர்களின் நறு மணத்தில் மயங்கி இடிக்கும் மனநிலை மாறி பூக்களைப் பறித்துச் சென்றுள்ளனர். மலர் களின் நறுமணம் காரணமாக போர்த்துக் கீசரால் கூட முற்றாக கந்தவனம் இடிக்கப்பட வில்லை.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி யானின் மகா மண்டபப்பகுதியானது வைர வெள்ளைப் பொழிகற்களால் வியாபாரிமூலை யைச் சேர்ந்தவர்களால் குறித்த ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் விபரம் குறித்த இடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வைரப் பொழிகற்களால் 1920- 1940 காலப் பகுதியில் கட்டப்பட்ட பல மூலஸ்தானங்கள் கம்பீரமாகக் காட்சிதருகின்றன. வல்வை முத்துமாரி அம்பாள் ஆலய கருவறைகூட திருப்பணி செய்தவர் பெயருடன் ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார் (1878- 1953) கந்தவனத்தில் சமய குரவர்களிற்கு (நால்வர்) ஆலயத்தை நிறுவி ஆலயத்திற்கு அருகில் ஆச்சிரமம் அமைத் திருந்து சரீரத் தொண்டுகள் பல புரிந்துள்ளார். (இவ்விபரம் உதயன் பத்திரிகையின் 01.08.2012 பக்.14இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

இவ் ஆலயப் புனரமைப்பை இவரது மாணாக் கரான அமரர் நடராசா உபாத்தியாயர் அவர் கள் 1980 காலப்பகுதியில் வைரப்பொழிகல் கொண்டு புனரமைத்து மாற்றியமைத்தார். இவ்வாறே கந்தவனம் ஆலயத்தில் ஆதி மூலவரான "வேல்"க்குப் பதிலாக இன்று "பழையவர்" எனக் குறிப்பிடப்பெறும் சோழர் கால சண்முகர் விக்கிரகம் அன்று அக்காலத் தில் "மூலவராக" பிரதிஷ்டை செய்யப்பட்டுள் ளமையும், பின்னர் இம்மூலவர், அபிஷேகக் குடம் தவறிவீழ்ந்து சுவாமியின் இடதுபுற வரத கரம் ஊறடைந்த நிலையில் இம் மூல வர் ஆனவர் "பழையவர்" எனும் பெயரில் தனி ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய் யப்பட்டமையுமானதும், வியாபாரி மூலையைச் சேர்ந்தவர்கள் செல்வச்சந்நிதியில் ஆலய மண்டபம் அமைத்தமையும், கந்தபுராணத் தினை தழுவி மக்களின் பெயருடன் பின்னிப் பிணைந்த வல்வெட்டித்துறை "காஞ்சிமாவடி வேல்" குடும்பத்தினரால் கந்தவன "நால்வர்" ஆலயத்திற்கு அருகில் காணப்பட்ட "சந்தான கோபாலர்" ஆலயம் வெள்ளை வைரப் பொழி கல் கொண்டு 1980களில் புனரமைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் அக் காலப்பகுதியில் ஆகமவிதிக்கு அமைவாகவே கந்தவன ஆலய மகாமண்டப திருப்பணி யானது 2ஆம் திருவிழா உபயகாரர்களால் முறையான "மகாமண்டப திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு மகாமண்டப திருப்பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது. (அமரர் சின்னையா அவர்களது நினைவு மலரில் குறிப்பிடப் பட்டுள்ளது.)

இவ்வாறு கடந்த காலங்களில் இறை வழிபாட்டில் மட்டுமன்றி ஆலயத் திருப்பணி களிலும் வடமராட்சிப்பகுதி மக்கள், தனி நபராகவும், குடும்பங்களாகவும், கிராம மக்க ளாகவும் ஒன்றிணைந்து அதிகாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாக்கல் முகாமைத்துவ நடைமுறையின் கீழ் தத்தமது வினைத்திறன்களோடு இணைந்து பணிசெய்யும் முறைமையொன்று காணப்பட் டமை மறுக்கப்பட முடியாத உண்மையாகும். தொழில் நிலையில் மட்டுமன்றி உரிமை நிலையிலன்றி, தொண்டு நிலையில், இறை சிந்தனையில், இறை உணர்வை எல்லோரும் அநுபவித்தமையை திருவிழாக்களிற்கு மட்டு மன்றி திருப்பணிகளிற்கும் வாய்ப்பளித்தமை ஆலயங்களின் வரலாறுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இந்த நிலையில் நல்லூரான் திருப்பணியைப் போன்று பழமை மாறாத, பழமை குன்றாத, அவரது தலவிருட் சத்தின் கீழேயே "பழையவர்" திருப்பணி இடம்பெறல் வேண்டுமென்பதுடன், "நாம் எமது உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கும் அதே வேளை ஏனையவர்கள் அநுபவித்த இறை உணர்வை அநுபவிக்கவும் வாய்ப்பளிக்கப் படல் வேண்டும்". சமய விழுமியங்களை இறை உணர்வுடன் உணர்ந்து தெய்வபக்தியுடன் கடைப்பிடித்து, மானிடரிடையே தெய்வங் களாக உலாவந்து அருள்வாழ்வு வாழ்ந்த சித்தர்களின் பெருமைகளை நாம் ஏடுகளில் குறிப்பிட்டு பெருமை கொள்கிறோமே தவிர நாம் அவற்றை உணராது, உணர முயற்சி செய்யாது சீர்குலைகிறோம், சீர்குலைக் கின்றோம்.

கண்பார்வையிழந்த சிவசம்புவிற்கு கண்பார்வை கொடுத்த "கந்தவனத்தான் சந்நிதியில் கந்தபுராணத்திற்கு பொருள் உரைத்த யோகர் சுவாமிகள்" 1955 காலப் பகுதியில் பேச்சை இழந்த இந்தியப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தர் அவர்களை பேசவைத்த பெரும்தகையின் பாதம்பட்ட இடமாகப் பொலிகண்டி அமைந்தமையை நாம் உணரவில்லையே! (பேச வைத்த சம்பவம்- "தென்னாடு- ஆனி- 2021- பக். 06) முருகனுடைய வேல்" அன்றும் இன்றும் என்றும் பக்தர்களிற்கு பாதுகாப்பாகவே உள் ளது. கந்தனை உள் அன்போடு வழிபட்டால் இழந்தவற்றை மீளப்பெறலாம் என்பது உறுதி. உயிருக்கும் உடலிற்கும் பாதுகாப்பு "கந்த சஷ்டி கவசமும் வேலாயுதமுமேயன்றி" வேறெந்த கவசமும் அல்ல. கந்தனுடன் ஒட்டி உறவாடி வளர்ந்த உறவொன்று துணைவழி சென்று வழித்தடம் மாறி "கந்தனையும் கந்த சஷ்டி கவசத்தினையும்" அகற்றியபின் இன்று எவ்வித "கவசமும்" (பாதுகாப்பு) இன்றி இருப் பதாக அறியமுடிகிறது. இதனை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருத்தமானது.

உயிர்களின் வினைகளை அறுத்து உண்மையான பக்தியை அறிவதற்குக் கருவி யாக அமைந்தது வேல். வீரவேல், தாரை வேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ் வேல், திருக்கைவேல், வாரிகுளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் என்பன முருகப்பெருமானது திருக்கரங் களில் உண்டு. அதனாலேதான் உலகிலுள்ள ஒவ்வொரு சைவத்தமிழனும், எப்பிணியிலும் மேலான பசிப்பிணியைப் போக்கி, ஆகமவிதிக்கு அமைவாக மூலஸ்தானத்தையோ ஆலய அமைப்பைக் கொண்டிராத, நந்தி, பலிபீடம், கொடித்தம்பம் ஆகியவற்றை கொண்டிராத "அன்னதானக் கந்தனாம்" செல்வச்சந்நிதி யானையும், ஆகமவிதிக்கு அமைய கருவறை அமையப்பெறாத, அவ்வப்போது கருவறை மாற்றியமைக்கப்படாத, பழமை, புராதனம் குன்றாத புனரமைப்பு இடம்பெற்ற "அலங்காரக் கந்தனாம்" நல்லூரானையும் தரிசிக்க பக்தர் கள் அலை அலையாக நாடி வருகின்றனர். இங்கே சந்நிதியின் "அன்னதானக் கந்தன்" என்ற வரலாற்றைப் பறைசாற்றும் "சந்நிதியான் சந்நிதி"யில் "சந்நிதியான் ஆச்சிரமம்" பக்தர் களின் பசிப்பிணியைப் போக்குவது மட்டுமன்றி

*எதையும் பெரிதுபடுத்தாமல் இருக்கப் பழகிவிட்டால் வாழ்க்கை இனிமை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிவரும் புராண, சமயச் சொற்பொழிவு களையும், வில்லிசைகளையும், பிரசங்கங் களையும் ஆற்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்து, "ஞானச்சுடர்" சஞ்சிகை ஊடாக இன்றைய சமூகத்திற்கு தேவையான விடயத் தினை "சுடர் தரும் தகவல்"இல் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது. அடியேனிற்கு பிறப்பில் உயிரூட்டி, எம்மை விபத்தில் உயிர காத்த கந்தனையும், "இடரிலும் தளரினும்" எனும் மனநிலையில் மனஉறுதியளித்ததும், கதிர்காம யாத்திரைக்கும் எம்மை அழைத்துச் சென்ற (கட்டுரை வாயிலாக) "சந்நிதியான் ஞானச்சுடரினை" இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

"அலங்காரக் கந்தன்" என்ற வரலாற் றைப் பறைசாற்றும் "நல்லூரான்சந்நிதி"இல் "அனைவரும் சமம்" எனும் நடைமுறை காணப் படுவதுடன், மகோற்சவ பத்திரிகைகள், விஞ் ஞாபனங்கள் வெளிவராத, உற்சவங்களின் "கோயில் திட்டம்" குறைந்த நிலையில் பேணப் படுவதும், திருப்பணிகளிற்கு நிதியை எவரிட மும் கோரிப்பெறாத, உற்சவ காலங்களில் தம்மை அறங்காவலர்கள் என இனம்காட்டி முன்னின்று வழிநடாத்தாத, ஒரு ரூபா அர்ச் சனைச்சீட்டு நடைமுறையில் உள்ள "இறை சந்நிதி" ஆகக் காணப்படுவது மனங்கொள் ளத்தக்கது.

தென்மராட்சி உசன் கந்தசாமி கோயில் "காணிக்கை உண்டியலோ, திருப் பணி உண்டியலோ" இல்லாத ஆலயமாக அமையப்பெற்றிருப்பதுடன், இரும்புக் கம்பிகள் அற்ற "தொல்சீர்வட்டத் தூண்கள்" அகற்றப் படாது, புராதனத்துடன் பேணப்படும் கந்த னாக அருள்பாலிக்கிறார் என்பது நோக்கற் பாலதே. இந்துக் கோவில்களின் தனிச்சிறப்பு அடையாளங்களாக இரும்புக் கம்பிகள் அற்ற புராதன பலம்பொருந்திய தொல்சீர்வட்டத் தூண்களே அமைந்துள்ளன. நீலநிறக் கடலில் இருந்து தோன்றும் காலைக் கதிர வனின் அழகில் உள்ளம் பறிகொடுத்தோர் அக் கதிரவனையே இறைவன் என வழிபட் டனர். காலம் செல்ல அக் கதிரவனே நீல மயில்மீது வீற்றிருக்கும் "செவ்வேள்" வழி பாடாக மலர்ந்தது. நீலநிறக் கடலை நீலநிற மயிலாகவும் அதில் நிமிர்ந்து எழும் காலைக் கதிரவனை செந்நிறம் கொண்ட செவ்வேளாக வும் எமது முன்னோர் கண்டனர். இதனை சங்கப்புலவரான பெரும் புகழ் நக்கீரர் திரு முருகாற்றுப்படையில் குறிப்பிடுகிறார்.

**"மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்**
**பிணிமுக மூர்ந்த வெல்போ நிறைவ**
**பணியோரீஇ நின்புக ழேத்தி"**

-பரிபாடல் 17.48-53)

நீலநிற மயிலேறி சேவல் கொடியுடன் யானைமேல் ஊர்ந்து வரும் முருகனை வழி படுவதால் பக்தர்கள் தமக்குப் பாதுகாப்பு கிடைக்குமென நம்பினர். இந்தவகையில் தொண்டைமானாறு பாக்குநீரிணையுடன் தொடர்புறுமிடத்தில் செல்வச்சந்நிதி அமைந் திருப்பதும், பொலிகண்டி கந்தவனம் சுப்பிர மணியரும், இந்தியாவிலுள்ள திருச்செந்தூர் சுப்பிரமணியரும் பாக்குநீரிணையினை மருவிய தாகவும் அமைந்திருப்பது "செவ்வேள்" வழி பாட்டினைச் சான்றுபடுத்துகின்றது.

**"வலய மலரும் பொலிகை வளர**
**மருவு மதலை வருகவே"**

-கந்தவனம் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்.

கடல் சார்ந்த பொலிகை நகர் பொலி வுற வதியும் பெருமானே! வந்தருள்க.

**"முறமென வெறியும் அலையினு முறைவாய்!**
**முனிவரர் பணியும் பொலிகையின் மணியே!**
**முழக்குக சிறுபறையே"**

-கந்தவனம் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்.

*நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுளகினால் கொழிப்பது போன்று அள்ளிவீசும் திரைகள் மலிந்த கடற்கரை சேர் திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூர் தலத்தில் உறையும் குமரா! முனி சிரேட்டர்கள் வந்து வழிபடும் பொலிகைப் பதியுறை சுப்பிரமணியே! சிறுபறை முழக்கியருள்வாய்.

"செந்திலெ னும்பதி கந்தவ னந்திகழ்
சிந்துவ றந்திட முந்தியெழுந்தவ
செங்கோ செங்கீரை"

கந்தவனம் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழில் குறிப்பிட்டதுபோன்று கடற்கரைசேர் திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர் என்று சொல்லும்படியான கந்தவனக் கோயிலில் எழுந்தருளியுள்ள செவ்வண்ணனே! செங்கீரையடியருளுக!

திருச்செந்தூர் பதியிலிருந்து கந்தப் பெருமான் தனது படைத்தளபதிகளில் ஒருவரான வீரவாகு தேவரை மகேந்திரபுரிக்கு சூரபத்மனிடம் தூது அனுப்பியபோது, வீரவாகு தேவர் தனது கடமை முடிந்து திரும்பிவரும் வழியில் "கல்லோடைக் கந்தனாம்" சந்நிதியில் கால்பதித்தாரென்றும் அத்தல விருட்சமான பூவரச மரத்தடியில் "வேல்" ஒன்றை பிரதிஷ்டை செய்து பூசை செய்து வழிபாடாற்றியதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் தேவலோகத்தில் வியாழபகவானது சாபத்திற்கு ஆளான கந்தர்வன் எனும் ஐராவசு கதிர்காமம் காட்டுப் பகுதியில் யானையாக அவதரித்து அட்டகாசம் புரிந்தது. கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொண்டு வந்த "சிகண்டி முனிவரையும்" தாக்க முற்பட்டது. கந்தர்வன் யானை வரலாற்றினை ஞான திருஷ்டியின் மூலம் அறிந்த சிகண்டி முனிவர் வெற்றிலை ஒன்றினை எடுத்து அதனை வேற்பெருமானாக நினைத்து "சரவணபவ" எனும் மந்திரத்தை உச்சரித்து யானைமீது விட்டெறிந்தார். யானை அலறி அடித்து வீழ்ந்து மீண்டும் கந்தர்வனாக மாறியது. சிகண்டி முனிவர் கந்தர்வனை கதிர்காமம் அழைத்துச்சென்று வழிபாடாற்றி கந்தர்வனை செல்வச்சந்நிதிக்குச் செல்லுமாறு கூற அவர் "சந்நிதியை" வந்தடைந்து தலவிருட்சமான பூவரசமரத்தடியின்கீழ் முருகப்பெருமானை வழிபட்டு முத்தியடைந்ததாக கூறப்படுகிறது. "வெற்றிலை"- வெற்றி வேலாகச் செயற்பட்டமை இன்றும் செல்வச்சந்நிதியில் வேலின் நுனியில் வெற்றிலை பதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வேலினை முனிவர்களும் சித்தர்களும் வழிபாடாற்றி முத்தியடைந்தமை வரலாற்று உண்மையாகும். கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோரும் வழிபாடாற்றியுள்ளனர். இந்தவகையில் செல்லப்பா சுவாமிகளது சீடரான யோகர் சுவாமிகள் செல்வச்சந்நிதியானின் "சந்நிதி"யில் வைத்தே முதன்முதலில் திக்கம் செல்லையாபிள்ளையை ஆசீர்வதித்துள்ளார்கள். (திக்கம் சி. செல்லையாபிள்ளை அவர்களிடம் 11 ஆனி 1907ஆம் ஆண்டு முதல் பொலிகண்டி கந்தவன ஆலயம் நிர்வாகம் கையளிக்கப்பட்டதாக ஈழத்து ஆலயங்கள் எனும் நூலில் காணப்படுகிறது. பக்கம் 515)

இந்தவகையில் வீரவாகுதேவர், கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோர் சந்நிதி ஊடாகவே கந்தவனத்தை அடைந்துள்ளனர். யோகர் சுவாமிகளின் ஞானகுருவான செல்லப்பா சுவாமிகள் "ஓடுங்கடா ஓடுங்கடா கந்தவனத்தில்தான் நல்ல சரக்கிருக்குது" என்ற மகா வாக்கியத்தை உதிர்த்து தனது சீடர்களிற்கு கூறி வழிகாட்டி "கந்தவனத்தானை வழிபாடாற்றியது மட்டுமன்றி அங்கு செல்லப்பா தம்பிராசாவையும் ஆசீர்வதித்துமுள்ளார். செல்லப்பா சுவாமிகளது தெய்வீகத் தன்மை உணராத சிலர் அவரை "விசர் செல்லப்பா" என கூறியதுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என நம்முன்னோர்கள் கூறுவதனை கேட்டிருக்கிறோம். "கந்தசஷ்டியில் விரதம் இருந்தால் அதாவது வயிற்றில் (கருப்பை) கரு உருவாகும், உருவாக வேண்டுமென விரதம் அனுஷ்டித்தார்கள். குழந்தைகள் கிடைக்கின்றன. இதனை ஆதாரப்படுத்தும் முகமாக செல்வச்சந்நிதியிலே விரதமிருப்பவர்களும் தலவிருட்சத்தில் காணப்படும் "தொட்டில்கள்"உம் இதனைச் சான்று பகர்கின்றன. அதுமட்டுமன்றி கதிர்காமத் திருவிழா ஆரம்பிக்கும்போது தலவிருட்சமான பூவரச மரத்தடியில் இருந்து வீரவாகு தேவர் வழிபாடாற்றிய "வேல்" ஆனது ஒளிவீசியபடி கதிர்காமத்தை நோக்கிச் செல்வதாகவும், இவ் அற்புதக் காட்சியை பல அடியார்கள் தமது ஞானக் கண்களால் கண்டு வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. இக் காட்சியைக் காண்பதற்காக எனது பேத்தியாருடன் சிறுவயதில் பல தடவைகள் சென்றமையும், கேணியில் குளிப்பாட்டியமையும் "வேல்" செல்லும்போது "அரோகரா" என்ற ஒலியும் இன்றும் எம் காதுகளில் ஒலிக்கின்றது. இவ்வாறே செல்வச்சந்நிதியானின் உற்சவத்திற்கு கதிர்காமக் கந்தன் நேரில் வந்து செல்வதாக முருகப்பெருமான் பக்தர்கள் இன்றும் நம்புகின்றனர். கதிர்காமம் செல்ல முடியாதவர்கள் செல்வச்சந்நிதிக்கு வந்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர்.

கதிர்காமத்தான் உற்சவத்திற்கு செல்வச்சந்நிதியில் இருந்து "வேல்" சென்று வருவதனைப் போன்று திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் இருந்து சுப்பிரமணியர் புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க, பொலிகண்டி கந்தவனம் ஆலயத்திற்கு வருவதும், அவ்வப்போது போவதும் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது.

**"அயரலைவாயும் அலுத்ததனாலோ**
**மகளிரொடும் புயலலை நீந்தி**
**நற்கந்தவனம் நீ புகுந்ததுவோ"**

தென் இந்திய "புலவர்மணி" வெங்கட்ராமன் அவர்கள் தனது பாடல் ஒன்றில் குறிப்பிட்டதானதும், அதனை சஞ்சிகையொன்றில் பார்வையிடக் கிடைத்ததும் "சந்நிதி"யான் செயலன்றி வேறில்லை. மன ஆறுதலும் ஆத்ம திருப்தியும்கூட.

**"நற் கந்தவனம் தனி வெறுத்ததனாலோ**
**குறமகள் அவளொடும் குலமகள் அவளொடும் புயலை நீந்தி**
**உன் அயரலைவாய் நீ மீண்டு வந்ததுவோ!"**

இவ்வாறு சென்றுவருவதும், செல்வச்சந்நிதியானின் தலவிருட்சமான பூவரச மரத்தடியில் வீரவாகுதேவர் வேல் வழிபாடாற்றியமையும், வரலாற்று நிகழ்வே.

**"கலங்கல் கொண்டிடு மகேந்திர**
**வரைப்பினைக் கடந்தே பின்**
**இலங்கை மாநக ரொடுவியே**
**யளக்கரை யிகந்தேசி**
**நலங்கொள் சீருடைச் செந்தியிற்**
**றெல்லைமா நகரெய்தி**
**யலங்க லஞ்சுடர் மஞ்ஞைநின்**
**றழிந்தன னயில்வேலோன்"** (கந்தபுராணம்)

*மனம் எதைத் தீவிரமாகச் சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மைகொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தூரில் "சுப்பிரமணியப் பெருமானாக" வீற்றிருக்கும், வெற்றிவேற் பெருமான், கலங்கல் நீர் நிறைந்த மகேந்திர எல்லையைக் கடந்து பின் இலங்கையையும் கடந்து, கடலையும் கடந்து, திருச்செந்தூரையடைந்து தம் திருக்கோயிலின் முன் சென்று மயில் நின்றும் இறங்கினார். திருச்செந்தூரான்- கந்தவனம் வந்து போவது போன்று செல்வச்சந்நிதியான்- கதிர்காமத்திற்கிடையேயான தொடர்புகள் பல காணப்படுகிறது. சிந்தனையாகிய அலைகள் வந்து கோவிலின் மதிற்புறத்தில் மோதி அலைபாயும் துன்பங்களை துடைத்தெறியும் இடமாக "திருச்சீரலைவாய்" விளங்குகின்றது.

**"தீயவை புரிந்தாரேனும்**
**குமரவேள் திருமுன் உற்றால்**
**தூயவர் ஆகி மேலைத்**
**தொல்கதி அடைவர் என்கை"**

எனும் கந்தபுராணச் செய்யுள் எமக்கு உயர்ந்த மனவலிமையைத் தருகிறது. பெரிய பாவங்களைச் செய்தவர் எனினும் குமரவேட் பெருமானது "சந்நிதியை" அடைவார்களாயின் பாவவிமோசனம் பெற்று வீடுபேறு எய்துவர் என்பது ஆராயப்பட வேண்டியதே! இந்தவகையில், "செல்வச்சந்நிதியை" சென்றடைபவர்கள் இதனை உணருவார்கள். "நடுநிசியில் திருத்தளியின் கருவறை இடியோசை அதிர்வு கேட்டறிந்து இதயவலியால் துடித்தபோது" சந்நிதிக்கு எனை அழைத்து வலிநீக்கி, யோகர் சுவாமிகளின் பாதத்திருவடி தரிசனம் பெறவைத்து யான் தேடியலைந்த ஈழத்து திருப்புகழ் நூலை எனக்களித்த நன்னாள். இறைஉணர்வு அனுபவமே!"

---

சிவபெருமானை வழிபட்டு ஆற்றல் வாய்ந்தவராக விளங்கிய ஒரு துறவியிடம் வந்த அந்நாட்டு அரசன் தனக்கு விரைவாக மோட்சமடையும் வழிவகை சொல்லுமாறு கேட்டான். துறவியும், "சுமார் ஒரு வருட காலத்துக்கு நடுநிசியில் இந்த நாட்டில் ஒன்றாக அமைந்துள்ள ஏழு சிவாலயங்களையும் சுற்றி வணங்கி வந்தால் விரைவில் மோட்சம் கிடைக்கும்" என்றார். துறவி கூறியபடியே அரசனும் செய்துவந்தான். நாட்கள் கழிந்தன. மாதங்களாகின! ஒரு வருடம் முடிவடைய சுமார் ஒரு மாத காலம்தான் இருக்கிறது. அன்றிரவும் வழமைபோல் புறப்படுவதற்காகக் குதிரை கட்டுமிடத்துக்குப் போனான் அரசன். குதிரையைக் காணவில்லை. சரி, மறுநாள் விடிந்ததும் சுவாமியாரிடம் போய் பேசுவோம் என்று மனதில் நினைத்துக்கொண்டு நித்திரைக்குச் சென்றான் அரசன். கனவிலே தோன்றிய இறைவன் "அரசனே உனது வேண்டுதலை மெச்சினோம். ஆனாலும் நீ ஒவ்வொரு இரவும் ஆலயத்தை அண்மித்ததும் உனது குதிரையை அண்மையிலுள்ள பாழடைந்த மண்டபத்தருகே கட்டிவிடுவாயல்லவா. அங்கே வீடற்றவர்கள் தங்குவது வழக்கம். ஆனால் சொற்ப காலமாக உயரமாக புல் வளர்ந்திருந்த காரணத்தால் விச ஜந்துக்களுக்குப் பயந்து அவர்கள் அங்கே தூங்க வருவதில்லை. பல கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். ஆனால் உனது குதிரை அந்தப் புல்லை உண்டதனால் அந்த மண்டபம் அவர்களுக்கு பயன்படுகிறது. ஏழைகளுக்கு உதவுவதுதான் புண்ணியங்களில் சிறந்தது. எனவே உன்னைவிட உனது குதிரையே முதலில் மோட்சத்துக்கு வரவேண்டிய நிலையிலிருந்தது. அதனால் குதிரையை அழைத்துக்கொண்டோம் என்றார்.

செயல்களைச் செய்வதைவிட, அச்செயல்களின் வழி பயன் காண்பதே பெருமைக்குரியது.

***கோபத்தால் பிறருக்கு மட்டுமல்ல நமக்கும் தீமையே உண்டாகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 57

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 ஊன்உடலை வருத்திவிட்டால் போதுமென்று எண்ணிநீர்
நான்என்ற நிலைநிலைக்க நாதனையே அணுகாதீர்
நாம்வருந்தும் எதனாலும் நம்பிரானார் மகிழமாட்டார்
பிறர்வருந்தா நடைகண்டால் பின்னவரே மகிழ்ந்தருள்வார்.

02 கெட்டவர் என்றுகண்டால் எட்டநிற்றல் நன்றேதான்
ஆனாலும் கெட்டவரைக் கெட்டவராய் விட்டிடாமல்
நல்லவராய் ஆக்குதற்கு நாடிநாம் செல்லாவிடத்து
கேடுகெட்டார் என்றெமையே அவர்விடுப்பார் பிழையாமோ.

03 எனதென்று எதுவுமில்லை என்றெண்ணும் ஆலயத்துள்
ஆலயமே தனதென்று எண்ணுவோரைக் கண்டிறைவன்
எனக்குரியர் இவரல்லர் என்றவரின் உறவைவிட்டு
பிணக்குவியல் எரியுமிடச் சாம்பலிலே போயுறைவான்.

04 தனக்காக ஆண்டவனின் ஆலயத்துள் சென்றங்கு
ஆண்டவற்காய் வந்தவர்போல் காட்டுவோரைக் கண்டிறைவன்
தனக்குதவி இவரல்லர் என்றவரின் உறவைவிட்டு
மனத்துள்ளே தனைச்சுமப்போர் மகிழவந்து அருகுறைவான்.

05 கோயிலில்லா ஊரென்றால் குறையென்ற காலம்போய்
ஊருக்குள் கோயில்வேண்டாம் என்போரைக் கண்டிறைவன்
தாயின்றிப் பிறந்தவர்போல் நடப்போரின் உறவைவிட்டு
தனக்குள்ஓர் கோயிலிட்டார் தன்னுள்ளே போயுறைவான்.

06 வீட்டிற்கும் படலைக்கும் ஆண்டவனின் நாமமிட்டு
நாமத்திற்கேனும் இறைவழிபுகாரைக் கண்டிறைவன்
ஏட்டுச் சுரைக்காயார் என்றவரின் உறவைவிட்டு
மாட்டுமனை வாழ்ந்தாலும் மனத்துயர்ந்தோர் மடியுறைவான்.

*நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பாட்டுக்கு ஏற்றால்போல் மெட்டமைத்தல் போலும்
மெட்டுக்கு ஏற்றால்போல் பாட்டமைத்தல் போலும்
முரண்பாடே இல்லாத வாழ்வைநீர் வாழ்வதற்கு
குடும்பத்தின் நிலைக்கேற்பக் கொள்கைகளை வகுத்திடுவீர்.

08 கையினால் ஆகாத் தனத்திற்கோர் காரணமாய்
செய்வினை சூனியம் என்பதையே சொல்லி நிற்போர்
மெய்வருந்தி மேதினியில் மேலுயரும் வழிவிடுத்து
பொய்யான சிலதிற்கு மதிப்பளித்து வாழ்விழப்பர்.

09 துளிநீரே அகலுதென்று இருக்கமுற்றும் அகன்றுவிடும்
துளிநீரே நிரம்புதென்று ஏந்தஏனம் நிரம்பிவிடும்
இழைத்த குற்றம் சிறிதென்று ஏற்கஅதே எமைநிரப்பும்
இழைத்த நன்மை சிறிதெனினும் இழைக்கஅதே புகழ்பரப்பும்.

10 தேடாமல் கிடைப்பதுமோர் கிடைப்புத் தான் ஆனாலும்
தேடலில் கிடைப்பதுவே பெரும் கிடைப்பாம் ஏனென்றால்
தேடாமல் கிடைப்பது கிடைப்போடு முடிந்துவிடும்
தேடலில் கிடைப்பதோ மேலதிகம் பலவாகும்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும்
மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்
பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்
கீழே உள்ள முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல — 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல — 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com


*பிரார்த்தனைகளைவிடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமும் செயலும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மனிதர்களில் பல விதம் உண்டு. ஒருவருக்கொருவர் வேறுபட்ட குண இயல்புகள், வேறுபட்ட ஆளுமை, வேறுபட்ட எண்ணங்கள் ஆகியவற்றோடு காணப்படுவது கண்கூடு. ஆனால் இவர்கள் எல்லோரையும் படைத்தவன் ஆண்டவன் ஒருவனே. கவிஞர் கூறியபடி பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகத்தான் பிறக்கின்றன. பின் ஏன் இந்த மாற்றம்? அதிலும் சிலரில் வேண்டத்தகாத மாற்றங்கள், வக்ர குணங்கள், மமகாரம் இப்படியான வேறுபாடுகள்.

ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், ஒரு தனி மனிதனுடைய தன்மைக்கும் இயல்புக்கும் நடத்தைக்கும் அவன் வாழும் வாழ்க்கைச் சூழலும் அவனது மரபுவழித் தன்மையும் மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன.

இந்தவகையில் நல்ல சூழலும் உயர் மரபுவழிப் பண்பும் ஒருவனுக்கு உதவியாக அமையாதபோது, அவன் அவசியம் தன் சிந்தனைப் போக்கை உயர்ந்ததாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயலவேண்டும். மற்றைய இரு காரணிகளும் பொய்த்தாலும் அவனை உயர்த்த அவனது உயர் சிந்தனை நற்சிந்தனை ஆத்மீகப் போக்கு அவனுக்கு கை கொடுக்கும். இதில் சந்தேகம் கிடையாது. ஏன் எனில் "எண்ணம்போல் இருப்பாய்" என்றும் "மனம்போல் வாழ்வு" என்றும் கூறும் முதுமொழிகளுள் இவற்றின் உண்மை அடங்கியுள்ளது.

ஒருவனுக்கு நல்ல வாழ்க்கைச் சூழலும் நல்ல மரபுவழிப் பண்பும் அமைந்து விட்டால் அவன் கொடுத்து வைத்தவன்.

சிலருக்கு நல்ல சூழல் அமையலாம், மரபுவழிப் பண்பு இல்லாதிருக்கலாம், ஒரு சிலருக்கு நல்ல மரபுவழிப் பண்பு அமைந்து, நல்ல சூழல் கிடையாமல் போகலாம்.

இவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்று இல்லாது போகும் ஒருவனுடைய வாழ்வு சிறப்படையுமா? இல்லை சீரழியுமா? என்பதை முன்கூட்டிச் சொல்லமுடியாது.

இருப்பினும், எப்படிப்பட்ட சூழலிலும் தன்னுடைய நிலையிலிருந்து தாழாமல் தன்னுடைய ஆளுமையை உயர்த்தி, தன் வாழ்க்கையையும் ஒருவன் மேம்படுத்திக் கொள்ள வழிகள் இல்லாமல் இல்லை.

அவற்றுள் இறைபக்தி மன உறுதி, நல்ல எண்ணங்கள், தயாள குணம், இரக்க சிந்தனை போன்றவற்றை யாம் தேடிக்கொள்ள வேண்டியவை.

நம் ஒவ்வொருவரது மனதிலும் நல்ல எண்ணங்களும் தீய இயல்புகளும் உண்டு. நாம் நல்லியல்புக்கு ஆட்பட்டுச் செயற்படும்போது நல்லவற்றைச் செய்கின்றோம். தீய இயல்புகட்கு ஆட்பட்டுச் செயற்படும்போது, தீயவற்றைச் செய்கின்றோம்.

நல்லது எது கெட்டது எது என்பது எமக்கு நன்கு தெரியும், புரியும். இதனை அறிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை.

எனவே நாம் நல்ல செயல் என்று ஒன்றை அறிந்துகொண்டால் அக்காரியத்தைச் செயற்படுத்துவதில் தாமதிக்காது உடனே செயற்பட வேண்டும். இதேபோன்று தீயதை யாம் தள்ளிப்போட வேண்டும். தீய எண்ணங்கட்கு நாம் எம் மனதில் இடம் கொடுத்தல் ஆகாது.

*நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு நம்மை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயங்களில் எமது மனதினுள்ளே ஒரு புரட்சியே நடக்கும். இதைச் செய்வதா, விடுவதா இதனைக் கூறுவதா விடுவதா இது சரியா, தப்பா அதனால் விளைவது நன்மையா, தீமையா இந்த நிலையிலே நாம் எமது நிதானத்தை இழக்கக்கூடாது. நிதானத்தை இழந்து தவறுசெய்தபின் அதனை ஒரு புரட்சி முடிவு என்று வெளியே சொல்வது வெறும் பாசாங்கு தான்.

எனவே நாம் எமது மனதுக்கு இடம் கொடுக்கையில், மனதின் கோரிக்கை நியாய மானதா என்று பார்த்தாக வேண்டும். "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்னும் அமுதவாக்கு நாம் எல்லோரும் அறிந்ததே. இந்நிலையில் நாம் இறைபக்தியிடம் தஞ்சம்புகுவதே மேலான செயலாகும். பக்தியை நாம் தளமாகப் பயன்படுத்தினால் நாம் முன்னே குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழல் மரபுவழிப் பண்பு, ஒத்தாசை புரியாவிட்டாலும் நாம் எமது வாழ்க்கையை எமது ஆளுமையை உயர்த்த முடியும். எமது வாழ்வும் மேம்படும். இதற்கெல்லாம் ஒரு வழி, சற்று சிந்தித்து நிதானமாக எமது ஆத்மீக நிலையை எமது ஆளுமையை, தனித்துவத்தை, நன்நெறிப்படுத்த சமய வாழ்வை தளமாகக் கொள்ளல் மிக அவசியம் ஆகும்.

---

செல்வச் செழிப்பு தந்த அகங்காரத்துடன் வீட்டுக்குள் நுழைந்த அந்தப் பெரிய மனிதரைக் கவனிக்காமல் தனது வேலையில் மூழ்கியிருந்தார் துறவி ஒருவர். சற்று நேரத்தில் அந்தப் பெரிய மனிதரைத் தலை நிமிர்ந்து பார்த்த துறவி, அவரைப் பற்றிய அனைத்து விபரங்களையும் சொல்லத் தொடங்கினார். "எனக்கு மட்டுமே தெரிந்த அந்தரங்க விடயங்களையும் இவர் சொல்கிறாரே!" என்று பெரிய மனிதருக்குத் திகைப்பு. "இவையெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று கத்தினார் பெரிய மனிதர். துறவியும் "போனது போகட்டும். உங்கள் கவலைகளையும், பயத்தையும் விட்டுவிடுங்கள். கடவுள் உங்களுக்கு அளித்துள்ள செல்வம், ஏதுமற்ற அவரது குழந்தைகளுக்கு நல்லது செய்வதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. அதை மற்றவர்களுக்குக் கொடுக்கப் பழகுங்கள்" என்றார். இதைக் கேட்டுக் கோபத்துடன் புறப்பட்ட பெரிய மனிதர், ஒரு வாரம் கழித்துத் திரும்பவும் வந்து பொதுநலத் தொண்டு ஒன்றுக்காகத் தான் வழங்கிய தொகை குறித்த காகிதங்களை துறவியின் முன் வைத்து "என்ன திருப்தியா? இப்போ நீங்கள் எனக்கு நன்றி சொல்லலாம்" என்றார். அதற்கு துறவியும் அமைதியாக "நன்றி சொல்லவேண்டியது நீங்கள்தான். நானல்ல" என்றார் துறவி. ஏன் அப்படிச் சொன்னார் துறவி என்பது அந்தப் பெரிய மனிதருக்குப் புரியவில்லை. இருப்பினும் துறவியின் அந்த வார்த்தைகள் அவரைச் சிந்திக்க வைத்தன. அன்றிலிருந்து வறியவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் வாரி வாரி வழங்கத் தொடங்கினார் அந்தப் பெரிய மனிதர். செல்வந்தராகிய அந்தப் பெரிய மனிதரை வள்ளலாக மாற்றிய துறவி சுவாமி விவேகானந்தர். வள்ளலாக மாறிய செல்வந்தர் ஜான். டி. ராக்பெல்லர் என்ற மாபெரும் அமெரிக்க தொழிலதிபர்.

தர்மம் பண்ணறதுன்னா, காசைவிட்டு எறியறதுன்னு அர்த்தமில்லை. பிரதிபலனை எதிர்பாராமல் ஒரு நல்ல காரியம் செய்யுறதுன்னுதான் அர்த்தம். ஊருக்கு உபகாரமா, விளம்பரம் இல்லாம ஏதேனும் ஒரு நல்ல காரியத்தை நீயே பண்ணுறதுதான் தர்மம். காசு கொடுத்தால் மட்டும் போதாது. நல்ல காரியம் விட்டுப் போகாதபடி ஆணவம் இல்லாம நாமளே முன்நின்று நடத்துறதுதான் நிஜமான தர்மம்.

***புத்திசாலி ஒரே ஒருமுறைதான் ஏமாற்றப்படுகின்றான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் – 08

(தொடர்ச்சி...

## கர்மயோகம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 21. செயலுக்கு உரிமை

குணங்கள் பிரபஞ்சத்தின் ஒரு குறிக்கோளுக்காக ஆள்சாரா முறையில் எல்லாமாகச் செயற்படுகின்றன. நாமோ ஏதோ ஒன்றின் ஆள்சாரா அலுவலுக்குத் தேவை இல்லாமல் நமது செயல் என்றும் ஒரு சிறப்பு எமக்குத் தரவேண்டும் என்றும் கேட்கின்றோம். ஏதோ ஓர் அளவில் சத்துவம், இராசதம், தாமசம் என்பவற்றினது கலவையின் ஒரு விளைவே நாம். அதுபோல புலன்களினது பொருள்கள் எல்லாமே அவற்றின் கலவையினது விளைவே ஆகும். எனவே முழுப்பிரபஞ்சமும் தனக்கு உள்ளே எவ்வித ஆள்சார்பண்பும் இன்றியே செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. நாம் தனித்தனிக் கூறுகளாக இருக்கிறோம் என்பதைப் பிரபஞ்சம் உணர்ந்து கொள்ளுகிறதா என்பது சந்தேகமே. ஆனால் நாம் நமது தனித்தன்மையின் பூரண சுதந்திரத்தை விடாப்பிடியாகக் கேட்பவர்களாகவே இருக்கின்றோம். ஈடன் தோட்டத்தில் இருந்து தேவதை வீழ்ச்சி அடைந்தமை பற்றிய விவிலியத்தின் அர்த்தமும் இப்படிக் கேட்பதாகவே இருக்கலாம். அது தனி ஒருவரின் தன்மையில் உறுதியளிக்கும் வாசகம் ஆகும். லூசிபர் என்பவன் சாத்தானாக மாறுகின்றான். தேவதை அகங்காரத்தோடு கூடிய தனிஆள் ஆகிறது. அந்த அகங்காரமே கடவுளிடம் இருந்து தனக்குச் சுதந்திரம் உண்டு என்றும், கடவுளோடு தனக்கும் அதே சமமான உரிமைகள் என்றும் கோருகிறது. தனி மனிதனின் வரலாற்றில் இதுதான் உண்மையையே பரகாசம் செய்யும் அலுவலாக உள்ளது. இந்த இரகசியத்தைத் தெரிந்திருக்கின்ற ஒருவர் செயலினால் பந்திக்கப்படமாட்டார்.

### 22. கர்மயோகம்

செயலின் உள்ளார்ந்த அர்தத்தை மனிதர் எவரும் உணர்ந்துகொள்ளவில்லை. கீதையின் மூன்றாம் அத்தியாயத்தில் கர்மயோகத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. கர்மயோகம் இவ்வுலகில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கூறுகின்றது. நாம் இவ்வுலகில் மனிதர்களாக மட்டுமன்றி உண்மையான யோகிகளாக வாழவேண்டும். பகவத்கீதையின் கருத்துப்படி ஓர் உண்மையான யோகி ஒரு சாதாரண மனிதன் அல்லன். கீதையின் ஒளியில் அவன் ஓர் ஆன்மீக சாதகன் ஆவான். அவன் கடவுளின் தெய்வ அம்சத்தினது ஓர் ஒளிப்பொறியே ஆவான். பூரண விளக்கத்தோடு அல்லது பிரபஞ்ச ஆன்மாவோடு அவன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ள முயல்பவனே ஆவான். நாம் இங்கு வாழுவதற்கான பெருநோக்கத்தோடு இணைந்து ஒத்துப்போகுமாறே எமது நடத்தை இருக்கவேண்டும். இந்த உலகில் எமது வாழ்க்கை பிரபஞ்சத்தின் குறிக்கோளினால், மிகத்

*அரியசாதனைகள் எல்லாம் விடாமுயற்சியினால்த்தான் சாதிக்கப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவிலுள்ள தத்துவம் ஒன்றினால் தளைப்படுத்தப் பெற்றிருக்கிறது. அப்பெரும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு ஆகவே நாம் இங்கே உள்ளோம்.

## 23. ஒவ்வொன்றும் மற்றவைக்காகவே

இயற்கையின் முழுத்தோற்றங்களுக்கும் பின்னாலுள்ள தெய்வீக வடிவமைப்பே அக்குறிக்கோள் ஆகும். நான் எனக்காக வாழவும் இல்லை; நீ உனக்காக வாழவும் இல்லை. எதுவும் தனக்காகவே இருப்பதில்லை. ஒவ்வொன்றும் மற்றைய எல்லாவற்றுக்குமாகவே இருக்கிறது. நாம் மற்ற ஒவ்வொருவருக்காகவும் வாழ்கின்றோம் என்ற உண்மையையும், ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொன்றுக்காக வாழ்கின்றோம் என்ற உண்மையையும் பற்றிய உணர்வே இந்தப் பிரபஞ்சத்தில் விளங்குகின்ற சனநாயக நிருவாகத்தின் மிகப்பெரிய உணர்வாக இருக்கக்கூடும். ஒவ்வொன்றும் மற்றைய ஒவ்வொன்றுக்காக என்றும், எதுவும் தனக்காக இல்லை என்றும் உள்ளபோது செயலின் பந்தப்படுத்தும் தன்மை எங்கே வருகின்றது. அவ்வாறான வினா அங்கே எழாது. ஒருவர் எதையும் செய்யாது செயலற்று இருப்பதற்கு முன்னர் குறிக்கப்பெற்ற காரணங்களினால் சாத்தியம் இல்லை. எனவே ஒருவர் உண்மையில் விழிப்புணர்வுபெற்று வாழ்வின் உள்ளர்த்தத்தை உணர்ந்தால் அவரைச் செயல் பந்திக்காது.

## 24. உலகில் எமக்கு எதிரி இல்லை.

"நாம் ஏன் துன்பப்படுகின்றோம்? எது எம்மைத் துன்பப்படுத்துகிறது? ஏன் ஒருவர் பாவம் செய்கின்றார்? எவ்வாறு ஒவ்வொரு கணமும் என்ன நிகழுமோ என்று நாம் ஏங்குகின்றோம்? இந்தத் துன்பத்தின் புதிர்தான் என்ன? எல்லாவற்றினதும் இந்தப் பிரபஞ்சத்தின் உண்மை இருக்கின்றபோதும், ஒவ்வொருவரினதும் இந்த மனவருத்தத்துக்கான இரகசியம்தான் என்ன?" என்று கிருஷ்ணனை அர்ச்சுனன் கேட்டான். "ஒவ்வொரு மனிதனுடைய துன்பத்துக்கும் பின்னால் உள்ள இரகசியம் ஆசையே" என்கிறான் கிருஷ்ணன். எமது ஆசைகளே எமது எதிரிகள் அன்றி இந்த உலகில் எமக்கு வேறு எதிரிகள் கிடையாது. எமக்கு உள்ளே உள்ள எமது சொந்த ஆசைகளது காந்தசக்தியின் காரணம் ஆகவே வெளியே இருந்து நாம் எதிரிகளைக் கவர்ந்து இழுக்கின்றோம். ஒரு காந்தத்துண்டு ஒரு சிறிய இரும்புத்துண்டை ஈர்ப்பதுபோல மனதின் ஒரு குறிப்பிட்ட வழிதவறிய வடிவம் வெளியில் இருந்து நேர்மறையாக அல்லது எதிர்மறையாகப் பிரதிச் செயலைக் கவர்ந்து இழுக்கின்றது. எமது நண்பர்களும் எமது எதிரிகளும் எமது சொந்த மனத்தளம்பல்களின் அகரீதியான நிலைகளே. அவை எமக்கு வெளியே உள்ளன அல்ல. ஆசை அடக்கப்பட்டால் அன்றித் துன்பம் நீக்கப்பட முடியாது. எவ்வாறு எம்மால் ஆசையை வெல்லமுடியும்? இரண்டு முக்கியமான சுலோகங்களில் இந்த வினாவுக்குக் கீதையில் விடையளிக்கப்பெற்றிருக்கிறது.

## 25. வினா

நாம் பிரிக்கமுடியாதபடி முழுப்படைப்போடும் தொடர்புபடுத்தப் பெற்றுள்ளோம். ஆனால் செயலின் கருத்தா நாமே என்று விழுமியங்களைச் சரியாகப் புரியாது உள்ளோம். பிரபஞ்சத்தின் அமைப்பை ஓர் அளவேனும் நாம் அறிந்துகொண்ட போதிலும் எமது செயல்களைச் சரியான

*மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்கள் எல்லாம் வீணானவையல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையில் செல்லாது செய்வதற்கு முன் நிற்பது எது என்பதே அந்த வினா. பிரபஞ்சம் செயற்படுகின்ற ஒரு முழுமையானதாக இருக்கும் அளவுக்குத் தனி ஒரு மனிதனின் செயல் என அப்படி ஒரு விடயம் இல்லை. எங்குமே முழுமையான செயலே பகுதி பகுதியாக நடந்துகொண்டு இருக்கிறது. பிரபஞ்சம் தனது பெருநோக்கத்தை அடைவதன் பொருட்டு உள்ள பகுதி பகுதியான முயற்சியே அத்தனிமனிதரது முயற்சியாகும். இவை எல்லாவற்றையும் புரிந்துகொண்ட பின் சரியான திசையில் நாம் இயங்குவதில் இருந்து நாம் தடுக்கப்படுகிறோம் என்று எப்படித் தோன்றுகிறது? இதன் புதிர்தான் என்ன?

## 26. விடை

ஆசை, கோபம், பேராசை என்பனவே அத்தடை என்பது கிருஷ்ணனது விடை ஆகும். ஒரு மனிதனின் அகங்காரம் செயற்படும் வடிவங்களே ஆசை, கோபம், பேராசை முதலானவை. ஆதலால், நான் என்ற உணர்வின் செறிவே தடை என்பது அதனை வேறொரு வழியில் கூறுவதாக அமையும். இதுதான் நிலைமை என்றால் நாம் இப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம்? எமது அகங்காரம் எப்படி மிக வலிமையானதாயும், அது தனது சொந்த வழியிலே நடப்பதாயும் இருந்தால், ஆசைகள் திருப்தி செய்யப்பட முடியாததாயும், கோபமும் பேராசையும் தவிர்க்கமுடியாததாயும், அவை எமது இயல்பின் ஒரு பகுதியாயும் இருந்தால் எமது விதிதான் எதுவாக இருக்கப்போகிறது? முந்திய வினாவில் இருந்து வருகின்ற இன்னொரு வினாவே இது ஆகும். மீண்டும் கீதாசிரியனிடம் இருந்து ஒரு பெரிய விடை வருகின்றது.

(தொடரும்...

---

"சுவாமி நீங்கள் தெய்வத்தைக் கண்டிருக்கிறீர்களா?" என்று இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சில பக்தர்கள் கேட்டனர். அதற்கு பரமஹம்சரும் "ஓ பார்த்திருக்கிறேனே, நீங்கள் என்னையும் நான் உங்களையும் எப்படிப் பார்த்துக்கொள்கிறோமோ அதே முறையில் கடவுளைக் கண்டிருக்கிறேன்" என்றார். உடனே பக்தர்களும் "எங்களால் காண முடியவில்லையே சுவாமி! அவரைக் காணும் வழி வகைகளை எங்களுக்கும் சொல்லித் தாருங்களேன்" என்றனர். அதற்கு பரமஹம்சரும் "நீங்கள் உங்கள் மனைவியைக் காணவில்லை என்றால் அழுகிறீர்கள். குழந்தையைக் காணவில்லை என்றால் அழுகிறீர்கள். சிறிது காலம் உங்களுடன் வாழ்ந்தவர்களைக் காணவில்லை என்றால் எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்து துடிக்கிறீர்கள். தொழிலில் முதலீடு செய்த பணத்தைக் காணவில்லை என்றால் அழுகிறீர்கள். ஆனால் உங்களை இப்பூவுலகில் சிருஷ்டித்து நன்றாக வாழ வைத்துள்ள அந்த இறைவனுக்காகவும் அவனைக் காணவேண்டுமென்றும் என்றாவது அழுததுண்டா? அப்படியிருக்கும்போது எப்படி உங்களால் கடவுளைக் காணமுடியும்? ஒரு குழந்தை தனது தாயைக் காணவில்லையே என்று கதறி அழும்போது அந்தத் தாய் எங்கிருந்தாலும் ஓடி வந்துவிடுவதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? நீங்களும் கடவுளுக்காகக் கண்ணீர் சிந்துங்கள். அவனும் வந்து காட்சி தருவான்" என்றார்.

ஜனனத்திற்கு முன்பு நாம் எங்கிருந்தோம், மரணத்திற்குப் பின்பு நாம் எங்கே போகப் போகிறோம் என்று தெரியும்வரை நமக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கின்றது. இடைப்பட்ட வாழ்க்கையையும் அந்த சக்தியே நடத்துகிறது. இதை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும்போது அந்த சக்தியையே கண்டுகொள்ள முடியும்.

*செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கி அவதார சாந்நித்தியம்

— திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் —

ஓம் என்னும் ஓசையிலே பிறந்து வந்தேனம்மா - நான்
அம்மையப்பன் பெயர் சொல்ல விரைந்து வந்தேனம்மா
இம்மைக்கும் மறுமைக்கும் அறமுணர்ந்த ஆதி நானம்மா
செம்மை நலமளிக்க வந்த சீலமுள்ள பிள்ளையம்மா நான்.

செந்தமிழின் சுவையறிந்த சுந்தரப்பிள்ளையம்மா - நான்
பந்தமின்றிப் பாசம்பயின்ற அந்தணப் பிள்ளையம்மா
விந்தை புரிந்து வினையறுக்கும் வித்தகன் நானம்மா
மந்தை மேய்த்து மகிழ்வு கொண்ட சத்தியரும் நானேயம்மா.

சிந்தைமகிழச் சிவநாமம் செப்ப வந்தேனம்மா - நான்
அந்தமிலா ஆனந்தமதை அள்ளித் தருவேனம்மா
எந்தை பிரான் இட்டபணி தட்டாமல் ஆற்ற வந்தேன்
முந்தை வினையிலா முழுமதியாய் மூவுலகுமாள வந்தேனம்மா.

நன்மை தீமையறிந்து வந்த நாயகனம்மா - நான்
அன்பெனும் அமிர்தமதை அள்ளி வந்த ஞானியம்மா
முன்வந்த செவியைக் கொம்பு மறைக்கலாமோ அம்மா
கன்றின் பசியறிந்துவந்த பாற்பசுவும் நானேயம்மா.

முடியாட்சி போதுமென்று முடித்துவைத்தேனம்மா - நான்
குடியாட்சி செம்மையுறச் சேர்த்தாள வந்தேனம்மா
அடிமுடியில்லா ஆதியந்தமாய் வடிவொன்றுமிலா வானமம்மா நான்
தேடித் துருவியறிந்துகொண்ட செம்மைநலம் பேண வந்தேனம்மா.

கலியுகத்தின் கொடுமைகண்டு கொதித்தெழுந்தேன் - நான்
கிலியகற்றி அபயமளிக்க வெள்ளைப் பரியேறி வந்தேனம்மா
வலிமையுடன் கிலியெதிர்க்க ஞான வாளேந்தி வந்தேனம்மா
பலிதேரும் வகையறிந்த பக்குவமான ஞானியம்மா நான்.

சிறையிருக்கும் சித்தர்களை மீட்கவந்தேனம்மா - நான்
மறையோதும் வேதியரின் மானம் காக்க வந்தேனம்மா
கறைபடிந்த கல்வியின் களங்க மகற்றவே
திறமையுடன் செயலாற்றும் தீரனம்மா நான்.

*சிறிதளவு செல்வம் உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்தை வானுயரச் செய்யவந்த வாமனனும் நானம்மா
மையலெனும் மாயத்திரை நீக்கவந்த மாமனிதன் நானம்மா
தையலரின் துயர்துடைத்து நற் சேமமளிக்க வந்த சேயும் நானம்மா
ஐயமின்றி அகிலமெங்கும் அமைதி தந்தாள வந்தேனம்மா.

என்பலம் கொண்டெழுந்தேனம்மா ஏழுலகம் மேன்மையுற
ஆன்மபலம் அளிக்கவந்த அற்புத ஞானியம்மா நான்
தொன்மையிலும் புதுமையிலும் உள்ளதொன்றேயம்மா
என்றென்றும் வாழும் இயல்பான கலையை தெளிவுடனே விளக்க வந்தேனம்மா.

மனித குணம் மேம்படுமே என் வரவால்
மக்களாட்சி மகிமையுறும் என் வரவால்
புனிதம் மலரும் பூவுலகில் என் வரவால்
புரிந்துணர்வும் புலர்ந்திடுமே என் வரவால்
கனிந்த மனம் களித்திடுமே என் வரவால்
கல்மனமும் கசிந்திடுமே என் வரவால்
பனி மலையும் எரிமலையும் உறவு கொள்ளுமே
பனித்த சடைப் பாலனிவன் வரவாலே.

வாழ்த்துரைக்க வாருங்கள் அன்பான அன்னையரே
வாழும் வழிகாட்ட வந்த பாலனுக்கு நீங்களே
ஆடியெனைத் தொட்டிலிலே அகமகிழ்வீரே
ஆட்டுவித்தே உலகையாள வந்த மைந்தனையே
ஏட்டுக்கல்வி பயில வைப்பீர் அன்னையரே - எனக்கும்
பட்டுப் பீதாம்பரமும் அணிவிப்பீர் அன்னையரே
சட்டமெலாம் பயின்றுவந்த சட்டத்தரணி நானம்மா
தொட்டதெல்லாம் துலங்கவைக்கும் தூயன் நானம்மா.

அட்டதிக்கும் காவலம்மா எனக்கு நீங்களே
அணையாத ஜோதியிதை ஆதரிப்பீரே
இட்டமுடன் எனையேந்தும் அன்புக் கரங்களுக்குக்
குன்றாத வலிமை தரும் குமரன் நானம்மா
வாட்டமுற்றுவந்த தமிழன்னைக்கும் - அன்று
சுட்டபழமளித்து மகிழ்ந்த சுப்ரமண்யன்நான்
வாட்டமெல்லாம் தீர்க்க வந்தேன் இன்று
வையகமெல்லாம் துயர் தீருமே என் வரவால்.

குருவடி சரணம் திருவடி சரணம்
வையகமும் வானகமும் இணைத்து நின்ற
செய்ய பொற் பாதங்களுக்கே இவ் வாக்கம் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

கல்விக்குள் பெரிய கல்வி கடவுளைப் பற்றிய கல்வியே ஆகும். அதுவே அருட்கல்வி என்பது. உடம்பில் ஆற்றல் இருக்கும்போதே கற்றுத் தேறுங்கள் என்கிறார் திருமூலர்.

நிற்கின்ற போதேநிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின்

(நிற்கின்ற போதே- உடம்பில் உயிர் நிற்கின்ற காலத்திலே, நிலையுடையான்- அழிவற்றவனான இறைவன், நிலையுடையான் கழல்- நிலையுடையவனின் திருப்பாதங்களை கற்கின்ற, செய்மின்- அறிந்து கொள்ளும் முறைகளைப் பயிற்சி செய்யுங்கள், கற்கின்ற- கற்றுக்கொள்ளும் முறைகள்)

இந்த மானிட உடம்பில் உயிர் நிற்கும்போதே தெய்வத் திருப்பாதங்களை உணர்த்துகின்ற கல்வியை பயிலுங்கள். அப்படிச் செய்தால் கழிந்தறும் பாவங்கள்.

(பாவங்கள் கழிந்தறும்- பாவங்கள் தொலைந்து மிச்சமின்றி நீங்கிவிடும்)

சொற் குன்றல் இன்றித் தொழுமின்;

(சொற்குன்றல் இன்றிக்- சொற் சோர்வு இல்லாமல், செழுமின்- போற்றித் துதியுங்கள்)

இவ்வளவும் போதும் என வரையறை வைத்துக்கொள்ளாமல், தாராளமாக இறைவனைத் துதியுங்கள். அதாவது எத்தனை முறை போற்றினாலும் போதாது என்கிறார் அப்படித் தொழுதால்,

தொழுதபின் மற்று ஒன்று இலாத மணிவிளக்கு ஆகுமே.

(மற்றனென்றில்லாத- ஒப்பற்ற இந்த விளக்குக்கு ஒப்பாக மற்றொரு விளக்கை சொல்ல இயலாத மணிவிளக்கு, ஆமே- அயம் பிரகாசமான இரத்தின ஜோதி "ஆமே" என்பதற்கு தோன்றுமே என்று பொருள். அதாவது மூடிக்கிடந்த ஞானம் பிரகாசிக்கும்.)

ஞானம் என்பது அகக் கண்ணில் நிற்கும் இறைவனுடைய பிரகாசமேயாகும். இறைவன் அருள் கிடைக்குமேயானால் அகக்கண் ஒப்பற்ற தீபமாக சுடர்ந்து எரியும். இந்த விளக்கே அணையா விளக்கு.

நிற்கின்ற போதேநிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்து அறும் பாவங்கள்
சொற் குன்றல் இன்றித் தொழுமின்; தொழுதபின்
மற்று ஒன்று இலாத மணிவிளக்கு ஆகுமே.

ஞானிகள் உள்ளத்தில் இறைவன் கோயில் கொண்டிருக்கிறான். அவன் அருளைப் பெற்றவுடன் ஞானம் பிரகாசமாகும். ஞானம் என்பது அவன் அருளின் பரிணாமமே.

கடல் உடை யான்மலை யான்

(கடல்- கடலையடுத்த திவ்யஸ்தலங்கள், மலை- மலைத் திருப்பதிகள் உடையான், அந்த ஸ்தலங்கள் எல்லாம் அங்கே நின்று காட்சி தரும் தெய்வத்துக்கு உடைமையாகும். அதனால் "உடையான்" என்றார்.)

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர, அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அச்சாவதாரமாகப் பல வடிவங்களிலே. பல தலங்களில் எழுந்தருளியிருக் கிறான். கடலும் மலையும் தலங்களாகக் கொண்டு வீற்றிருக்கிறான்.

கடல் உடையார் மலை யான் ஐந்து பூதத்து
உடல் உடை யான்

நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களையும் உடலாகக் கொண்டு உறைகிறான். இப்படிப்பட்ட ஈசன் பல ஊழிக் காலமாக இடபத்தை வாகனமாகக் கொண்டு பக்தர்களுக்குக் காட்சி தருகிறான்.

கடல்உடை யான்மலை யான்ஐந்து பூதத்து
உடலுடையான் பல ஊழிதொறு ஊழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்

(பல- ஊழித் தோறூழி- பல ஊழி ஊழிக்காலமாக, அடல்விடை- வலிமை பொருந்திய காளையாகிய இடப வாகனத்தில் ஏறும்- ஏறி வீற்றிருக்கும் அமரர்கள் நாதன்- தேவதேவன், மகாதேவன்)

பல ஊழிக் காலமாக இடப வாகனத்தில் ஏறிவரும் சிவபெருமானே அவன் அவன் அந்தத் தேவதேவின்

இடம் உடையார் நெஞ்சத்துஇல் இருந்தானே

கடலிலும் மலையிலும் ஐம்பூதத்திலும் இடப வாகனத்திலும் இருக்கின்ற இறைவன் சிறிய இடமாகிய மனித நெஞ்சத்திலும் இருக்கிறான். எந்த மனிதர்கள் நெஞ்சத்தில்

இடம் உடையார் நெஞ்சத்துஇல் இருந்தானே

(இடம் உடையார்- ஈசனுக்கு உள்ளத்தில் இடம் தருபவர்களுக்கு) அவன் வந்து உட்கார எவர் நெஞ்சில் இடம் இருக்கிறதோ அங்கே அவன் வந்து அமர்ந்துகொள்வான். சந்தேகமில்லை என்று ஆனந்தக் களிப்பில் துள்ளிப் பாடுகிறார் திருமூலர்.

கடலிலும் மலையிலும் பஞ்சபூதங்களிலும் அவனுக்கு வசதியான இடம் இருக்கிறது. அப்படிப்பட்ட இறைவன் மனித நெஞ்சத்திலும் இடம் தேடுகிறான். எந்த நெஞ்சிலாவது இடமிருந்தால் உடனே அங்கு வந்து அமர்ந்து கொள்கிறான். நாம் தடை செய்யாமல் இருப் பதே அவனுக்கு நாம் செய்யவேண்டியது. இது அவருடைய அருட்தன்மை என்கிறார் மூலர்.

கடலுடை யான்மலை யான் ஐந்து பூதத்து
உடலுடை யான்பல ஊழிதொறு ஊழி
அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்
இடம் முடை யார் நெஞ்சத்துஇல் இருந் தானே.

"வெள்ளத்தின் உள்ளாறும்
வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்"

எனவும்,

"உள்ளுவார் உள்ளத்து
உளன் கண்டாய்"

எனவும் வைஷ்ணவ முதலாழ்வார்கள் பாடியது இதுவே.

*உன்னால் முடியும் என்று நம்பு. முயற்சிக்கும் அனைத்திலும் வெற்றியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது உண்மைக் கல்வி, எது உண்மை அறிவு என்பதை மேலும் விளக்குகிறார் திருமூலர்.

தத்துவ ஞானத்தை "கணக்கு" என்ற சொல்லால் குறிப்பது சித்தர்கள் மரபு. "கணக்"கை அறிதல் என்றால் தத்துவங்களை ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதல் என்று பொருள் வடமொழியில் இதை "ஸாங்கயம்" என்பர். திருமூலர் பாடுகிறார்.

கணக்கு அறிந் தார்க்கு அன்றிக் காணஒண் ணாது;

(கணக்கு- தத்துவங்கள் இயல்பு)

உலகின் தன்மைகளையும் இந்த உடலின் தன்மைகளையும் அறிந்தவர்களே தத்துவத்தைக் கண்டவர்கள். இவர்கள்தான் நித்தியமான உண்மைப் பொருளைக் காண முடியும்.

கணக்கு அறிந் தார்க்கு அன்றிக் கைகூடா காட்சி

(காட்சி- தரிசன ஞானம்)

தத்துவங்களை பகுத்து அறிந்தவர்களுக்குத்தான் தரிசனம் ஞானம் கைகூடும். கணக்கை அறிந்து உண்மையைக் கண்டு, அதனை அணுகுவதற்காக நிற்கின்ற கல்வியை பெற்றவர்களே "கற்றவர்கள்" என்று அழைக்கத் தகுதியுடையவர்கள்.

கணக்கு அறிந்து உண்மையைக் கண்டு அண்டம் நிற்கும்
கணக்கு அறிந் தார்கல்வி கற்றுஅறிந் தாரே.

(அண்ட- அணுகுவதற்கு, அண்டநிற்கும் கணக்கு- உண்மையை அடைவதற்கு என்று அமைந்துள்ள கல்வி அதை அறிந்தவர்களே கற்றறிந்தார்- கல்வி பெற்றவர்கள்)

தத்துவங்களின் இயல்பை அறிந்து மெய்ப்பொருளை அடைவதற்குரிய கணக்கை கற்றவர்களே மெய்க்கல்வியைப் பெற்றவர்கள் என்கிறார் திருமூலர்.

கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் காண ஒண்ணாது;
கணக்கறிந் தார்களின்றிக் கைகூடா காட்சி
கணக்கு அறிந்து உண்மையைக் கண்டு அண்டம் நிற்கும்
கணக்கறிந்தார் கல்வி கற்று அறிந்தாரே.

இத்தகைய மெய்ப்பொருள் அறிவு இல்லாதவர்களோடு உறவுகொள்வதே தகாது என்று கூறுகிறார். ஒரு தந்தை மகனுக்கு எடுத்துச் சொல்வதைப்போல் கூறுகிறார்.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன்அன்று

(மூடர்சொல்- மூடர்களுடைய பேச்சைக் கேட்கக், கடனன்று- கேட்பது முறை இல்லை)

கல்லாத மூடர்க்குக் கல்லாதவர் நல்லராம்

(கல்லாத மூடர்க்கு- கல்லாத மூடரைக் காட்டிலும் கல்லாதார்- ஒன்றுமே படிக்காத மக்கள் நல்லாராம்- மேலானவர்களாம்.)

படித்தும் மெய்யறிவை அடையாதவர்கள் மூடர்களே ஆவார்கள். இத்தகைய மூடர்களைக் காட்டிலும் கல்லாதார் அதாவது படிப்பு அறிவு இல்லாதவர்கள் மேலானவர்கள் ஆவர்.

*எதிர்காலம் உள்ளங்கை ரேகையில் இல்லை. அது உன் உள்ளத்தில் உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாதார் மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்

மெய்யறிவாகிய கருத்தை அறியாதவர்கள்தான் "கல்லாத மூடர்" ஆகவே

கல்லாத மூடர்

கருத்தறி யாரே!

(கருத்து- மெய்ப்பொருளின் நிலை)

மெய்யறிவு என்பதும் மெய்யுணர்வு என்பதும் இறைவனைப் பற்றிய கல்வியே. இந்தக் கல்வியை கற்காத மூடர்களின் உறவே கேடுவிளைவிப்பதாகும். அவர்களுடைய உறவைக் காட்டிலும் எந்தவிதமான படிப்பும் இல்லாத மக்களின் உறவே மேலானதாகும். இத்தகை மூடர்களின் தொடர்பு வேண்டாம் மகனே என்கிறார்.

படிப்படியாக தமது நல்லுரையைப் பேரன்புடன் முனிவர் எடுத்தோதுகிறார்.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக்கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே.

(தொடரும்...

## தெல்லிநகரின் புண்ணியப் பேறிவர்

துர்க்கையின் கடாட்சமதில் திளைத்தவரே அன்னை
தங்கம்மா அப்பாக்குட்டியாம்,
தெல்லிநகர் தவம்செய்த புண்ணியப் பேறிவர்
தேவரும் வாழ்த்தி மகிழ்வர்,
சொர்க்கமாய் ஆலயம் திகழ இவர்காரணம்
சுந்தரக் கோயில் அதுவே,
சோபிக்க நாற்றிசைக் கோபுர அழகோ
சொல்லுந் தரமன்று காண்,
அர்த்தமுள்ள இந்துமதம் கூறுவது போலவே
அன்னையே ஒளிவிளக்கு,
அற்புதம் அதிசயம் அட்சயம் மேவிய
அறமான ஆலயமே,
கற்பகமே அன்னை கலாநிதி தங்கம்மா
காசினியின் திருமகள்
கலைமகள் அலைமகள் மலைமகளாகவே
காப்பாற்றினார் இந்த மண்ணை.

-கே.எஸ். சிவஞானராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனி னதனி னிலன்.**

**பொருள் :** எவன் எவ்வெப்பொருளில் பற்றை ஒழித்தானோ அவனுக்கு அவ்வப்பொருள்களால் துன்பம் உண்டாவதில்லை. (341)

**வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல.**

**பொருள் :** துறந்தவர் அடையும் இன்பங்கள் பல; அவைகளை அடைய விரும்புபவன் அவ்வின்பங்களை அனுபவிக்கக் காலம் இருக்கும்படி விரைவிலே துறத்தல் வேண்டும். (342)


---

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

### திங்கள் வணக்கம்

**கலிவிருத்தம்**



அரற்று மன்பர்க் கருள்செ யிறையவன்
அரக்க னுக்கருள் செய்தவன் என்னையும்
புரக்கு மாறடி யேன்புகழ் போற்றிடப்
புரட்டா சிதனில் புண்ணியன் நண்ணுமே 09

துப்பி சைந்த இதழ்மடத் தோகையான்
அப்பி சைந்த அணிமுடி யாண்டவன்
செப்பி சைந்து திறலுடன் என்முனம்
ஐப்ப சியெனு மாதம் அணுகவே 10

கார்த்தி கேயனைக் கண்ணுத லிற்றரு
கீர்த்தி வாய்ந்த கிருபா சமுத்திரம்
தோத்திரஞ் செய்வார் துன்பந் துடைத்திடக்
கார்த்தி கையெனும் மாதத்திற் காணுமே 11

மார்க்க நன்னெறி சென்றிடு மாந்தர்கள்
மூர்க்க மான குணத்தை முனிந்திடும்
போர்க்கு றிப்புடைப் புங்கவன் புண்ணிய
மார்க ழியினில் வருக வருகவே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/126/NEWS/2022

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org